# 2

# தேசிய உற்பத்தியும் செலவினமும்

## 2.1 பொதுநோக்கு

**பொருளாதாரம் 2012இல் பதிவு செய்யப்பட்ட 6.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 7.3 சதவீதத்தால் விரிவடைந்து உயர் வளர்ச்சிப் பாதைக்கு மீள் எழுச்சியடைந்தது.** இலங்கை சவால் மிக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சூழலுக்கு மத்தியிலும் 2013இல் இவ்வுயர் வளர்ச்சியை அடைந்தது. நாணயக் கொள்கை பரிமாற்றத்திலான பின்னடைவு 2013இல் பொருளாதாரம் நாணய நிலைமைகளின் தளர்த்தல்களின் தாக்கத்தினை முழுமையாக அனுபவிப்பதைத் தாமதப்படுத்திய போதிலும் 2012இன் முற்பகுதியிலிருந்து மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்திரப்படுத்தல் கொள்கை வழிமுறைகள் 2012 திசெம்பரிலிருந்து படிப்படியாக தளர்வடைந்து பொருளாதார வளர்ச்சிக்கான மிகவும் தூண்டுதலளிக்கும் சூழலை உருவாக்கியது. இதேவேளை, உறுதியான செலாவணி வீதத்துடன் சேர்ந்து ஒப்பீட்டு ரீதியில் குறைவான பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்களுடன் நாட்டில் நிலவிய உறுதியான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் வளர்ச்சியில் சாதகமான விளைவை ஏற்படுத்தின. மேலும், குறிப்பாக உயர்பெறுமதி கூட்டப்பட்ட நீர் மின்வலு உருவாக்கத்தின் கணிசமான விரிவாக்கத்துடன் சாதகமான வானிலை நிலைமைகளும் வளர்ச்சிக்கு உதவியிருந்தன. அத்துடன், அரசாங்கத்தின் தொடர்ச்சியான உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் பொருளாதாரச் செயற்பாட்டில் விரிவாக்கத்தை அடைவதற்குப் பங்களிப்புச் செய்தது. வெளிநாட்டுத்துறையில், முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் மந்தமான பொருளாதார வளர்ச்சி இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் எதிர்க்கணிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. எனினும், 2013இன் பின்னரைப் பகுதியில் உயர் வளர்ச்சிக்கு உதவும் இலங்கையின் முக்கிய ஏற்றுமதிச் சேருமிடங்களான ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலான படிப்படியான முன்னேற்றத்துடன் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் வெளிநாட்டுக் கேள்வியில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டிருந்தது.

**உற்பத்தி அணுகுமுறையிலிருந்தான மதிப்பீடுகளின்படி, பணிகள் துறை 2013இன் வளர்ச்சிக்கு ஆகக்கூடிய பங்களிப்பை வழங்கியது.** பணிகள் துறையினுள், போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துணைத்துறை 2013இன் வளர்ச்சிக்கு ஆகக்கூடிய வளர்ச்சியைப் பங்களிப்புச் செய்து பொருளாதாரச் செயற்பாடுகளின் விரிவாக்கத்தில் போக்குவரத்துப் பணிகளுக்கான அதிகரித்த கேள்வியைப் பிரதிபலித்தது. 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வர்த்தகச் செயற்பாடுகள் இரண்டிலுமான உயர் பெறுமதி கூட்டப்பட்ட வளர்ச்சியுடன் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகச் செயற்பாடுகளும் மேம்பாடடைந்திருந்தன. குறிப்பாக இவ்வாண்டின் பின்னரைப் பகுதியில் வெளிநாட்டுக் கேள்வியிலான அதிகரிப்பு மற்றும் உயர் உள்நாட்டு வெளியீடு என்பன வர்த்தகச் செயற்பாடுகளிலான

அட்டவணை 2.1

**நிலையான (2002) விலைகளில் கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்**


| துறை | மாற்றத்தின் வீதம் (%) | | மாற்றங்களுக்கான பங்களிப்பு (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2012(அ) | 2013(ஆ) | 2012(அ) | 2013(ஆ) | 2012(அ) | 2013(ஆ) |
| **வேளாண்மை** | **5.2** | **4.7** | **9.2** | **7.2** | **11.1** | **10.8** |
| **1. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் காடாக்கல்** | **4.7** | **4.5** | **7.3** | **6.0** | **9.7** | **9.5** |
| 1.1 தேயிலை | 0.3 | 3.6 | 0.0 | 0.5 | 0.9 | 0.9 |
| 1.2 இறப்பர் | - 6.0 | - 9.1 | - 0.2 | - 0.3 | 0.2 | 0.2 |
| 1.3 தெங்கு | 6.0 | - 16.1 | 1.0 | - 2.3 | 1.0 | 0.8 |
| 1.4 சிறு ஏற்றுமதிப் பயிர்கள் | - 5.0 | 8.5 | - 0.3 | 0.4 | 0.4 | 0.4 |
| 1.5 நெல் | - 1.6 | 19.5 | - 0.4 | 3.8 | 1.4 | 1.6 |
| 1.6 கால்நடை வளர்ப்பு | 6.4 | 6.3 | 0.8 | 0.7 | 0.8 | 0.8 |
| 1.7 ஏனைய உணவுப் பயிர்கள் | 9.1 | 4.3 | 5.1 | 2.2 | 3.7 | 3.6 |
| 1.8 பெருந்தோட்ட அபிவிருத்தி | 8.8 | 3.3 | 0.4 | 0.1 | 0.3 | 0.3 |
| 1.9 விறகு மற்றும் காடாக்கல் | 5.4 | 5.0 | 0.5 | 0.4 | 0.6 | 0.6 |
| 1.10 ஏனைய வேளாண்மைப் பயிர்கள் | 6.4 | 7.6 | 0.4 | 0.4 | 0.4 | 0.4 |
| **2. மீன்பிடி** | **9.3** | **6.2** | **1.9** | **1.2** | **1.3** | **1.3** |
| **கைத்தொழில்** | **10.3** | **9.9** | **47.5** | **41.5** | **30.4** | **31.1** |
| **3. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்** | **18.9** | **11.5** | **7.4** | **4.4** | **2.8** | **2.9** |
| **4. தயாரிப்புத்துறை** | **5.2** | **7.5** | **14.3** | **17.6** | **17.1** | **17.1** |
| 4.1 பதனிடுதல் (தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு) | 6.5 | 0.6 | 0.6 | 0.0 | 0.6 | 0.5 |
| 4.2 தொழிற்சாலைக் கைத்தொழில் | 5.2 | 7.9 | 13.0 | 16.9 | 15.5 | 15.6 |
| 4.3 குடிசைக் கைத்தொழில் | 4.6 | 5.1 | 0.8 | 0.7 | 1.0 | 1.0 |
| **5. மின்வலு வாயு மற்றும் நீர்** | **4.2** | **10.3** | **1.6** | **3.4** | **2.4** | **2.4** |
| 5.1 மின்வலு | 4.3 | 11.3 | 1.4 | 3.3 | 2.1 | 2.2 |
| 5.2 வாயு | 5.1 | 1.6 | 0.1 | 0.0 | 0.2 | 0.2 |
| 5.3 நீர் | 1.0 | 3.8 | 0.0 | 0.1 | 0.1 | 0.1 |
| **6. கட்டடவாக்கம்** | **21.6** | **14.4** | **24.2** | **16.1** | **8.1** | **8.7** |
| **பணிகள்** | **4.6** | **6.4** | **43.3** | **51.3** | **58.6** | **58.1** |
| **7. மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்** | **3.7** | **5.5** | **13.7** | **17.4** | **23.0** | **22.7** |
| 7.1 இறக்குமதி வர்த்தகம் | 1.0 | 2.9 | 1.4 | 3.2 | 8.1 | 7.8 |
| 7.2 ஏற்றுமதி வர்த்தகம் | 0.8 | 6.7 | 0.5 | 3.6 | 3.9 | 3.9 |
| 7.3 உள்நாட்டு வர்த்தகம் | 6.8 | 6.9 | 11.8 | 10.6 | 11.1 | 11.0 |
| **8. உணவகங்களும் விடுதிகளும்** | **20.2** | **22.3** | **1.9** | **2.1** | **0.7** | **0.8** |
| **9. போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்** | **6.2** | **9.4** | **14.0** | **18.5** | **14.3** | **14.6** |
| 9.1 போக்குவரத்து | 6.0 | 9.4 | 11.1 | 15.2 | 11.7 | 12.0 |
| 9.2 சரக்குக் கையாளல் - துறைமுகங்களும் வான்போக்குவரத்தும் | 5.7 | 3.1 | 0.6 | 0.3 | 0.7 | 0.7 |
| 9.3 அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் | 7.9 | 11.4 | 2.3 | 3.0 | 1.9 | 2.0 |
| **10. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துக்கள், மற்றும் ஏனையவை.** | **6.7** | **5.9** | **9.4** | **7.2** | **8.9** | **8.7** |
| **11. வதிவிட சொத்துரிமை** | **1.7** | **2.9** | **0.7** | **1.0** | **2.5** | **2.4** |
| **12. அரச பணிகள்** | **1.4** | **2.8** | **1.6** | **2.7** | **6.8** | **6.5** |
| **13. தனியார் பணிகள்** | **5.5** | **7.3** | **2.0** | **2.3** | **2.3** | **2.3** |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **6.3** | **7.3** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் | - 97.4 | - 42.1 | | | | |
| **மொத்த தேசிய உற்பத்தி** | **5.3** | **6.5** | | | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

வளர்ச்சிக்கு உதவின. பணிகள் துறையிலான விரிவாக்கம் 2012இலான வளர்ச்சியை விடக் குறைவாக விளங்கிய போதிலும் நிதியியல் பணிகளிலான வளர்ச்சியால் மேலும் உதவப்பட்டிருந்தது. இதேவேளை, கைத்தொழில் துறை உயர் வளர்ச்சி உத்வேகத்தை தொடர்ந்து பேணி 2013இல் ஆகக்கூடிய துறைவாரியான வளர்ச்சியைப் பதிவு செய்திருந்து. கைத்தொழில் துறையினுள், கட்டடவாக்கத் துணைத் துறை முன்னைய ஆண்டிலான குறிப்பிடத்தக்க உயர் விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி வீதம் மெதுவடைந்த போதிலும், 2013இல் ஒப்பீட்டு ரீதியில் உயர் வீதத்தால் தொடர்ந்து விரிவடைந்தது. தயாரிப்புத் துணைத் துறையும் இவ்வாண்டின் இரண்டாம் அரைப் பகுதியிலிருந்தான பலமான வெளிநாட்டுக் கேள்வியால் உதவப்பட்டு 2013இல் செழிப்பான வளர்ச்சியைப் பதிவு செய்தது. மின்வலு உருவாக்கத்தின் நீர்மின்வலுப் பயன்பாட்டின் உயர் பெறுமதி கூட்டலும் கைத்தொழில் துறையின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்துக்கு பங்களிப்புச் செய்தது. தெங்கு மற்றும் இறப்பர் உற்பத்தியின் வீழ்ச்சிக்கு மத்தியிலும் நெல், ஏனைய உணவுப் பயிர்கள் மற்றும் மீன்பிடித் துணைத் துறைகளிலான விரிவாக்கம் காரணமாக வேளாண்மைத் துறையிலான வளர்ச்சியானது 2013இல் தொடர்ந்தும் சாதகமாக விளங்கியது.

வரைபடம் 2.1 ஆண்டு வளர்ச்சி வீதம்




**செலவின அணுகுமுறையிலான மதிப்பீடுகளின் படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியிலான (மொ.உ.உ) வளர்ச்சி 2013இல் உண்மை நியதிகளில் நுகர்வு மற்றும் முதலீடு இரண்டிலுமான விரிவாக்கத்தால் உதவப்பட்டது.** தனியார் நுகர்வுச் செலவினத்திலான வீழ்ச்சி காரணமாக நுகர்வு வளர்ச்சி 2013இல் மெதுவடைந்த வேளையில் அரச துறை நுகர்வுச் செலவினம் முன்னைய ஆண்டைவிட உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தது. இதேவேளை, முதலீட்டுச் செயற்பாடுகள் மீதான செலவினம் கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்து அதிகரித்த முதலீட்டாளர் நம்பிக்கையைப் பிரதிபலித்தது. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளின் ஒப்பீட்டு ரீதியிலான உயர் வளர்ச்சியுடன் வெளிநாட்டுத் துறைக் கேள்வி முன்னேற்றமடைந்திருக்கையில் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் உண்மை நியதிகளில் சிறிதளவாகச் சுருக்கமடைந்து தேறிய வெளிநாட்டுக் கேள்வியில் முன்னேற்றத்துக்கு வழியமைத்தது.

**வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாயின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை சீராக்குவதன் மூலம் பெறப்படும் மொத்தத் தேசிய உற்பத்தி 2012இன் 5.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 6.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** மொத்தத் தேசிய உற்பத்தியிலான குறைந்த வளர்ச்சி சென்மதி நிலுவைகளின் வருமானக் கணக்கிலான வெளிப்பாய்ச்சல்களில் அதிகரிப்பைப் பிரதிபலித்தது. அதிகரித்த வெளிப்பாய்ச்சல் பெரும்பாலும் மத்திய வங்கி மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகளுடன் சேர்ந்து திறைசேரி முறிகள் மற்றும் அரசாங்கத்தின் நீண்ட காலக் கடன்கள் மீதான உயர்வட்டிக் கொடுப்பனவுகள் காரணமாக ஏற்பட்டது. இதேவேளை, வெளிநாட்டு ஒதுக்குகள் மற்றும் நிலையான வருமானத்தையுடைய பிணையங்கள் மீதான வட்டியிலிருந்தான மத்திய வங்கியின் வருவாய்கள் வடிவிலான உட்பாய்ச்சல்களும் பன்னாட்டுச் சந்தையில் நிலவிய குறைந்த வட்டி வீதங்கள் காரணமாக கூடியளவு மாற்றமின்றி காணப்பட்டன. இதேவேளை, பங்கிலாபங்களின் கணிசமான பகுதி வதிவற்றோரால் நாட்டில் மீள் முதலீடு செய்யப்பட்டமையால் வருமானக் கணக்கின் பங்கிலாபம் தொடர்பான வெளிப்பாய்ச்சல்களின் தாக்கத்தைக் குறைந்திருந்தது.

**தலைக்குரிய மொ.உ. உற்பத்தி 2012இல் பதிவு செய்யப்பட்ட ரூ.372,814 உடன் ஒப்பிடுகையில் 2013இல் ரூ.423,467 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.** தலைக்குரிய வருமானத்திலான 13.6 சதவீத வளர்ச்சி இவ்வாண்டில் மொ.உ.உற்பத்தியின் உள்ளடக்க விலைச் சுருக்கி 6.7 சதவீத வளர்ச்சியை மட்டும் பதிவு செய்தமையால் உண்மை வருமான மட்டங்கள் 2013இல் அதிகரித்துள்ளதை எடுத்துக்ககாட்டுகிறது. இதேவேளை, ஐ.அ. டொலர் நியதிகளிலான தலைக்குரிய மொ.உ.உற்பத்தியும் 2013இல் ஐ.அ. டொலர் 3,280 இற்கு அதிகரித்து 2016 ஆம் ஆண்டளவில் தலைக்குரிய வருமான இலக்கு ஐ.அ. டொலர் 4,000இனை அடைவதற்கு தொடர்ந்தும் பின்தொடர்ந்தது.

**நடைமுறை விலைகளில் பொருளாதாரத்தின் மொத்த வெளியீட்டின் பெறுமதியைப் பிரதிபலிக்கும் சந்தை விலைகளிலான மொ.உ. உற்பத்தி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 15.8 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 14.5 சதவீதம் கொண்ட குறைந்த வளர்ச்சியை பதிவு செய்தது.** உண்மை மொ.உ.உற்பத்தி 2013இல் உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்தமையால், சந்தை விலைகளிலான மொ.உ.உற்பத்தியிலான மெதுவடைவு மொ.உ.உற்பத்தி உள்ளடக்க விலைச் சுருக்கியால் பிரதிபலிக்கப்பட்டவாறு முழுப் பொருளாதாரத்திலுமான விலை மட்டங்களிலான மெதுவடைவால் ஏற்பட்டது. மேலும், உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதி 2013இல் ரூ.8,674 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் இது ஐ.அ.டொலர் 67 பில்லியனுக்கு சமனானதாகும்.

**உள்நாட்டுச் சேமிப்புகள் மேலும் மொ.உ.உற்பத்தியின் 20 சதவீதத்துக்கு மேம்பாடடைந்து 2012இல் அவதானிக்கப்பட்ட சாதகமான உத்வேகத்தைத் தொடர்ந்தது.** இம்மேம்பாடானது, பெரும்பாலும் கடந்த ஆண்டைப் போலவே இறக்குமதிகளிலான குறைந்த வளர்ச்சியுடன் வர்த்தக நிலுவையில் தொடர்ச்சியான முன்னேற்றத்தைப் பிரதிபலித்தது. உள்நாட்டுச் சேமிப்புகளிலான அபிவிருத்தி அரசாங்கத்தின் குறைச்சேமிப்பிலான வீழ்ச்சியுடன் சேர்ந்து தனியார் துறையிலிருந்து தோன்றியது. அரச துறையின் மீண்டெழும் செலவினத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்குப் பின்பற்றப்பட்ட வழிமுறைகள் அரசாங்கத்தின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை குறுக்கியது. 2012இனை

காட்டிலும் குறைந்த வீதத்திலாயினும் தொழிலாளர் பணவனுப்பல்களிலான தொடர்ச்சியான வளர்ச்சி காரணமாக தேசிய சேமிப்புகளும் 2013இல் மேம்பாடடைந்தன. எனினும், அதிகரித்த வெளிப்பாய்ச்சல்களுடன் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாயிலான தேய்வு தேசிய சேமிப்புகளின் வளர்ச்சியைக் குறைத்தது. இதேவேளை, வெளிநாட்டுத் துறையில் தங்கியிருக்கும் மட்டத்தைப் பிரதிபலிக்கும் மூலவள இடைவெளி 2013இல் மேலும் குறுகியது.

## 2.2 துறைவாரியான வெளியீடு, கொள்கைகள், நிறுவன ரீதியான உதவி மற்றும் பிரச்சனைகள்


### வேளாண்மை

**வேளாண்மைத்துறை 2012இல் பதிவு செய்யப்பட்ட 5.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 4.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்த வேளையில், 2013 இல் மொத்த உற்பத்தியில் 10.8 சதவீதத்திற்கு வகைகூறியது.** நெல், தேயிலை மற்றும் ஏனைய உணவுப் பயிர்கள் உள்ளிட்ட பெரும்பாலான துணைத் துறை வகைகள் இவ் வளர்ச்சிக்குச் சாதகமாகப் பங்களிப்புச் செய்திருந்தன. பெரும் போகத்திலான பயிர்ச்சேதம் காரணமாக இவ்வாண்டின் முதலரைப்பகுதியிலான மெதுவடைவின் தாக்கத்தை சமநிலைப்படுத்திய இவ்வாண்டின் பின்னரைப் பகுதியிலான அபரிதமான சிறுபோக அறுவடையினால் உதவப்பட்ட நெல்துறையில் பதிவு செய்யப்பட்ட 19.5 சதவீதம் கொண்ட பெறுமதி கூட்டல் விரிவாக்கத்தின் முக்கிய காரணமாக இவ்வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. 2013இன் மூன்றாம் காலாண்டிலான சுருக்கத்துக்கு மத்தியிலும் தேயிலை உற்பத்தி 3.6 சதவீதத்தால் விரிவடைந்து முன்னெப்போதுமில்லாத அதியுயர் வெளியீட்டைப் பதிவு செய்தது. வேளாண்மைத் துறையில் ஆகக்கூடிய பங்கினைக் கொண்டிருக்கும் ஏனைய உணவுப் பயிர்களின் துணைத்துறை இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் உயர்நிலப் பயிர்களிலான சுருக்கத்தின் முதன்மைக் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மெதுவடைந்தது. சிறு வேளாண்மைப் பயிர்கள், கால்நடை, பெருந்தோட்ட அபிவிருத்தி, விறகு மற்றும் காடாக்கல் மற்றும் ஏனைய வேளாண்மைப் பயிர்களின் துணைத் துறைகளும் வேளாண்மைத் துறையிலான வளர்ச்சியை நோக்கி சாதகமாகப் பங்களித்தது. எனினும், சாதகமற்ற வானிலை நிலைமைகள் காரணமாக இவ்வாண்டில் இறப்பர் மற்றும் தெங்கு உற்பத்தியில் சுருக்கமொன்று அவதானிக்கப்பட்டது. பாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக குறிப்பாக இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சியிலான வீழ்ச்சி காரணமாக மீன்பிடித் துணைத்துறையிலான வளர்ச்சி 6.2 சதவீத விரிவாக்கத்தைப் பதிவுசெய்து மிதமடைந்தது.

### நெல்

**பாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக இவ்வாண்டின் முற்பகுதியில் குறிப்பிடத்தக்க பயிர்ச்சேதங்களுக்கு மத்தியிலும் மொத்த நெல் உற்பத்தி 2013இல் கணிசமானளவில் வளர்ச்சியடைந்தது.** 2013இல் மொத்தத் தேசிய நெல் உற்பத்தி 2012 உடன் ஒப்பிடுகையில் 4.62 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 20 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த உற்பத்தியில், 2012/13 பெரும்போக உற்பத்தி 2.85 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 4.8 சதவீதத்திலும் 2013 சிறுபோக உற்பத்தி 1.77 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 57 சதவீதத்தாலும் அதிகரித்தது. சிறு போகத்தில் பதிவு செய்யப்பட்ட கணிசமான வளர்ச்சியானது சாதகமான வடகிழக்கு பருவக்காற்று காரணமாக நீர்த்தேக்கங்களிலான நீர் மட்டங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் 2013இல் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட அதிகரித்த நெல் கொள்வனவு விலைகளின் பகுதியளவு விளைவால் பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட விரிவாக்கமானது நெல் வேளாண்மையாளர்கள் கூடிய அளவுக்கு பயிர்செய்வதற்கு காரணமாகி இருந்தது. 2013இல் நெல் உற்பத்தியின் ஆகக்கூடிய வளர்ச்சி வடமேல் மாகாணத்திலிருந்து பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் இது 108 சதவீதமாக இருந்தது. 2012/13 பெரும்போகத்தில் பாரிய பயிர்ச்சேதங்களின் முக்கிய காரணமாக கிழக்கு மாகாணம் 2 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. 2012/13 பெரும்போகத்திலான விளைவு 2011/12இல் ஹெக்டேயருக்கான 4,444 கிலோகிறாமிலிருந்து ஹெக்டேயருக்கு 4,281 கிலோகிறாமுக்கு வீழ்ச்சியடைந்து பெரும் போகத்திலான மோசமான வானிலை நிலைமைகளின்

வரைபடம் 2.2 அரிசி: நிரம்பல் மற்றும் கேள்வி



**அட்டவணை 2.2** நெல் துறை புள்ளிவிபரங்கள்

| விடயம் | அலகு | 2012 (அ) | | | 2013 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 702 | 365 | 1,067 | 780 | 448 | 1,227 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 685 | 305 | 990 | 742 | 447 | 1,188 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 611 | 272 | 883 | 665 | 403 | 1,067 |
| உற்பத்தி | '000 மெ.தொ | 2,717 | 1,129 | 3,846 | 2,846 | 1,774 | 4,621 |
| | '000 புசல்கள் | 130,212 | 54,107 | 184,319 | 136,393 | 85,042 | 221,435 |
| விளைச்சல் (இ) | கி.கி/ எக்டேயர்கள் | 4,444 | 4,145 | 4,353 | 4,281 | 4,408 | 4,329 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. மில்லியன் | 3,720 | 1,817 | 5,537 | 3,150 | 1,196 | 4,346 |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெ.தொ | - | - | 36 | - | - | 23 |
| நெல்லிற்குச் சமமான இறக்குமதிகள் | '000 மெ.தொ | - | - | 52 | - | - | 33 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்ற அதே வேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

தாக்கத்தைப் பிரதிபலித்தது. எனினும், 2013 சிறுபோகத்திலான விளைவு இப்பருவகாலத்திலான சாதமான வானிலை நிலைமைகளின் முக்கிய காரணமாக 2012இன் ஹெக்டேயர் ஒன்றுக்கான 4,145 கிலோகிறாம்களிலிருந்து எக்டேயருக்கு 4,408 கிலோகிறாம்களுக்கு மேம்பாடடைந்தது.

**நெல் விலைகள் 2013இல் கொள்கை மாற்றங்கள் மற்றும் சந்தை எதிர்பார்ப்புக்களுக்கு பதிலிறுத்திருந்தது.** அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட அதிகரித்த நெல் கொள்வனவு விலைகளின் பகுதியளவு காரணத்தால் நெல்லின் விலைகள் 2012இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2013இன் முதலரைப்பகுதியில் சார்பு ரீதியில் தொடர்ந்து உயர்வாக விளங்கி திசெம்பர் 2012 மற்றும் சனவரி 2013இல் பலத்த மழை மற்றும் வெள்ளம் காரணமாக ஏற்பட்டிருந்து பகுதியளவு பயிர்ச்சேதங்களை பிரதிபலித்திருந்தது. எனினும், 2013 சிறு போகத்தில் நெல் உற்பத்தியிலான அபரிமித அறுவடை காரணமாக 2013இன் பின்னரைப் பகுதியில் நெல்லின் விலைகள் வீழ்ச்சியடைந்தன. மேலும், நெல் சந்தைப்படுத்தல் சபையும் 2012இன் 126,262 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 2013இல் 223,366 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்ததுடன் குறிப்பாக அறுவடை காலப்பகுதியில் நெல்லின் விலைகளை உறுதியாக வைத்திருப்பதற்கு வழிவகுத்திருந்தது.

## தேயிலை

**2013இல் தேயிலை உற்பத்தி தேயிலை பயிரிடப்படும் அனைத்து நிலங்களிலும் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளால் உதவப்பட்டு 2013இல் முன்னெப்போதுமில்லாத உயர் மட்டத்தை அடைந்திருந்தது.** இதன்படி, 2013 இல் தேயிலை உற்பத்தி 340.2 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 3.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. எனினும், 2013இல் தேயிலை உற்பத்தியிலான வளர்ச்சியானது வறட்சி காரணமாக குறைந்த விளைச்சலைக் கொண்ட 2012இன் பின்னணியிலும் மீளாய்வு செய்யப்படவேண்டும். அதிகூடிய அதிகரிப்பானது (6.8 சதவீதம்) மத்திய நிலத்தில் பயிரிடப்பட்டவற்றில் பதிவு செய்யப்பட்டதுடன் அதைத் தொடர்ந்து தாழ்நிலத்தில் பயிரிடப்பட்டவையும் (3.1 சதவீதம்) உயர் நிலத்தில் பயிரிடப்பட்டவையும் (2.6 சதவீதம்) காணப்பட்டன. மொத்த தேசிய தேயிலை உற்பத்திக்கு தாழ்நிலப் பிரதேசங்களில் பெருமளவு பயிரிடப்படும் சிறு உடமையாளர்களின் பங்களிப்பு இவ்வாண்டிலான சாதகமான வானிலை நிலைமைகள், தேயிலைக் கொழுந்துகளுக்காக செலுத்தப்பட்ட உயர் விலையால் ஊக்கமளிக்கப்பட்ட வளமாக்கிப் பாவனையிலான அதிகரிப்பு என்பவற்றால் உதவப்பட்டு 2012இன் 234 மில்லியன் கிலோகிறாம்களிலிருந்து 2013இல் 248 மில்லியன்

**அட்டவணை 2.3** வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010 = 100) (அ)

| விடயம் | 2012 (ஆ) | 2013 (இ) | மாற்றம் (%) 2012/2013 |
|---|---|---|---|
| வேளாண்மை, மீன்பிடி | 116.7 | 122.1 | 4.7 |
| 1 வேளாண்மை | 110.6 | 115.5 | 4.5 |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 109.0 | 113.0 | 3.6 |
| தேயிலை | 105.4 | 109.2 | 3.6 |
| இறப்பர் | 113.3 | 97.2 | -14.2 |
| தெங்கு | 103.8 | 88.7 | -14.5 |
| நெல் | 102.8 | 123.6 | 20.1 |
| ஏனைய பயிர்கள் | 118.2 | 125.4 | 6.1 |
| 1.2 கால்நடை வளர்ப்பு | 122.8 | 135.6 | 10.4 |
| 2 மீன்பிடி | 145.7 | 153.7 | 5.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) வருடாந்த உற்பத்தி சுட்டெண்ணின் அடிப்படை பெறுமதிக்காக பாவிக்கப்பட்ட சராசரிப் பெறுமதிகள் 1997-2000 இலிருந்து 2007-2010 இற்கு மாற்றப்பட்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

கிலோகிறாம்களுக்கு அதிகரித்தது. அதேவேளை, உயர் மற்றும் மத்திய தேயிலை பயிரிடப்படும் பிரதேசங்களிலான தேயிலை உற்பத்தியானது குறிப்பாக ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நிலவிய பலத்த மழையின் காரணமாக சிறிதளவு பாதிப்புக்குள்ளானது.

**சராசரியாக, ஆண்டு முழுவதும் கொழும்பு தேயிலை ஏலங்களில் உயர், மத்திய மற்றும் தாழ் நிலத் தேயிலையின் விலைகள் சராசரியாக 2012இல் பதிவு செய்யப்பட்ட தொடர்பான விலைகளை விட கூடியளவில் காணப்பட்டன.** சீடிசீ தேயிலை மற்றும் பச்சைத் தேயிலை போன்ற உலகளாவிய தேயிலை வகைகளின் நிரம்பல் மிகையைக் கொண்டிருந்த போதும் மரபுவழி கறுப்புத் தேயிலையின் உற்பத்தி 2013 இல் மாற்றமின்றி விளங்கியது. மிகப்பெரிய மரபுவழிக் கறுப்புத் தேயிலை ஏற்றுமதியாளரான இலங்கை, மரபுவழிக் கறுப்புத் தேயிலைக்கான பலமான கேள்வியால் நன்மையடைந்ததுடன் இது உயர் ஏல விலைகளில் பிரதிபலிக்கப்பட்டிருந்தது. உயர்நில, மத்திய நில மற்றும் தாழ்நிலத் தேயிலையின் சராசரி விலைகள் முறையே கிலோகிறாமொன்றுக்கு ரூ.406 இற்கு 7 சதவீதத்தாலும் கிலோகிறாமொன்றுக்கு ரூ.416 இற்கு 18 சதவீதத்தாலும், கிலோகிறாமொன்றுக்கு ரூ.471 இற்கு 15 சதவீதத்தாலும் அதிகரித்தன இது தேயிலை உற்பத்தியாளர்கள் உயர்கூலிகள் மற்றும் மின்வலு என்பவற்றின் விளைவாக அதிகரித்த செலவை தாங்கிக் கொள்வதற்கு இயலச் செய்திருந்தது.

## இறப்பர்

**இறப்பர் உற்பத்தி 2012உடன் ஒப்பிடுகையில் 2013இல் 130,421 மெற்றிக் தொன்களுக்கு 14.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** குறிப்பாக முதல் ஒன்பது மாதங்களில் உற்பத்தியிலான குறிப்பிடத்தக்க வீழ்ச்சியானது பால் எடுக்கும் நாட்களைக் குறைவடையச் செய்த இக்காலப்பகுதி முழுவதிலுமான பலத்த மழைவீழ்ச்சியால் பெருமளவு ஏற்பட்டதாகும். ஆகக்கூடிய வீழ்ச்சி பதிவு செய்யப்பட்ட மே, யூன் மற்றும் யூலை மாதங்களில் பாலெடுக்கும் நாட்களின் எண்ணிக்கை கணிசமானளவு விழ்ச்சியடைந்தது. எனினும், முக்கிய பயிரிடும் பிரதேசங்களில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளால் உதவப்பட்டு இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் இறப்பர் உற்பத்தி குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றமடைந்தது. இவ் வீழ்ச்சி முக்கியமாக 2013 இல் லேற்றெக்ஸ் கிறேப்பின் உற்பத்தி 15,373 மெற்றிக் தொன்களுக்கு 58 சதவீதத்தால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்ததால் ஏற்பட்டதாகும். எனினும், தட்டை இறப்பர் உற்பத்தி இவ்வாண்டின் பிற்பகுதியான அதிகரித்த உற்பத்தியின் முக்கிய காரணத்தால் 62,800 மெற்றிக் தொன்களுக்கு 6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும் இறப்பருக்கான உலகக் கேள்வி இவ்வாண்டில் மெதுவடைந்தமை விலைகளின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. பெரும்பாலும் லேற்றெக்ஸ் கிறேப் என்பதனை உள்ளடக்கிய இறப்பர் ஏற்றுமதிகள் 2013 இல் 23, 580 மெற்றிக் தொன்களுக்கு 37 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் உள்நாட்டு இறப்பர் நுகர்வுவின் பங்கு 2012இன் 72 சதவீதத்திலிருந்து (110,038 மெற்றிக்தொன்கள்) 2013இல் 82 சதவீதத்திற்கு (107,259 மெற்றிக் தொன்களுக்கு) அதிகரித்தது.

**அட்டவணை 2.4 முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்**

| வகைகள் | அலகு | 2012(அ) | 2013(ஆ) |
|---|---|---|---|
| 1. தேயிலை | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 328.4 | 340.2 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 222 | 222 |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 185 | 184 |
| 1.4 உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி | 390.89 | 418.22 |
| 1.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 392.4 | 445.83 |
| - ஏற்றுமதிகள் (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 563.94 | 623.91 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,268 | 1,558 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 280 | 263 |
| 1.8 மொ.உ.உ.இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.9 | 0.9 |
| 2. இறப்பர் | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 152.0 | 130.4 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு (ஊ) | '000 எக்டேயர்கள் | 131 | 132 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ) | '000 எக்டேயர்கள் | 104 | 107 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 136.00 | 150.00 |
| 2.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 416.61 | 376.90 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 420.74 | 389.81 |
| 2.6 மீள்நடுகை (எ)) | எக்டேயர்கள் | 2,161 | 1,782 |
| 2.7 புதிய பயிரிடுகை (எ) | எக்டேயர்கள் | 2,476 | 1,574 |
| 2.8 மொ.உ.உயின் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.2 | 0.2 |
| 3. தெங்கு | | | |
| 3.1 உற்பத்தி | காய்கள் மில் | 2,940 | 2,513 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 395 | |
| 3.3 உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 11.63 | 12.68 |
| 3.4 சராசரி விலை | | | |
| - உற்பத்தியாளர் விலை | காய்க்கு ரூபா | 21.60 | 29.60 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (ஏ) | காய்க்கு ரூபா | 28.80 | 29.36 |
| 3.5 மீள்நடுகை / கீழ்பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 4,299 | 4,541 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 4,814 | வி.கி. |
| 3.7 மொ. உ.உ.வின் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 1.0 | 0.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபம் உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தால் 2003இல் நடாத்தப்பட்ட இறப்பரின் நிலப்பரப்பு அளவீட்டை அடிப்படையாகக் கொண்டது.
(எ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்செய்கை உதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஏ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஐ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச்சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை
தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்குப் பயர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
தெங்கு அபிவிருத்தி மற்றும் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

**உலக இயற்கை இறப்பர் விலைகளிலான வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு இலங்கையில் இறப்பர் விலைகளைப் பாதித்தது.** 2013இல் கொழும்பு இறப்பர் ஏலங்களில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பர் (ஆர்எஸ்எஸ்1) மற்றும் லேற்றெக்ஸ் கிறேப் IX இன் சராசரி விலைகள் முறையே கிலோகிறாமொன்றுக்கு ரூ.377 இற்கு 10 சதவீதத்தாலும் (ஆண்டுக்காண்டு) கிலோகிறாமொன்றுக்கு ரூ.397 இற்கு 3 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. மேலும், ஆர்எஸ்எஸ்1 மற்றும் லேற்றெக்ஸ் கிறேப் IX இன் ஏற்றுமதி விலையும் முறையே கிலோகிறாமொன்றுக்கு ரூ.422 இற்கு 6 சதவீதத்தாலும் (ஆண்டுக்காண்டு) கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.377 இற்கு 7 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. இறப்பர் உற்பத்தி செய்யும் முக்கிய நாடுகளின் இயற்கை இறப்பர் நிரம்பலிலான அதிகரிப்புடன் முக்கியமாக, சீனா மற்றும் யப்பானிலுள்ள முக்கிய தயாரிப்பாளர்கள் வசமுள்ள உயர் இருப்புக்கள் இவ்விலை வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்திருந்தன.

## தெங்கு

**தெங்கு மற்றும் தெங்கு உற்பத்தியின் நிரம்பல் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்க பின்னடைவை அனுபவித்தது.** 2013இல் தெங்கு உற்பத்தி 2,513 மில்லியன் காய்களுக்கு கிட்டத்தட்ட 14.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தெங்கு உற்பத்தியிலான வீழ்ச்சி பெரும்பாலும் 2012இல் தெங்கு பயிரிடப்படும் முக்கிய பிரதேசங்களிலான குறைந்த மழைவீழ்ச்சியின் காலம் தாழ்த்திய விளைவால் ஏற்பட்டதாகும். ஆண்டு காலப்பகுதியில் தெங்கு உற்பத்தியில் கிட்டத்தட்ட 72 சதவீதம் கைத்தொழில் அல்லாத பயன்பாட்டாளர்களால் வேண்டப்படுவதால் தெங்கு உற்பத்தியிலான வீழ்ச்சி கைத்தொழில் பயன்பாட்டாளர்களை பாதித்திருந்தது. 2013இல் தேங்காய் எண்ணெய் உற்பத்தி 45,208 மெற்றிக் தொன்களுக்கு (349 மில்லியன் காய்களுக்கு சமனான) கிட்டத்தட்ட 45 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தேங்காய் எண்ணெய் உற்பத்தியிலான வீழ்ச்சி ஏனைய சமையல் எண்ணெயின் இறக்குமதிக்கு வழிவகுத்தது. அதன் விளைவாக, தேங்காய் எண்ணெய்க்கு அண்ணளவான பதிலீடான தாவர எண்ணெயின் இறக்குமதிகள், 2013 முற்பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணெய் மீதான கிலோக்கிறாம் ஒன்றுக்கான ரூ115 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வையின் மேல் நோக்கிய திருத்தத்துக்கு மத்தியிலும் 2013இல் 89,959 மெற்றிக் தொன்களுக்கு 41 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை, தேங்காய்த் துருவல் உற்பத்தியும் 2013இல் 29,200 மெற்றிக் தொன்களுக்கு (228 மில்லியன் காய்களுக்குச் சமனான) 30 சதவீதத்தால் கூர்மையாக வீழ்ச்சியடைந்தது. தேங்காயின் பண்ணை விலையிலான அதிகரிப்புடன் சேர்ந்து தெங்கு நிரம்பலின் பற்றாக்குறை தேங்காய்த்துருவல் கைத்தொழிலின் உற்பத்திச் செலவை உயர்த்தியிருந்ததுடன் இவ்வாண்டில் தேங்காயத்துருவல் ஏற்றுமதிகளில் பாரிய வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. 2013இல் தேங்காய்த் துருவலின் ஏற்றுமதிகள் 2012உடன் ஒப்பிடுகையில் 28,202 மெற்றிக் தொன்களுக்கு 30 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும், 2013இல் தேங்காய் பால்மா, களி மற்றும் பால் உற்பத்தியில் வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டது. தெங்கு உள்ளீட்டை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள் ஏற்றுமதிச் சாத்தியப்பாட்டை கொண்டிருப்பதால் இவற்றின் வளர்ச்சி உத்வேகத்தைப் பேணல் அத்தியாவசியமாகும்.

**குறைந்த தெங்கு உற்பத்தி மற்றும் தெங்கு உள்ளீட்டை அடிப்படையாகக் கொண்ட பொருட்களைக் தயாரிப்போர்களுக்கிடையேயான அதிகரித்த போட்டி காரணமாக 2013இல் தெங்கு விலைகள் உறுதியாக அதிகரித்தன.** தெங்கின் குறைந்த உற்பத்தியானது 2013இல் உலர்த்திய தேங்காய், தேங்காய் எண்ணெய் மற்றும் தேங்காய் துருவலின் விலைகளை அதிகரிக்கச் செய்தன. தெங்கு நிரம்பலிலான மேலதிக வீழ்ச்சியுடன் தெங்கின் விலைகள் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் கூடிய விரைவில் அதிகரித்தன. தேங்காயிக் சராசரி ஏலவிலை 2012இல் காய் ஒன்றுக்கான ரூ.22.95 இலிருந்து 2013இல் காய் ஒன்றுக்கு ரூ.32.64 இற்கு அதிகரித்ததுடன் தேங்காயின் சராசரிச் சில்லறை விலையும் 2012 இல் காயொன்றுக்கான ரூ.34.56 இலிருந்து 2013 இல் காயொன்றுக்கு ரூ.43.16 இற்கு அதிகரித்தது. உலர்த்திய தேங்காய் விலைகளிலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் பெருமளவு காரணத்தால் தேங்காய் எண்ணெயின் சராசரி விலை 2012இன் லீற்றருக்கான ரூ.224 இலிருந்து 2013 இல் லீற்றருக்கு ரூ.258 இற்கு அதிகரித்தது. கொழும்பு தெங்கு ஏலத்தில் உலர்த்திய தேங்காயின் சராசரி விலையும் 2012இன் கிலோகிறாமுக்கான ரூ.173.19 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.239.05 இற்கு அதிகரித்தது. தேங்காய்த்துருவலின் விலைகளிலான அதிகரிப்புக்கு மத்தியிலும் தேங்காய்த்துருவலின் சராசரி ஏற்றுமதி விலை 2012இன் கிலோகிறாமுக்கான ஐக்கிய அமெரிக்க டொலர் 1.65 இலிருந்து 2013இல் கிலோக்கிறாமொன்றுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 1.55இற்கு வீழ்ச்சியடைந்து 2013இல் தேங்காயத் துருவல் உற்பத்தியாளர்களின் இலாப மட்டங்களில் சுருக்கத்தைப் பிரதிபலித்திருந்தது.

## சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

**சிறு ஏற்றுமதிப் பயிர்களின் செயலாற்றம் இவ்வாண்டில் மீள் எழுச்சி அடைந்திருந்தது.** கறுவா, மிளகு, கராம்பு, கொக்கோ, பாக்கு, சாதிக்காய், வெற்றிலை மற்றும் முந்திரிப்பருப்பின் உற்பத்தி இவ்வாண்டில் வளர்ச்சியைப் பதிவு செய்திருக்கையில் ஏலக்காயின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. பூ பூத்தல் மற்றும் பழுக்கும் காலப்பகுதியில் சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் அதிகரிக்கப்பட்ட பயிரிடப்பட்ட பரப்பளவுடன் சேர்ந்து உற்பத்தி அளவில் ஏற்பட்ட விரிவாக்கம் காரணமாக மிளகு உற்பத்தி 50.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து அண்மைய வரலாற்றில் அதிகூடிய உற்பத்தியை அடைந்தது. மிளகுக்கான ஏற்றுமதிக் கேள்வி இவ்வாண்டில் தொடர்ந்தும் உயர்வாக விளங்கி ஏற்றுமதியாளருக்கு நன்மையளித்தது. எனினும், மிளகு விலைகள் இவ்வாண்டில் அண்ணளவாக 12 சதவீதத்தில் வீழ்ச்சியடைந்தமையும் அவதானிக்கப்பட்டது. கராம்பு உற்பத்தியும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் 6,190 மெற்றிக் தொன்களுக்கு 54.4 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டி கராம்பு பயரிடுவோர் கராம்பின் அதிகரித்த பண்ணை விலைகளின் நன்மையைப் பெற உதவியிருந்தது. 2013இல் முந்திரிப் பருப்பின் உள்ளீட்டு உற்பத்தி அண்மைக் காலங்களில் அதிகரித்த முந்திரிப் பருப்பின் முதிர்ச்சியடைந்த நிலப்பரப்பு மற்றும் உயர் பண்ணை விலைகளால் உதவப்பட்டு 2,072 மெற்றிக் தொன்களுக்கு 3.6 சதவீதத்தால் அதிகரித்தது. கறுவா உற்பத்தியும் இவ்வாண்டில் முதிர்ச்சியடைந்த நிலப்பரப்பு அதிகரித்தமையின் பெருமளவு காரணத்தால் 2 சதவீதத்தால் சிறிதளவு அதிகரித்தது.

## ஏனைய களப் பயிர்கள்

**2013இல் ஏனைய களப் பயிர்களின் மொத்த உற்பத்தி 2012 உடன் ஒப்பிடுகையில் 968,246 மெற்றிக் தொன்களுக்கு 3.4 சதவீதத்தால் அதிகரித்தது.** இது முன்னைய ஆண்டின் தொடர்பான பருவகாலங்களுடன் ஒப்பிடுகையில் ஏனைய களப்பயிர்களின் உற்பத்தி 2012/13 பெரும்போகத்தில் 587,477 மெற்றிக்தொன்களுக்கு 3.8 சதவீதத்தால் அதிகரித்தமையினதும் 2013இன் சிறுபோகத்தில் 380,769 மெற்றிக் தொன்களுக்கு 3.1 சதவீதத்தால் அதிகரித்தமையினதும் வெளிப்பாடாகும். நீர் வழங்கல் போதிய அளவில் கிடைக்கத்தக்கதாக இருந்தமை மற்றும் உள்ளூர் பதிலீடுகளை ஊக்குவிப்பதற்காக சில பொருட்களின் இறக்குமதிகள் மீது அதிகரித்த சிறப்புப் பண்டத் தீர்வையின் தாக்கத்துடன் சேர்ந்து இலாபகரமான விலைகள் கிடைத்தமையின் முக்கிய காரணத்தால் ஏனைய களப் பயிர்கள் பயிர் செய்யப்பட்ட பரப்பளவு 2013இல் அதிகரித்திருந்தது. இதன்படி, 2013 மே, யூன் மற்றும் ஓகத்தில் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் போன்ற சில இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்ட தீர்வை அதிகரிக்கப்பட்டது. இவ்வாண்டு காலப்பகுதியில் உழுந்து, சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் மற்றும் இஞ்சி (பதனிடப்படாத) போன்ற சில பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. பெரிய வெங்காய உற்பத்தியிலான வீழ்ச்சி பலத்த மழை காரணமாக நடுகை செய்யப்பட்ட கட்டங்கள் அதுபோல் அறுவடை காலப்பகுதியில் ஏற்பட்ட சேதங்களின் முக்கிய காரணத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும், பெரிய வெங்காயத்தின் உற்பத்தியாளர் விலை இவ்வாண்டில் அதிகரித்திருந்தமை உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தியது. இதேவேளை, கௌபி, குரக்கன், சோளம், பயறு, சோயா அவரை, எள்ளு, நிலக்கடலை, வற்றாளைக் கிழங்கு மற்றும் மிளகாய் போன்ற ஏனைய களப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்தி 2013இல் அதிகரித்தது. சோளம், நிலக்கடலை மற்றும் கௌபி போன்ற பொருட்களின் தற்போதைய உள்நாட்டு வழங்கல் போன்றன நாட்டின் நுகர்வுக் கேள்வியை ஏற்கனவே விஞ்சியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, விலங்குத் தீனை உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள் மற்றும் ஏற்கனவே நிறுவப்பட்ட உணவுத் தயாரிப்பாளர்கள் முன்னேற்றமடைந்த உள்நாட்டு உள்ளீடுகளின் நிரம்பலிலிருந்து நன்மையடைவார்கள். இல்லாவிடில் இவை இறக்குமதி செய்யப்பட்டிருக்கும்.

## மரக்கறிகள்

**இடைக்கிடையே நிகழ்ந்த மோசமான வானிலை நிலைமைகளால் ஏற்படுத்தப்பட்ட அதிர்வுகளுக்கு மத்தியிலும் மரக்கறி நிரம்பலின் வளர்ச்சி உத்வேகம் 2013இலும் தொடர்ந்து இடம்பெற்றது.** 2013இல் மரக்கறி உற்பத்தி 1,091,491 மெற்றித் தொன்களுக்கு 15 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2013இல் மலைநாட்டு மரக்கறி நிரம்பல் 29 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்திருக்கையில் தாழ்நில மரக்கறி நிரம்பல் 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. 2013இல் மொத்த மரக்கறி நிரம்பலில் மலைநாட்டு நிரம்பல் 50 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செய்தது. முக்கிய பருவகாலங்களில் கோவா, கரட், பீற்றூட், முள்ளங்கி, போஞ்சி, லீக்ஸ் மற்றும் கறி மிளகாயின் விலைகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்வது அவதானிக்கப்பட்டிருந்தது. நுவரெலியா மற்றும் மாத்தளையிலிருந்தான நிரம்பலிலான முன்னேற்றம் பயிர் செய்யப்பட்ட பரப்பளவில் எந்தவித அதிகரிப்பு இல்லாதபோதிலும் பொருத்தமான வளமாக்கியின் பாவனை மற்றும் உயர் விளைச்சலைக் கொண்ட விதைகளின் பயன்பாடு

போன்ற பயிர்செய்வோரால் பின்பற்றப்பட்ட சிறந்த வேளாண்மை நடைமுறைகளைப் பிரதிபலிக்கப்பட்டது. அத்துடன், பாசன நீரைப் பெறும் வசதி, கேள்விக்கு உதவுவதற்கு நாட்டில் மரக்கறிகளின் பகிர்ந்தளிப்பு வலையமைப்பிலான முன்னேற்றம் மற்றும் அரச உதவி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வீட்டுத் தோட்டத்தின் ஊக்குவிப்புகு போன்ற ஏனைய காரணிகள் 2013இல் மரக்கறி உற்பத்தியில் செழிப்பான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்திருந்தது.

## சீனி

**ஆண்டு காலப்பகுதியில் சீனி உற்பத்தி விரைந்த முன்னேற்றத்தை அடைந்திருந்தது.** பெல்வத்தை, செவனகல மற்றும் கல்லோயா ஆகிய சீனித் தொழிற்சாலைகளில் பயிரிடப்பட்ட சீனியின் மொத்தப் பரப்பளவு 11,801 எக்டேயருக்கு 28.5 சதவீதத்தால் அதிகரித்தமையின் முக்கிய காரணமாக 2013இல் மொத்த சீனி உற்பத்தி 53,061 மெற்றிக் தொன்களுக்கு 48.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. பெல்வத்த, செவனகல மற்றும் கல் ஓயா போன்ற அனைத்து மூன்று தொழிற்சாலைகளிலும் பிழியப்பட்ட கரும்பின் அளவு 643,403 மெற்றிக் தொன்களுக்கு 49 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து, வளமாக்கிப் பயன்பாடு, பயிரிடப்பட்ட பரப்பளவின் அதிகரிப்புடன் சேர்ந்து உயர் விளைச்சலையுடைய வகைகளின் பயிர்ச்செய்கை என்பவற்றால் உதவப்பட்டு ஹெக்டேயருக்கான கரும்பின் விளைச்சலில் அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. அத்துடன், இவ்வாண்டிலான போதிய மழை வீழ்ச்சி மற்றும் கரும்பின் சராசரி உற்பத்தி விலை மெற்றிக் தொன் ஒன்றுக்கு ரூ.4,000 இற்கும் கூடுதலாக அதிகரித்தமையும் பயிர்செய்வோர் ஏனைய பயிர்களிலிருந்து சீனிப் பயிர்ச் செய்கைக்கு மீளவும் வருவதற்கு ஊக்கப்படுத்தியது. புதிய பயிரிடலின் பரப்பளவின் அளவை அதிகரித்தல், பொருத்தமான நீர்ப்பாசன முறைமைகளை வழங்கல், வேளாண்மை நிதி மற்றும் காப்புறுதித் திட்டங்களின் கிடைப்பனவு போன்றவற்றை உள்ளடக்கும் பல்வேறு வழிமுறைகளின் ஊடாக உள்நாட்டு சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் பலமான கடப்பட்டால் உதவப்பட்டு எதிர்வரும் காலப்பகுதியில் மூன்று தொழிற்சாலைகளின் உற்பத்தி தொடர்ந்து முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மீன்பிடி

**2013இல் மொத்த மீன் உற்பத்தி 512,840 மெற்றிக் தொன்களுக்கு 5.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இது கடல் மீன் உற்பத்தி 6.9 சதவீதத்தால் அதிகரித்தமையினதும் நன்னீர் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட 3 சதவீத வளர்ச்சியினதும் இணைந்த வெளிப்பாடாகும். கடல் மீன் உற்பத்தியிலான அதிகரிப்பில், கரைகடந்த மற்றும் கரையோர மீன் உற்பத்தி முறையே 11.4 சதவீதத்தாலும் 4 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்திருந்தது. ஆண்டு காலப்பகுதியில் கடல் மீன் உற்பத்தி மே மற்றும் யூனில் ஏற்பட்டிருந்த மோசமான வானிலை நிலைமைகளால் பாதிப்படைந்தது. எனினும், கடல் மீன் உற்பத்தி வட மாகாண மற்றும் கிழக்கு மாகாண மீன்பிடி பருவ காலத்தில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளுடன் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டில் மீட்சியடைந்தது. மோதலுக்குப் பின்பான காலப்பகுதியில் மொத்த மீன் உற்பத்திக்கு அனைத்து மீன்பிடிப் பிரதேசங்களின் அதிகரித்த பங்களிப்பு உட்கட்டமைப்பு மற்றும் மீன்பிடிக் கலங்களிலான மேம்பாட்டால் ஊக்கமளிக்கப்பட்டது. மொத்த கடல் மீன் உற்பத்தியில் ஆள் கடல் மீன் உற்பத்தியின் பங்கு 2012இன் 38 சதவீதத்திலிருந்து 2013இல் 40 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேநேரம், நான்கு உள்நாட்டு தொழிற்சாலைகளால் உற்பத்தி செய்யப்பட்ட தகரத்திலடைக்கக்கட்ட மீன்களின் சராசரி நாளாந்த உற்பத்தி கணிசமாக முன்னேற்றமடைந்திருந்தது. 2013இல் நன்னீர் நீர்த்தேக்கங்களிலுள்ள வளங்களில் குறைவை ஏற்படுத்திய வரட்சியின் காலம் தாழ்த்திய விளைவு காரணாக வலையைப் பயன்படுத்தி மீன்பிடித்தல் 6.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமையின் முக்கிய காரணத்தால் நன்னீர் மீன்பிடி மற்றும் அலங்கால மீன் உற்பத்தி 3 சதவீதத்தால் 66,910 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், பண்ணைகளின் விரிவாக்கம் மற்றும் சிறந்த நடைமுறைகளின் நடைமுறைப்படுத்தலின் விளைவாக நோய் பரவுவது வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டமையால் அலங்கார மீன் மற்றும் இறால்/கரையோர அலங்கார மீன் போன்ற நன்னீர் மீன் உற்பத்தியிலான துணைத் துறைகள் இவ்வாண்டில் 15.8 சதவீத வளர்ச்சியடைந்திருந்தது.

**அட்டவணை 2.5 மீன் உற்பத்தி**

'000 மெற்றித்தொன்கள்

| துணைத்துறை | 2012 (அ) | 2013 (ஆ) |
|---|---|---|
| கடல் (இ) | 417 | 446 |
| பண்ணை மீன் வளர்ப்பும் நன்னீர் மீன்பிடியும் | 69 | 67 |
| மொத்தம் | 486 | 513 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல் துறை

மூலம் : கடற்றொழில் மற்றும் நீர்வாழ் மூலவளங்கள் அமைச்சு

## கால்நடை

**பாதிக்கப்பட்ட பால்மா இறக்குமதிகளினால் எழுந்த சீரற்ற தன்மையினாலும் 2016ஆம் ஆண்டளவில் பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துகொள்வதற்கான அரசாங்கத்தின்**

**முயற்சிகளினால் 2013இல் மொத்த தேசிய பால் உற்பத்தி 16.9 சதவீத பால்மா உற்பத்தி வீழ்ச்சிக்கு எதிராக 319.8 மில்லியன் லீற்றர்களுக்கு அதிகரித்திருந்தது.** இது நுகர்வோர் கேள்வியை உள்நாட்டு பால் மாவுக்கும், திரவப் பாலுக்கும் சார்பாக மாற்றியது. குறுகிய காலத்தில் இயலளவை அதிகரிப்பதற்கு உள்ளூர் தொழிற்சாலைகள் தயாராக இல்லாததால் இத்தொழிற்சாலைகள் அதிகரித்த கேள்வியை அடைவதற்கு முழு இயலளவில் தொழிற்பட்டன. அதன்படி, பாரிய பதனிடுவோரால் சேகரிக்கப்பட்ட பால் அவற்றின் பால் சேகரிப்பை 2013இல் 200.3 மில்லியன் லீற்றர்களுக்கு 9.1 சதவீதத்தால் அதிகரித்தனர். மில்கோ பிறைவட் லிமிடெட் கம்பனியின் தீவிரமாக சூடாக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட பால் 2012இன் 3.4 மில்லியன் லீற்றரிலிருந்து 2013இல் 6.9 மில்லியன் லீற்றருக்கும் யோகட் உற்பத்தி 2012இன் 4.3 மில்லியன் லீற்றரிலிருந்து 4.8 மில்லியன் லீற்றருக்கும் அதிகரித்தது. மில்கோ மற்றும் பெல்வத்தை பால் தொழிற்சாலைகள் உள்நாட்டுச் சந்தையில் காணப்படும் உள்ளார்ந்த வளத்துக்கு இசைந்து செல்வதற்காக அவற்றின் தொழிற்சாலை இயலளவை விரிவாக்கியிருந்தன. அதிகரித்துவரும் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு பால் நிரம்பலைக் கணிசமானளவில் அதிகரிப்பதற்கு கலப்பின் கறவைப் பசுக்கள் மூலம் பாரிய பால் பண்ணைகளில் முதலீட்டை அரசாங்கம் ஊக்குவித்தது. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை பசுவொன்றுக்கு 20 லீற்றர் பால் எடுக்கும் 1,500 கலப்பின கறவைப் பசுக்களை இறக்குமதி செய்துள்ளது.

**கோழிப் பண்ணைத் துறை 2013இல் கணிசமான வளர்ச்சியை அனுபவிந்திருந்தது.** முட்டை உற்பத்தி 2013இல் 1,942 மில்லியனுக்கு 33 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருக்கையில் கோழி இறைச்சி உற்பத்தியும் 144,540 மெற்றிக் தொன்களுக்கு 5.2 சதவீதத்தால் அதிகரித்தது. இறைச்சிக்கான கோழி உற்பத்தியில் பாரிய பதனிடுபவர்களின் பங்கு, வியாபார அடையாளமுள்ள கோழி இறைச்சி மீது உச்ச விலையிலான அதிகரிப்பு, உள்நாட்டு உள்ளீடுகளுடன் கோழித்தீன் உற்பத்தியை ஊக்குவித்தல், உற்பத்தி அளவை அதிகரிப்பதற்கு மூலதனக் கருவியின் இறக்குமதிகள் மீதான வரிச் சலுகைகள், கிறான்ட் பேரன்ட் என அழைக்கப்படும் பெரிய இனக் கோழி உற்பத்தியிலான முதலீட்டு ஊக்குவிப்பு போன்ற அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட பல வழிமுறைகளால் உதவப்பட்டு 2013இல் அதிகரித்து புறோயிலர் இன முட்டையிடும் கோழிகளின் உள்நாட்டு உற்பத்தியில் கணிசமான அதிகரிப்பையம் வியாபாரக் குறியிடப்பட்ட பண்ணைத்துறை தயாரிப்பாளர்கள் மீதான வருமான வரியிலான குறைப்பையும் பிரதிபலித்தது. புறொயிலர் கோழி உற்பத்தியிலான வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் கோழி இறைச்சியின் விலைகள் 2013இல் வீழ்ச்சியடைவதை காட்டியது. இவ்வாண்டில் முட்டை உற்பத்தி கணிசமான முன்னேற்றத்தைக் காட்டியபோதிலும் முட்டைகளின் சராசரிச் சில்லறை விலை இவ்வாண்டில் முக்கியமாக உற்பத்திச் செலவு அதிகரித்ததன் காரணமாக 2012இன் முட்டையொன்றுக்கான ரூ.11 இலிருந்து 2013இல் முட்டையொன்றுக்கு ரூ.14 இற்கு அதிகரித்தது.

அட்டவணை 2.6 கால்நடை வளர்ப்புத்துறை புள்ளி விபரங்கள்

| துணைத்துறை | 2012(அ) | 2013(ஆ) |
|---|---|---|
| 1. தேசிய விலங்கு (எண்ணிக்கை) (மில்) | 1.6 | 1.5 |
| கறவைப் பசுக்கள் | 1.2 | 1.1 |
| எருமைகள் | 0.4 | 0.4 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 299.2 | 319.8 |
| பசும்பால் | 237.6 | 258.0 |
| எருமைப்பால் | 61.6 | 61.7 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்) | 30.6 | 36.5 |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ./லீற்றர்) | 48.9 | 51.4 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 1,457.1 | 1,942.2 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி('000 மெ.தொ) | 137.4 | 144.5 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : கால்நடைவளர்ப்பு அபிவிருத்தி அமைச்சு
தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

## காடாக்கல்

**இலங்கையில் 2013இல் மொத்த வனங்களின் உள்ளடக்கமானது 1,951,472 ஹெக்டேயராக காணப்பட்டது. இதில் 1,438,275 ஹெக்டேயர் பெருங்கொடிகளைக் கொண்ட வனமாகும்.** ஆண்டு காலப்பகுதியில் 863 ஹெக்டேயர் மரத்தண்டு பிரித்தெடுப்புக்காக காடழிக்கப்பட்டதுடன் 1,319 ஹெக்டேயர் மீள் காடாக்கப்பட்டது. இலங்கை வனத் திணைக்களம் பன்னாட்டு முகவர் நிலையங்களில் உதவியுடன் காட்டு வளங்களைப் பாதுகாத்தல், சிறந்த முகாமைத்துவம் மற்றும் புத்திசாலித்தனமான பயன்பாட்டின் மூலம் காலநிலை மாற்றத்துக்கெதிராக தொடர்ந்து பங்களிப்புச் செய்தது. மேலும், அவுஸ்திரேலிய உதவியால் நிதியிடப்பட்ட இலங்கை சமூகக் காடாக்கல் நிகழ்ச்சித்திட்டம் வாழ்வாதாரங்களுக்கு உதவுவதற்கு இயற்றை வளங்களின் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு பெரும்பாலும் இலங்கையின் உலர் மற்றும் இடைநிலை வலயங்களின் 15 மாவட்டங்களில் அதன் தொழிற்பாட்டை 2013இல் ஆரம்பித்தது. வனத் திணைக்களம் உலகப் பிரசித்தி பெற்ற மரபுவழி இடங்களான சிங்கராச காட்டுப்பகுதி மற்றும் நக்கிள்ஸ் காட்டுப் பகுதியின் முகாமைத்துவத்துக்காக ரூ. 20 மில்லியன் கொண்ட தொகையைச் செலவழித்ததுடன் மேலும் ரூ. 15 மில்லியன் சூழலுடன் இசைந்த சுற்றுலா இடங்களை பேணுவதற்கு செலவழித்திருந்தது.

## வேளாண்மைக் கொள்கைகள் மற்றும் நிறுவன ரீதியிலான உதவி

**நாட்டின் வேளாண்மைக் கொள்கை நாட்டின் உணவுப் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிப்பதிலும், வேளாண்மை ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் அதேவேளை இறக்குமதிச் செலவனித்தைக் குறைப்பதிலும் தொடர்ந்து கவனம் செலுத்தியது.** வடக்கு, கிழக்கு, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலுள்ள உயர் வலயங்களில் பாசன நீரை வழங்குவதற்கு மொறககந்த, உமா ஓயா, தெதுறு ஓயா, றம்புக்கன் ஓயா போன்ற தற்போது நடைமுறையிலிருக்கும் பாரிய நீர்ப்பாசனச் செயற்றிட்டங்கள் 2013இல் தொடர்ந்து இடம்பெற்றது. வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் பாசன நீர் அதுபோல் குடிநீர் வசதியை மேலும் பூர்த்தி செய்வதற்கு மொறககந்த மற்றும் இரணைமடு நீர்த்தேக்கங்களை இணைக்கும் வட மத்திய கால்வாய் என அழைக்கப்படும் கால்வாயை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதேவேளை, அரச வளமாக்கி உதவித்திட்டம் தொடர்ந்து இடம்பெற்றதுடன் 2013இல் ரூ.19.7 பில்லியன் செலவிலான உதவுதொகையில் 418,964 மெற்றிக்தொன் நெல் வளமாக்கி மற்றும் 403,000 மெற்றிக்தொன் நெல் அல்லா வளமாக்கி பகிர்ந்தளிக்கப்பட்டது. உணவுப் பொருட்கள் போன்ற உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் அதேவேளை சில உணவுப்பொருட்களின் இறக்குமதிகளைக் குறைக்கும் நோக்குடன் தெரிந்தெடுக்கப்பட்ட பண்டங்களின் இறக்குதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை அதிகரிக்கப்பட்டது. மேலும், வேளாண்மையில் பெறுமதிகூட்டலை அதிகரிப்பதற்காக நாட்டில் சீனி மற்றும் பால் உற்பத்தியை முன்னேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. புதிய மீன்பிடித் துறைமுகங்களின் நிர்மாணம் மற்றும் பல நாள் மீன்பிடிக்கலங்களை அதிகரித்தல் மற்றும் ஆழ்கடல் மீன்பிடியிலான முதலீடு ஆழ்கடல் மீன் உற்பத்தி மற்றும் மொத்த மீன் ஏற்றுமதிகளில் பங்கை ஊக்குவிப்பதற்குத் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. தேயிலையின் மீள்நடுகை மற்றும் புதிய நடுகைக்கான உதவுதொகை அதிகரிக்கப்பட்டிருக்கையில் நாட்டின் மரபு ரீதியற்ற பயிரிடும் பிரதேசங்களில் இறப்பர் மற்றும் தெங்குப் பயிர்ச்செய்கையை விரிவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதேவேளை, தற்போது பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் இருக்கும் தெரிந்தெடுக்கப்பட்ட இளம் பயிரிடுவோர்களிடையே பயன்படுத்தப்படாத கிட்டத்தட்ட 10,000 ஹெக்டேயர் நிலத்தை பகிர்ந்தளிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் விதந்துரைப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டம் தற்போது இடம்பெற்று வருகிறது.

**இலங்கை தேயிலைச் சபை மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிலையம் இத்துறையின் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திலான உபாயத்துடன் இணைந்து செல்லும் வகையில் அதன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை வெற்றிகரமாக தொடர்ந்து மேற்கொண்டது.** உலகளாவிய மட்டத்தில் தேயிலையை ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு அமைப்பை நிறுவுவதற்கு இலக்கிடப்பட்ட தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளின் ஆரம்ப அமைச்சரவை மாநாட்டை இலங்கை தேயிலைச் சபை 2013இல் கொழும்பில் நடத்தியது. வெளிநாட்டுச் சந்தைகளில் வியாபார அடையாளப் பெயர்களை ஊக்குவித்தல் போன்ற சந்தைக் கொள்கைகளை நிறைவேற்றுவதில், இலங்கை தேயிலைச் சபை 2013 - 2016 காலப்பகுதிக்காக இலங்கை கிரிக்கெட் அணிக்கான அலுவல்சார் வெளிநாட்டு அனுசரணையாளராக வருவதற்காக இலங்கை கிரிக்கெட் சபையுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டது. மேலும், இவ்வாண்டில் இலங்கைத் தேயிலையை வாங்குவோரை ஆராய்வதற்கு லத்தீன் அமெரிக்கப் பிராந்தியத்தில் இலங்கைத் தேயிலைச் சபை சிறப்பு ஊக்குவிப்புப் பிரசாரத்தையும் நடைமுறைப்படுத்தியிருக்கும் அதேவேளை தேயிலைக் கைத்தொழிலில் முதலீட்டாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை ஊக்கப்படுத்துவதற்கு “பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் வியாபார மாநாடு 2013” க்கு அனுசரணை வழங்கியது. இதேவேளை, சிறந்த வேளாண்மை மற்றும் தயாரிப்பு நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கு இலங்கை தேயிலைச் சபை அதன் உதவுதொகை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தேயிலைத் தொழிற்சாலை நவீனமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தியது. 2013 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு திருத்தியமைக்கப்பட்ட மீள் - நடுகை உதவுதொகை (ஹெக்டேயருக்கு ரூ.350,000) மற்றும் புதிய நடுகைக்கான உதவுதொகை (ஹெக்டேயருக்கு ரூ.250,000) 2013இல் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் 1,483 ஹெக்டேயர் தேயிலை மீள்நடுகையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் இவ்வாண்டில் புதிய பயிரிடுகை ரூ.388 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்டது. இதேவேளை, தேயிலை சிறு உடமையாளர் துறையில் தேயிலை உற்பத்தியை இயந்திரமயமாக்குவதற்கு ரூ.100 மில்லியன் செலவில் பயனுறுதியான நிகழ்ச்சித்திட்டம் தேயிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையால் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், தேயிலைப் பயிர்ச் செய்கைக்கு நனோ தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் களமட்டத்தில் பரிசோதனை அடிப்படையில் இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட

"மெதுவாக வெளிவிடும் வளமாக்கிகள்" தேயிலை ஆராய்ச்சி நிலையம் பயன்படுத்தியது. பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் பொருட்டு தொகை வடிவிலான ஏற்றுமதிக்கான தேயிலையின் கிலோகிறாம் ஒன்றுக்கு ரூ.10இற்கு அதிகரித்த வேளையில் 10 கிலோகிறாம்களுக்குக் குறைந்த பெறுமதிகூட்டப்பட்ட தேயிலைப் பொதிகளுக்காக கிலோகிறாம் ஒன்றுக்கு ரூ.4.50 வரி விதிக்கப்பட்டது. 2014 வரவு செலவுத்திட்டம் அனைத்து தேயிலை சிறு உடமையாளர்களுக்கும் அவர்களின் நிலங்களை தண்ணீர் மற்றும் மணல் பராமரிப்பினூடாக மேம்படுத்துவதற்கு ஆண்டுக்கொரு தடவை ஏக்கருக்கு ரூ.5,000 உதவுதொகை வழங்குவதற்கு முன்மொழிந்தது. பெருந்தோட்டக் கம்பனிகள் தொடர்பாக 8 ஆண்டு முதிர்ச்சியைக் கொண்டதொரு கொடுகடன் திட்டம் 6 சதவீத வட்டியில் மீள்நடுகை நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக வழங்க முன்மொழிந்தது.

**இறப்பரின் ஒட்டுமொத்த அபிவிருத்தி உபாயம் முக்கியமாக குறுகிய காலத்தில் சிறந்த வேளாண்மை நடைமுறைகளை ஊக்குவிப்பதனூடாக உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்துக்கு மீள்நடுகை மற்றும் புதிய நடுகையூடாக இறப்பரின் விஸ்தீரணத்தை விரிவாக்குவதற்கும் இலக்கிடப்பட்டுள்ளது.** அம்பாறை மாவட்டத்தில் 10,000 ஹெக்டேயரில் பயிரிடுவதற்கானதொரு புதிய நிகழ்ச்சித்திட்டம் 2013இல் ஆரம்பித்திருக்கையில் மரபுவழிப் பிரதேசங்களில் 1,782 ஹெக்டேயர்களில் மீள்நடுகைச் செயற்பாடுகளுக்கும் ஊக்கமளிக்கப்பட்டது. இப்புதிய பிரதேசங்களில் உள்ளார்ந்த வளம் மிக்க பயிர்செய்யும் நிலங்களை இனங்காண்பதற்கு களப் பரீட்சிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிலையம் பங்களிப்புச் செய்திருந்தது. இறப்பர் பால் எடுப்போர்களின் பாலெடுக்கும் தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்கு "நிபுணாத சௌவிய" என்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தையும் சிறு உடமையாளர்களின் தொழில்நுட்பப் பிரச்சனைகளைப் பின்பற்றுவதிலான பிரச்சனையைத் தீர்ப்பதற்கும் இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அதன் மதியாளர் குழு வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தது. பால் எடுத்தல் மற்றும் முளை பதியவைத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் அதேபோல் மழைத் தடைகளைப் பின்பற்றுவதற்கு பயிரிடுவோருக்கான பயிற்சி ஆகிய பல எண்ணிக்கையான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதன் மூலம் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் அதன் விரிவாக்கப் பணிகளைத் தொடர்ந்தது. இதேவேளை, "துறுசவிய சங்கங்கள்" இனூடாக மாவட்ட மட்டத்தில் பல எண்ணிக்கையான செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் கீழ், புதிய தொழில்நுட்பத்தின் கீழ் பொறி மற்றும் கருவியை தரப்படுத்துதல் மற்றும் இறப்பர் புகையூட்டல் அறைகளை தரமுயர்த்துதல் போன்ற செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட்டன. இலங்கை வங்கியுடன் இணைந்து துறுசவிய நிதியத்தால் ரூ.25.5 மில்லியன் கொண்ட கடன் 275 இறப்பர் உடமையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

**தேசிய தெங்கு அபிவிருத்தித் திட்டம் 2016 அளவில் 3,650 மில்லியன் காய்களை உற்பத்தி செய்வதற்கு இலக்கிட்டுள்ளது.** தெங்கு நிரம்பலிலான மெதுவான வளர்ச்சி தெங்கை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் விரிவாக்கத்துக்கு முக்கிய தடையாக இருப்பதாகத் தோன்றுகிறது. தெங்கு நிரம்பலை அதிகரிக்கும் பொருட்டு உயர் விளைச்சல் வகைகளுடன் மீள்நடுகைச் செயற்பாடுகளை பலப்படுத்தும் அதேவேளை தேசிய சராசரி தெங்கு விளைச்சலில் கணிசமான அதிகரிப்பை உறுதிப்படுத்துவதற்காக தெங்கு நிலங்களின் ஆகக் கூடிய பயன்பாட்டை மேம்படுத்துவது அத்தியாவசியமாகும். இவ்வாண்டில், இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் 2012 (பிறவுண் டுவாவ் ரோல்) மற்றும் 2013 (பிறவுண் டுவாவ் சன்ராமன்) ஆகிய இரு புதிய கலப்பின வகைகளை 2013இல் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வெளியிட்டிருக்கையில், உயர் விளைச்சலுடைய வகைகளின் நிரம்பலை அதிகரிப்பதற்கு சிலாபம் பெருந்தோட்டம் லிமிடெட் என்பவற்றுடன் ஒருங்கிணைந்து 200 ஏக்கரில் "கப்புறுவன" கலப்பு விதைகளை பெருமளவில் உற்பத்தி செய்வதற்காக கினியம பெருந்தோட்டத்தில் விதைத் தோட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மேலும், மொனராகல், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, அநுராதபுரம், பொலனறுவை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் தெங்கு பயிர்ச்செய்கையை விரிவாக்குவதற்கு தெங்கு பயிர்ச்செய்கைச் சபையால் மேற்கொள்ளப்பட்ட காணி பொருத்தமான தன்மை மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் இவ்வாண்டிலும் வெற்றிகரமாக தொடர்ந்து நடைபெற்றது. மேலும், இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிலையம் நோய் பரவுவதை ஒழிப்பதற்கும் தெங்கை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களில் பெறுமதிகூட்டலை மேம்படுத்துவதற்குமான செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. தென்னையில் வெள்ளைப் புள்ளிநோய் பரவல் 809,810 புல்லுருவிகளை விடுவித்ததன் மூலம் வெற்றிகரமாக முகாமை செய்யப்பட்டதுடன் தென்னம் வண்டுகளின் பரவலை ஒழிப்பதற்கு பயிர்செய்வோருக்கு 135,398 பூச்சிகளைக் கொல்லும் பொட்டணங்களை வழங்கியதற்கு மேலதிகமாக வேளாண்மையாளரின் காணியில்

சிவப்பு அந்துக்களைக் முகாமை செய்வதற்காக 3,000 பெர்மோன் வியால்ஸ் பகிர்ந்தளிக்கப்பட்டது. இலங்கை தென்னை ஆராய்ச்சி நிலையம் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மற்றும் ஏனைய பல வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் தென்னம் வண்டுகளில் பரவல் மற்றும் வெலிகம தென்னோலை வாடும் நோயை முகாமை செய்வதிலும் கவனம் செலுத்தியதுடன் தென்னோலை வாடும் நோய் ஏனைய பகுதிகளுக்குப் பரவாமல் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டதுடன் 2013இல் 66,065 தென்னை மரங்கள் பிடுங்கி அகற்றப்பட்டன. தூய தேங்காய் எண்ணெயைப் பிரித்தெடுத்தல், தெங்குப் பசை, தெங்குக் களி, சுவையூட்டப்பட்ட தென்னை மா, தென்னம் கயிறுக் கூட்டுக்கள் போன்ற ஏனைய பெறுமதிகூட்டப்பட்ட உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சியும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தில் நாட்டில் சமையல் எண்ணெயின் நுகர்வைப் பகுதியளவில் பூர்த்தி செய்யும் தாவர மற்றும் சோயா எண்ணெய் போன்றவற்றை நாட்டின் மாற்று சமையல் எண்ணெய் மூலங்களாக ஊக்குவிப்பது அவசியமாகும். இதன்படி, 2013இல் நாட்டில் தாவர எண்ணெய் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு வரிச் சலுகைகளின் கீழ் தாவர விதைகளை இறக்குமதி செய்வதற்குப் பல எண்ணிக்கையான பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டது. 2016 அளவில் 100,000 மெற்றிக் தொன் தாவர எண்ணெயை உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது தாவர எண்ணெய் இறக்குமதிகள் மீதான செலவினத்தைக் குறைக்க உதவும் என்பதுடன் உள்நாட்டுச் சந்தையில் தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெயின் விலைத்தளம்பல்களைக் குறைப்பதற்கும் பங்களிப்புச் செய்யும். மேலும், கைத்தொழில் பயன்பாட்டாளர்களுக்கு அதிகரித்த தேங்காயை வழங்குவதன் ஊடாக தூய தேங்காய் எண்ணெய் மற்றும் பால் மா போன்ற தெங்கு உள்ளீட்டு உற்பத்தி ஏற்றுமதிகளையும் இது ஊக்குவிக்கும்.

**2016ஆம் ஆண்டளவில் உள்நாட்டுச் சீனி உற்பத்தியை குறிப்பிடத்தக்களவில் அதிகரிப்பதற்கு 2013இல் முதலீட்டுத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.** இதன்படி, உள்நாட்டு சீனிக் கைத்தொழிலின் ஒழுங்குமுறைப்படுத்தல் சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வமைச்சின் கீழ் நிறுவப்பட்ட அரசுக்குச் சொந்தமான லங்கா சீனிக் கம்பனியிடம் அரச சீனித் தொழிற்சாலைகளை முகாமை செய்வதற்கான பணி ஒப்படைக்கப்பட்டது. இக்கம்பனி கரும்புப் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்காக அம்பாறை, மட்டக்களப்பு, கிளிநொச்சி மற்றும் அநுராதபுரத்தில் காணி இனங்காணும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. கரும்புப் பயிர்ச்செய்கையை வசதிப்படுத்தும் பொருட்டு உடவளவை, கந்தளாய் மற்றும் ஹிங்குரானவில் கரும்பு விதை உற்பத்தியை விரிவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கையில் கிளிநொச்சியில் கரும்புப் பெருந்தோட்ட கொத்தணியை நிறுவுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. இதேவேளை, சீனி ஆராய்ச்சி நிலையம் பாசன மற்றும் மழைநீர் பாசனம் ஆகிய இரண்டின் கீழ் வர்த்தகப் பயிர்ச்செய்கைக்காக எட்டு புதிய முன்னேற்றகரமான கரும்பு வகைகளை இனங்கண்டது.

**இவ்வாண்டில், வேளாண்மைத் திணைக்களத்தின் கீழ்வரும் நிறுவனங்கள் உள்நாட்டு வேளாண்மைச் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கு அவற்றின் நிகழ்ச்சித்திட்டங்களை தீவிரமாக நடைமுறைப்படுத்தின.** வளமாக்கி வீண்விரயத்தைக் குறைத்தல் மற்றும் சூழல் மற்றும் நலத் துறைத் தீங்குகளைக் குறைப்பதனூடாக வேறுபட்ட சூழல் நிலைமைகளிலிருந்து நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பொருளாதார ரீதியில் உச்சமட்ட விளைச்சலைப் பேணுவது தொடர்பான வலியுறுத்தலுடன் நெல்லுக்கான புதிய வளமாக்கி சிபார்சு 2013இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2016 அளவில் உற்பத்தியில் சுயதேவை மட்டங்களை அடையும் நோக்கில் வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், சோளம், பயறு, கடலை, எள்ளு, கௌபீ, சோயா அவரை, மிளகாய், திணை மற்றும் உழுந்து போன்ற துணைக் களப்பயிர்களின் பயிர்செய்யும் பரப்பளவை அதிகரிப்பதற்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. “இளைஞர் வேளாண் - துணிகர தொழில் முயற்சி” மற்றும் “வர்த்தகப் பண்ணை ஆகிய நிகழ்ச்சித்திட்டங்கள் ரூ.120 மில்லியன் செலவில் இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதேவேளை, அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் அரிசி விசுக்கோத்து உற்பத்திக்குப் பொருத்தமான ஐந்து புதிய அரிசி வகைகள் (ஏரி308, ஏரி306, ஏரி309, பீஜிஎம்ஏ2 மற்றும் ஏரி405) 2013இல் அறிமுகப்படுத்தியது. மேலும், அரிசி ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கொரு புதிய ஏற்றுமதித் தர அரிசி வகையும் (பீஜி1165-6) அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், வேளாண்மையாளர்கள் மரபுவழி அரிசி வகைகளை பயிர்செய்வதற்கு ஊக்கமளிக்கப்பட்டதுடன் அத்தகைய முதலாவது வகையான “பச்சைப்பெருமாள்” இன் முதலாவது தொகுதி 2014இன் முற்பகுதியில் ஏற்றுமதி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**அரசாங்கம் அண்மைக் காலங்களில் நீர்ப்பாசன வசதிகளை விரிவாக்குவதில் பாரியளவில் முதலீடு செய்தது.** 2013இல் நடைமுறையிலுள்ள நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களில்

அநேகமானவை முன்னேறியிருக்கையில், மகாவலி நீரை வடமேல் மாகாணத்துக்குத் திசைதிருப்பல் மகாகல்கமுவ குளத்தை அபிவிருத்தி செய்தல் ஆகிய இரண்டு புதிய செயற்றிட்டங்களும் நேரடியான பயனாளிகளான 16,000 குடும்பங்களை இலக்குவைத்து ஆரம்பிக்கப்பட்டன. மேலும், வேளாண்மைக் காணியின் பெரும்பகுதி இன்னும் தொடர்ந்து பயன்படுத்தப்படாத வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களை விரிவாக்க அரசாங்கம் திட்டமிடுகிறது.

**கால்நடைத்துறை முதன்மைத் திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவன ரீதியிலான உதவி 2013இல் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.** இது அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிறீசியன்/ஜேர்சி பிறீசியன் கறவைப் பசுக்களின் சேர்க்கைகளுடன் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை கடுமையாகச் சூடாக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட பால் பைக்கற்றுக்களை மாதமொன்றுக்கு 8,000 இலிருந்து 70,000இற்கு அதிகரிப்பதற்கு திட்டமிடுவதால் திரவப்பாலைப் பிரபல்யமாக்கும் தரமான பதப்படுத்தப்பட்ட பாலின் நிரம்பல் மேம்படுத்தப்படுகிறது. நாட்டில் பசும்பாலின் நிரம்பலை அதிகரிக்கும் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர பால் பண்ணைகளை ஊக்குவிப்பதற்கு மேலும் 20,000 உயர்தரமான பசுக்களை இறக்குமதி செய்வதற்கும் 2014 இற்கான வரவு செலவுத்திட்டம் முன்மொழிந்திருந்தது. இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட கலப்பினப் பசுக்களை பண்ணையாளர்களுக்கு கிடைக்கத்தக்கதாகச் செய்வதற்கும் சேகரிப்பு நிலையங்கள் மற்றும் கருவிகளை நிறுவுவதற்கும் மாட்டுத் தீனைத் தயாரிப்பதற்கும் பண்ணைத் துறைக்காக ஒரு சிறப்புக் கடன் திட்டமும் முன்மொழியப்பட்டது. விலங்குகளுக்கான நோயை இனங்காணல் மற்றும் விசாரணைப் பணிகளைப் பலப்படுத்தும் பொருட்டு புதிய மிருக வைத்தியர்களை ஆட்சேர்ப்பதற்கும் மிருக வைத்தியர்களுக்கு ரூ.7,500 மாதாந்தப் படியை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டது.

**உள்நாட்டுப் பண்ணைக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கு பல கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** இச்செயல்முறை 2013இல் முட்டையிடும் பேட்டுக் கோழிகளையும் உள்நாட்டு இறைச்சிக் கோழிகளையும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் ஊடாக இறக்குமதி செய்ததன் மூலம் பலப்படுத்தப்பட்டு 2013இல் நாளொன்றிற்கான கோழி நிரம்பல்களில் அதிகரிப்பை ஏற்படுத்தியது. இது "திவிநெகும" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2013இல் மேலும், 358,193 கோழிகள் கிராமிய சமூகத்தினரிடையே பகிர்ந்தளிக்கப்பட்டதன் மூலம் குறை நிரப்பப்பட்டது. இதேவேளை, பண்ணைக் கைத்தொழிலில் நோய் பரவுவதைத் தவிர்ப்பதற்கான தொற்றுநோய் பரவுவதை தடுப்பது தொடர்பான கடுமையாக இணங்கியொழுகுவதை வலியுறுத்துவதுடன் இணைந்து நோய் பரவுவதைக் கண்காணிப்பதற்கும் தவிர்ப்பதற்கும் மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் தொடர்ச்சியான கண்காணிப்புச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும், இத்துறையில் தற்போதைய உத்வேகத்தைத் தக்கவைப்பதற்கு பண்ணை உற்பத்தியாளர்களுக்கு கடன் திட்டத்தை வழங்குவதற்கும் 2014 வரவு செலவுத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

**பெறுமதி சேர்க்கைகளை உயர்த்துவதற்கு ஆழ்கடல் மீன் உற்பத்தி மற்றும் மீன் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன.** 2013இல், முதலீட்டுச் சபையின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கூட்டு முயற்சியின் கீழ் ஒவ்வொன்றினது நீளமும் 24 மீற்றர்களுக்குக் கூடுதலான எட்டு கடல் படிவுப் பகுதிக் கலங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2013இன் அதன் தொழிற்பாடுகளை ஆரம்பித்த டிக்கோவிற்ற மீன்பிடித் துறைமுகம் இப்பெரிய கலங்களுக்குத் தேவையான துறைமுக வசதிகளை வழங்கும். ஏற்கனவே, இருக்கும் துறைமுக வசதிகள் மற்றும் வென்னப்புவ, சிலாபம், கப்பறத்தொட்ட, தொடன்டுவ, ஹிக்கடுவ மற்றும் நீர்கொழும்பு கடலேரியிலுள்ள நங்கூரமிடும் இடத்தை அபிவிருத்தி செய்வதற்கும் 2014 வரவு செலவுத்திட்டம் முன்மொழிந்தது. ஆழ்கடல் மீன்பிடிக் கலங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் மிகப்பிந்திய தொழில்நுட்பத்துடன் ஏற்கனவேயுள்ள மீன்பிடிப் படகுகளை நவீனமயப்படுத்தல் என்பவற்றை முக்கிய இலக்காகக் கொண்டு மீன்பிடித் துறைக்கு சலுகை வீதத்தில் கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கான தியவற திறிய கடன் திட்டம் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக தொடர்ந்து செயற்பட்டது. 2012 தொடக்கம் 2013 வரைக்குமான காலப்பகுதியில் இத்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்த அளவு ரூ.2,489 மில்லியனாக விளங்கியதுடன் இக்கடன்கள் மீது அரசால் சுமக்கப்பட்ட வட்டி உதவு தொகை ரூ.53 மில்லியனாகவும் காணப்பட்டது. மேலும், மீனவர்களுக்கான எரிபொருள் உதவுதொகைத் திட்டம் தொடர்ந்து இடம்பெற்றதுடன், 2012இன் ரூ.2,970 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ரூ.1,524 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. வரவு செலவுத்திட்டம் 2014, கருவாடு மற்றும் நெத்தலி, மாசிக் கருவாடு, தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் மீன் உணவுகளின் இறக்குமதிகள் மீது உயர் தீர்வையைப் பேணுவதற்கு முன்மொழிந்துள்ளது.

**உயர் உள்ளார்ந்த வளம் கொண்ட மரபு ரீதியற்ற அலங்கார மீன் முறைமைகளை ஊக்குவிக்கும் நேரத்தில் நன்னீர் மற்றும் அலங்கார மீன்பிடியிலான உட்கட்டமைப்பு விரிவாக்கப்பட்டது.** கறுப்பு நீர் கொத்தணி இறால் பண்ணையொன்று வாகரையில் 2013 சனவரியில் திறக்கப்பட்டது. முதலாம் ஆண்டில், இச்செயற்றிட்டம் 55.6 மெற்றிக்தொன் நன்னீர் மீனை உற்பத்தி செய்ததன் மூலம் ரூ.40 மில்லியனைச் சம்பாதித்தது. ரூ.400 மில்லியன் செலவில் வட மாகாணத்தில் இரணைமடுவில் அலங்கார மீனின் அபிவிருத்திக்கான நிலையமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான செயற்றிட்டமொன்று 2013ஆம் ஆண்டு ஆரம்பமானது. இச்செயற்றிட்டம் ஏற்றுமதிகளுக்கான உயர் பெறுமதிகூட்டப்பட்ட அலங்கார மீனின் உற்பத்தியை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**ஏற்கனவே மேலே கலந்துரையாடப்பட்ட முன்மொழிவுகளுக்கு மேலதிகமாக, உயர்தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை வழங்குவதிலிருந்து பயிர்ச்சேதங்களுக்கான நட்டஈடு வழங்குதல் வரை வேளாண்மைத் துறையை மேம்படுத்துவதற்கு பல புதிய வழிமுறைகள் வரவு செலவுத்திட்டம் 2014இல் முன்மொழியப்பட்டது.** அத்தகைய வழிமுறைகளுள் ஒன்று மோசமான வானிலை நிலைமைகளால் பாதிப்படைந்த வேளாண்மையாளர்களுக்கு உதவுவதற்கு முக்கிய உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களிலுள்ள ஒவ்வொரு மாவட்டச் செயலாளர் பிரிவின் கீழும் ரூ.300 மில்லியன் கொண்ட சுழலும் நிதியத்தை நிறுவுவதலாகும். மேலும், 63 வயதிற்கும் மேற்பட்ட வேளாண்மையாளர்களுக்கு மாதாந்தம் ரூ.1,250 வழங்கும்படியானதொரு ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த முன்மொழியப்பட்டது.

## கைத்தொழில்

**கைத்தொழில் துறை 2012இல் பதிவுசெய்யப்பட்ட 10.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 9.9 சதவீதத்தால் விரிவடைந்து 2013இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 31.1 சதவீத பங்கிற்கு வகைகூறியது.** இலங்கைக்கான மேம்பாடடைந்த கேள்வி மற்றும் சாதகமான உள்நாட்டுக் கேள்வியால் உதவியளிக்கப்பட்ட கைத்தொழில் துறையினுடைய மிகப்பெரிய துணைத்துறையான தொழிற்சாலைக் கைத்தொழில் 2012இல் பதிவு செய்யப்பட்ட 5.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 7.9 சதவீதத்தால் விரிவடைந்தது. மின்வலு, வாயு மற்றும் நீா துணைத்துறை உயர்வீதத்தில் வளர்ச்சியடைந்து நீர்மின்வலு உருவாக்கத்திலான அதிகரிப்புடன் பெறுமதி கூட்டலுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது. கட்டடவாக்கம் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துணைத்துறைகள் 2012இல் பதிவு செய்யப்பட்ட உயர் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் செழிப்பான வீதத்தில் தொடர்ந்து விரிவடைந்தது. 2012உடன் ஒப்பிடுகையில் கட்டடவாக்கம் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துணைத்துறைகளிலான மெதுவடைவு 2013இல் கைத்தொழில் துறையின் பெறுமதி கூட்டலில் சிறிதளவு மெதுவடைவை விளைவித்திருந்தது.

## சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்

**ஏனைய சுரங்கமகழ்தல் துணைத் துறையில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சியின் காரணமாக சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துணைத் துறை 2012இல் பதிவு செய்யப்பட்ட 18.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 11.5 சதவீதத்தால் விரிவடைந்தது.** இத்துணைத் துறை கிறபைற், பொசுபேற்று, கனிப்பொருள் மற்றும் உப்பு உற்பத்தி போன்ற கனிப்பொருட்களுடன் சேர்ந்து சீமேந்து உற்பத்திக்கான களிமண், சுண்ணாம்புக்கல் கற்பாறைகள் மற்றும் மணல் போன்ற கட்டடவாக்கம் தொடர்பான மூலப்பொருட்களின் பிரித்தெடுப்பை உள்ளடக்குகின்றது. கட்டடவாக்கம் தொடர்பான, மூலப் பொருட்களுக்கான அதிகரித்த கேள்வி ஏனைய சுரங்கமகழ்தல் துறையினுள் வளர்ச்சிக்கான முக்கிய பங்களிப்புக் காரணியாக விளங்கியது. குறிப்பாக, வளமாக்கிக் கைத்தொழிலிருந்து வரும் சந்தைக் கேள்வியால் மீட்சியடைந்து பொசுபேற்று உற்பத்தி சிறிதளவால் விரிவடைந்தது. இதேவேளை, கிறபைற் மற்றும் கனிய மணல் வெளியீட்டிலான சுருக்கம் கனிப்பொருள் ஏற்றுமதி அளவுச் சுட்டெண்ணின் சுருக்கத்தால் பிரதிபலிக்கப்பட்டவாறு இத்துறையிலான வளர்ச்சியைக் குறைத்தது. சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துணைத் துறையில் 18.4 சதவீதத்துக்கு வகைகூறும் இரத்தினக்கல் சுரங்கமகழ்தல் துறை 2012இல் அவதானிக்கப்பட்ட 10.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10.7 சதவீதத்தால் விரிவடைந்தது. 2013 நவெம்பரிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் மணல் உள்ளிட்ட அனைத்துக் கனிப்பொருள் சுரங்கமகழ்தல் செயற்பாடுகள் மீதான கட்டணங்கள் மற்றும் அகழ்வு சம்பந்தமாக 2014 முற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஒழுங்குவிதிகள் இக்கைத்தொழிலிலான வளர்ச்சிக்கு சவாலை ஏற்படுத்தலாம். மூலப்பொருள் வடிவில் கனிப்பொருள்களின் ஏற்றுமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதிலும் இத்துறையில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு கனிப்பொருளுக்கான பெறுமதிகூட்டிய ஏற்றுமதிச் சந்தையை அபிவிருத்தி செய்வதிலும் கொள்கைகள் கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும், நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன்

மூலம் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் இத்துணைத் துறையினுள் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்யும்.

## தயாரிப்பு


### பதனிடல்

**தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு பதனிடும் கைத்தொழில்களை உள்ளடக்கியுள்ள பதனிடல் துணைத் துறை 2012இல் பதிவு செய்யப்பட்ட 6.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 0.6 சதவீதத்தால் சிறிதளவில் வளர்ச்சியடைந்தது.** வளர்ச்சியிலான இவ்மெதுவடைவு இறப்பர் மற்றும் தெங்கு உற்பத்தியிலான சுருக்கத்தால் ஏற்பட்டது. இறப்பர் உற்பத்தி சாதகமான வானிலை நிலைமைகள் காணப்படவில்லை மற்றும் உற்பத்தியாளர்களை ஊக்கமிழக்கச் செய்த விலைகளிலான குறைப்பு போன்ற முக்கிய காரணங்களால் வீழ்ச்சியடைந்தது. தெங்கு உற்பத்தி, 2012இல் நிலவிய வரட்சியின் காலம் தாழ்த்திய விளைவால் சுருக்கமடைந்தது. இவற்றின் எதிர்க்கணியத் தாக்கம் உற்பத்தியை அதிகரிப்பதற்கு உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்திய திருப்திகரமான விலைகளுடன் சேர்ந்து சாதகமான வானிலை நிலைமைகளால் உதவப்பட்ட முன்னெப்போதுமில்லாத அதிகூடிய வெளியீட்டைப் பதிவு செய்த தேயிலை உற்பத்தியிலான வளர்ச்சியால் எதிரீடு செய்யப்பட்டது. தேயிலை பதனிடல் தொழில்நுட்பத்தை அதிகரிப்பதில் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தால் எடுக்கப்பட்ட புதிய முன்னெடுப்புக்களூடாக உற்பத்தித்திறனின் சாதனையுடன் எதிர்காலத்தில் தேயிலை பதனிடல் துறை மேலும் முன்னேற்றப்படும்.

### தொழிற்சாலைக் கைத்தொழில்

**தயாரிப்புத் துணைத் துறைக்கு மிகப் பெரிய பங்களிப்பாளரான தொழிற்சாலைக் கைத்தொழிலின் வெளியீடு பெறுமதிகூட்டல் நியதிகளில் 2013இல் 7.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இச்சாதகமான வளர்ச்சி பெரும்பாலும் உலகப் பொருளாதாரச் சூழலிலான முன்னேற்றம், தகுந்த உள்நாட்டு பேரண்டப் பொருளாதார நிலைமைகள், உயர்ந்தளவான உள்நாட்டு மற்றும் சுற்றுலாக் கேள்வி மற்றும் தொடர்ந்து இடம்பெற்று வரும் பாரிய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களால் ஏற்பட்டது. ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழிலின் பெறுமதிகூட்டல்கள் உயர்வடைந்ததுடன் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தி வகை; மற்றும் இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்தி வகைகள் முறையே 8.9 சதவீதத்தாலும் 7.6 சதவீதத்தாலும் அதிகரித்தது. உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் வகை மற்றும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் வகை முறையே 7.5 சதவீதத்தாலும் 5.6 சதவீதத்தாலும் அதிகரித்து உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களிலான பெறுமதிகூட்டலுக்கு முக்கிய பங்களிப்புக் காரணிகளாக விளங்கின. இதேவேளை, உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி வகை இவ்வாண்டில் 8.8 சதவீதம் கொண்ட சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.

வரைபடம் 2.3 பெறுமதி கூட்டப்பட்ட கைத்தொழில் (2002 நிலையான விலைகளில்)





### தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

தொழிற்சாலைக் கைத்தொழிலின் வெளியீட்டை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் குறிகாட்டியான **தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது, சில துணைத் துறைகளின் விரைவான வளர்ச்சி அதேவேளை ஏனைய பல துறைகளின் மெதுவான வளர்ச்சி என்பவற்றின் பதிவு செய்தமையின் தேறிய விளைவால் 2013இல் 0.8 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பதிவு செய்தது**[1]. வெளிநாட்டுக் கேள்வி அதிகரிக்கத் தொடங்கியமை, உள்நாட்டு பெறுமதிகூட்டலை அதிகரித்தல் மற்றும் உயர் தொழில்நுட்ப உற்பத்தியைப் பேணுவதற்கு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை முன்னெடுப்புக்களுடன் சேர்ந்த சாதகமான உள்நாட்டு பேரண்டப் பொருளாதாரச் சூழல் தொழிற்சாலைக் கைத்தொழில் துறையின் செயற்பாட்டை உற்சாகப்படுத்தியது. மேலும், பெருமளவுக்கு ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் யூரோ பிராந்தியத்தில் உலகப்

1 தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 17 முக்கிய துணைத் துறைகளை உள்ளடக்கி 2010இன் தள ஆண்டாகக் கொண்டு இக்கைத்தொழில்களின் பயன்பாட்டுக்கு நிறைகள் ஒதுக்கப்பட்டு கணிக்கப்பட்டது. எனினும், பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க கணிசமான மாற்றங்கள் காணப்பட்டமை ஒப்பீட்டு ரீதியில் உயர் நிறைகளுடன் தோற்றம் பெற்றுவரும் புதிய கைத்தொழில்களை உருவாக்கிய வேளையில் மாதிரியில் ஏற்கனவேயுள்ள சில கைத்தொழில்களின் முக்கியத்துவம் வீழ்ச்சியடைந்தது. தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணுக்கான மீளாய்வில் இவ்வமைப்பு ரீதியிலான மாற்றங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

வரைபடம் 2.4 தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்




பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சியுடன் வெளிநாட்டுக் கேள்வியிலான முன்னேற்றம் வெளியீட்டிலான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது. அணியும் ஆடைகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் போன்ற ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக் கொண்ட தொழிற்சாலைக் கைத்தொழில்கள் 2013இல் தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணிலான வளர்ச்சியின் முக்கிய உந்துசக்திகளாக விளங்கின. பெருமளவில் ஏற்றுமதிச் சந்தைக்கு பொருட்களை வழங்கும் கப்பல் திருத்த வேலை மற்றும் கட்டுமானம் மற்றும் மின்கருவிகள் போன்ற தோற்றம் பெற்றுவரும் கைத்தொழில்களும் இவ்வாண்டில் உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தன. உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட பால்மா உற்பத்தி, கோதுமை அரைத்தல், பானங்கள், புகையிலை, வளமாக்கி மற்றும் உலோகமல்லாக் கனிப்பொருள்கள் 2013இல் மெதுவடைந்தன. வெதுப்பக உற்பத்திகள், பதனிடப்பட்ட இறைச்சி, இனிப்புக் கைத்தொழில், தயாரிக்கப்பட்ட உணவு, தோல் உற்பத்திகள் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், மருந்தாக்கல் பொருட்கள், அடிப்படை உலோக உற்பத்திகள் போன்ற கைத்தொழில்கள் 2013இல் சாதகமான வளர்ச்சியைக் காட்டின.

**சுட்டெண்ணில் இரண்டாவது மிகப் பெரிய துணைத் துறையான அணியும் ஆடைகள் துணைத் துறை இவ்வாண்டில் தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீட்டை அதிகரிப்பதில் முக்கிய பங்கை வகித்தது.** இதன்படி, அணியும் ஆடைகள் துணைத் துறையின் வெளியீடு 2012இன் 4.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 6.7 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது. பின்னோக்கிய பாரிய ஒருங்கிணைப்பு, நிபுணத்துவ அறிவைப் பெறுதல், பெறுமதிச் சங்கிலியின் உயர் முடிவுப்பொருட்களின் உற்பத்தி, பல்கலைக்கழகம் - கைத்தொழில் - அரச இணைப்புக்கள் மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் போட்டி விலைகளில் நம்பத்தகுந்த வழங்குநராக இலங்கையின் மதிப்பு மரபுவழிச் சந்தைகளில் உயர் வளர்ச்சி உத்வேகத்தைப் பேணுவதற்கு புடவை மற்றும் அணியும் ஆடைக் கைத்தொழிலை இயலச் செய்த வேளையில் ஏற்றுமதி முடிவிடங்களைப் ஏனைய மரபுவழியல்லாச் சந்தைகளுக்கு பன்முகப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள் அணியும் ஆடை ஏற்றுமதிகளை மேலும் அதிகரித்தது. மேலும், பங்காளாதேசத்தின் ஆடைக் கைத்தொழிலில் காணப்பட்ட உறுதியற்ற நிலைமை இலங்கையின் அணியும் ஆடைகள் துணைத் துறைக்கு புதிய வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்தது. உலக சந்தைகளில் நிலவிய பாதகமான நிலைமைகளுக்கு மத்தியிலும், இத்துணைத் துறைக்கு வழங்கப்பட்ட வரி ஊக்குவிப்புக்கள் மற்றும் இவ்வாண்டில் நிலவிய பொருத்தமான வியாபாரச் சூழல் அதேபோல் தனியார் துறைக் கைத்தொழிலாளர்களால் பின்பற்றப்பட்ட முன்மதியுடைய மற்றும் நேரம் தவறாத வழிமுறைகள் என்பவற்றால் ஆடைத் துணைத்துறை மேலும் மீளெழுச்சியுடையதாக விளங்கியது. மேலும், பின்பற்றப்பட்ட பசுமைத் தயாரிப்பு முறைகள் மற்றும் கழிவு முகாமைத்துவ முறைகள் ஆடை ஏற்றுமதியாளர்கள் பன்னாட்டுச் சந்தையில் அவர்களின் சந்தை நன்மதிப்பைக் கட்டியெழுப்ப உதவியது. இதேவேளை, புடவை உற்பத்திகள் துணைத் துறை, அணியும் ஆடைத் துறையிலிருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட புடவை உள்ளீடுகளுக்கு ஏற்பட்ட கேள்வியின் கணிசமான வளர்ச்சி மற்றும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து உள்ளூர் சீத்தைக்கான அதிகரித்த கேள்வி என்பவற்றுடன் 2013இல் 12.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் துணைத் துறை 2013இல் இக்கைத்தொழிலால் முகம் கொடுக்கப்பட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் விரிவடைந்தது.** 2013இன் பிற்பகுதியில் இறப்பர் ரயர்கள், ரியூப்புகள் மற்றும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட ஏனைய பொருட்களுக்கான பன்னாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பால் இறப்பர் உற்பத்திகளின் வெளியீடு உதவப்பட்டு 4.6 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. இறப்பர் உற்பத்திகளின் வெளியீட்டுக்குப் பாரியளவில் பங்களிப்புச் செய்த திண்ம ரயர்கள் மற்றும் காற்றடக்கிய ரயர்களின் ஏற்றுமதிகள் ஊர்திக் கைத்தொழிலிலான கூர்மையான வளர்ச்சியால் ஆதரவளிக்கப்பட்டு ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய பிராந்தியங்களின் தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீட்டின் அதிகரிப்பினாலான சாதகமான உலகளாவிய அபிவிருத்திகளால் அதிகரிக்கப்பட்டன.

மேலும், இறப்பர் கையுறைகளுக்கான வெளிநாட்டுக் கேள்வியும் 2013இல் தொடர்ந்து திருப்திகரமாக விளங்கி ஏற்றுமதிச் சந்தைக்கு கைத்தொழில், சத்திரசிகிச்சை மற்றும் வீட்டுப்பாவனைக்கான கையுறைகளின் தயாரிப்பில் வளர்ச்சியை எடுத்துக்காட்டியது. மோசமான வானிலைநிலைமைகள் காரணமாக உள்ளூர்ச் சந்தையில் இறப்பர் மூலப்பொருளுக்கான தற்காலிக பற்றாக்குறை, சூழல் மாசடைதல் கரிசனைகள் காரணமாக தொழிற்சாலை மூடப்பட்டமை மற்றும் வலுச் செலவிலான அதிகரிப்புக்கு மத்தியிலும் இச்சாதகமான அபிவிருத்திகள் ஏற்பட்டன. எனினும், மூலப்பொருட்களின் உயர் செலவு மற்றும் வலுச் செலவிலான அதிகரிப்பு இவ்வாண்டில் கைத்தொழிலின் இலாபங்களில் பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது. இதேவேளை, தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் பிரதிபலிக்கப்பட்டவாறு பிரதானமாக உள்ளூர் சந்தையை நோக்காகக் கொண்ட பிளாத்திக்குப் பொருட்களின் உற்பத்தி 2013இல் மந்தகதியில் வளர்ச்சியடைந்து இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் துணைத் துறையிலான


அட்டவணை 2.7 தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 2010 = 100

| பிரிவு (கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணுக்கான நிறையிடல் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன) | சுட்டெண் 2012 (அ) | சுட்டெண் 2013 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) |
|---|---|---|---|
| 1 உணவு உற்பத்திகள் (23.7%) | 108.5 | 105.3 | -2.9 |
| 2 குடிபானங்கள் (8.1%) | 107.4 | 103.0 | -4.1 |
| 3 புகையிலை உற்பத்திகள் (8.4%) | 99.9 | 96.7 | -3.2 |
| 4 புடவை (1.6%) | 113.9 | 128.5 | 12.8 |
| 5 அணியும் ஆடைகள் (23.1%) | 118.5 | 126.5 | 6.7 |
| 6 தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள் (0.8%) | 93.1 | 98.3 | 5.6 |
| 7 தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மர உற்பத்திகள் (0.1%) | 98.4 | 114.6 | 16.4 |
| 8 தாள் மற்றும் தாள் உற்பத்திகள் (0.1%) | 98.8 | 127.0 | 28.5 |
| 9 அச்சுப் பதிப்பு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு (0.7%) | 106.3 | 110.3 | 3.8 |
| 10 நிலக்கறி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் (2.2%) | 81.3 | 83.4 | 2.6 |
| 11 இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் (6.3%) | 77.6 | 74.1 | -4.5 |
| 12 மருந்தாக்கற் பொருட்கள், மருத்துவ இரசாயனவியல் மற்றும் தாவரவியல் உற்பத்திகள் (0.1%) | 138.8 | 185.1 | 33.4 |
| 13 இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் (10.5%) | 116.9 | 118.2 | 1.1 |
| 14 ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் (7.2%) | 117.5 | 103.2 | -12.2 |
| 15 அடிப்படை உலோகங்கள் (1.0%) | 99.0 | 100.0 | 1.1 |
| 16 பொறி மற்றும் இயந்திரம் தவிர்ந்த உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (3.8%) | 111.7 | 136.5 | 22.1 |
| 17 இலத்திரனியல் சாதனங்கள் (2.3%) | 98.4 | 107.6 | 9.4 |
| **தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்** | **108.8** | **109.6** | **0.8** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
குறிப்பு : 2013இல் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் என்பது தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் என மீளப்பெயரிடப்பட்டுள்ளது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.5 தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் உள்ளடக்கம் - 2013




ஒட்டுமொத்த வளர்ச்சியைக் குறைத்தது.

**கப்பல் கட்டுதல் மற்றும் கப்பல் திருத்த வேலைகளை முக்கியமாக உள்ளடக்கும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் துணைத்துறை 2013இல் சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இலங்கை உற்பத்திகளுக்கான கேள்வியில் ஏற்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சி பெரும்பாலும் பன்னாட்டுச் சந்தைக்கு வழங்கப்பட்ட கப்பல்களின் உயர்தரம் மற்றும் பிராந்திய வாடிக்கையாளர்களுடன் ஏற்படுத்தப்பட்ட சுமூகமான நீண்டகால உறவுகளால் ஏற்பட்டது. எனவே, பொழுதுபோக்குப் படகுகளுக்காக ஐரோப்பிய ஒன்றியப் பிராந்தியத்திலிருந்தான கேள்வியில் ஏற்பட்ட மெதுவடைவு மற்றும் குறைந்தளவிலான உலக வர்த்தகச் செயற்பாடுகள் காரணமாக ஏற்பட்ட குறைந்த கப்பல் போக்குவரத்து என்பவற்றுக்கு மத்தியிலும் இத்துறை இவ்வாண்டில் 22.1 சதவீதம் கொண்ட சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. துறைமுகங்களின் விரிவாக்கம் மற்றும் சுதந்திரமான துறைமுக வசதிகளின் அறிமுகம் மற்றும் கனமான கைத்தொழில்களுக்கு உதவுவதில் அரசாங்கத்தின் தற்போதைய கொள்கைத் தலையீடு என்பவற்றுடன் கப்பல் கட்டுதல் மற்றும் திருத்த வேலைகள் துணைத் துறை எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்தரிகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளை முழுமையாகக் கொண்டிருக்கும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தித்துணைத் துறையிலான உற்பத்தி 2013இல் மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** 2012இல் ஈரான் மீது ஐக்கிய அமெரிக்கா தடைகளை விதித்த போதிலும் இத்துணைத் துறையிலான வளர்ச்சி, முக்கியமாக ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற மாற்று மூலவளங்களிலிருந்தான தடங்கலற்ற மசகெண்ணெய் வழங்கல் காரணமாக 2013இல்

2.6 சதவீதம் கொண்ட சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. மசகெண்ணெயின் மாற்று மூலங்களுக்கான இந்நகர்வு இவ்வாண்டின் முற்பகுதியில் குறைவான இயலளவுப் பயன்பாடு மற்றும் குறைந்த வெளியீட்டு மட்டங்களுக்கு வழியமைத்தது. எனினும், இவ்வாண்டின் பிற்பகுதியில் தூய்மிக்கான மிகவும் பொருத்தமான மசகெண்ணெய் கலவை அடையாளம் காணப்பட்டமையால் பெற்றோல் மற்றும் டீசல் போன்ற உயர்முடிவுப் பொருட்களின் சுத்திகரிப்பு விளைவு மேம்பாடடைந்தது. இருந்தபோதும், நீர்மின்வலு உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை ஏற்படுத்திய சாதகமான வானிலை நிலைமைகள் வலு உருவாக்கத்திற்குத் தேவையான எரிபொருளைக் குறைத்ததுடன் இத்துணைத் துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் குறைத்தது.

**உணவுப் பொருட்கள் துணைத் துறை தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணால் பிரதிபலிக்கப்படடவாறு, 2013இல் கலப்பான செயலாற்றத்தைப் பதிவு செய்தது.** உணவுத் துணைத் துறையில் கிட்டத்தட்ட 43.7 சதவீதத்திற்கு வகைகூறும் வெதுப்பக உற்பத்திகள், சீனி, கொக்கோ, சொக்கலேட், இனிப்புப் பண்டங்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுகள் போன்ற உணவுப் பொருட்களின் வெளியீடு 2013இல் 5.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இறைச்சியின் தயாரிப்பு மற்றும் பாதுகாத்தல் 2.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இச்சாதகமான வளர்ச்சிப் போக்குகள் பெரும்பாலும் சுற்றுலாப் பயணிகளின் நுகர்விலிருந்தான கேள்வி மற்றும் சந்தைக்கு வரும் புதிய பொருட்களின் விரிவாக்கத்தால் ஏற்பட்டது. எனினும், பால் உற்பத்திகள், மா மற்றும் மா உற்பத்திகளின் வெளியீட்டு வளர்ச்சி இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்தது. இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவைப் பயன்படுத்தும் பால் உற்பத்திகளின் வெளியீடு உள்ளூர் பால் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு அரசால் விதிக்கப்படட பால்மா இறக்குமதிகள் மீதான உயர் தீர்வைகள் காரணமாக சுருக்கமடைந்தது. 2013இல் சந்தையிலிருந்து டைசையன்டியாமைட் கலந்த பால் உற்பத்திகள் நீக்கப்பட்டதிலிருந்து இந்நிலைமை மோசமானது. எனினும் உள்ளூர் பால் கைத்தொழில், பால்மா கைத்தொழிலிலான நிரம்பல் பற்றாக்குறையிலிருந்து நன்மையடைந்து இவ்வாண்டில் வளர்ச்சியைப் பதிவு செய்தது. மா மற்றும் மா உற்பத்திகள் அதிகரித்த சந்தைப் போட்டி மற்றும் பிரதான வர்த்தகப் பங்காளரால் கோதுமை மா மீது விதிக்கப்பட்ட இறக்குமதித் தடை காரணமாக இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்து ஏற்றுமதிக் கேள்வியில் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது.

**பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி 2013இல் மெதுவடைந்தது.** கலால் வரியிலான அதிகரிப்பு குடிவகை விலைகளில் அதிகரிப்பை ஏற்படுத்தியதால் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உயர் விலையுடைய வெறியக் குடிவகை உற்பத்திகளுக்கான கேள்வி குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. எனினும், சட்ட விரோத குடிவகை வழங்கல் தொடர்பான நடைமுறைப்படுத்த சுற்றிவளைப்புக்களிலான எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்த இவ்வதியச் சம்பவம் விலை குறைந்த வெறியக் குடிவகை பொருட்களுக்கான கேள்வியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதேபோல், உயர்ந்து விளங்கும் நுகர்வோர் விருப்பத்தேர்வு காரணமாக நொதியக் குடிவகையின் வெளியீடு 2013இல் அதிகரித்தது. சுத்திகரிக்கப்பட்ட கனிம நீர் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட நீரின் வெளியீடு 2013இல் வளர்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் பிரதிபலிக்கப்பட்டவாறு மென்பானங்களின் வெளியீடு இவ்வாண்டில் மெதுவடைந்தது. புகையிலை உற்பத்திகளுக்கான குறைந்த கேள்வி காரணமாக புகையிலை துணைத் துறை 2013இல் 3.2 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. சிகரெட் மீதான உயர் கலால் வரிகள் சிகரெட்டின் விலைகளை உயர்த்தியதுடன் புகையிலை நுகர்வு தொடர்பான பொதுமக்களின் நலக் கரிசனை புகையிலைக்கான கேள்வியைக் குறைத்தது.

**இரசாயனம் மற்றும் இரசாயனப் பொருட்கள் துணைத் துறையிலான உற்பத்தி இவ்வாண்டில் கலப்பான செயலாற்றத்தைக் காட்டியது.** பயிர்ச்செய்கைச் செயல்முறையில் சேதனப் பசளை பாவிப்பதை ஊக்குவிப்பதற்கான அரசின் முன்னெடுப்புக்கள் இரசாயனப் பசளைக்கான கேள்வியைக் குறைத்தது. சவர்க்காரம், அழுக்கு நீக்கி, பூச்சு மற்றும் வாணிஸ் பொருட்களும் தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் பிரதிபலிக்கப்பட்டவாறு இவ்வாண்டில் இரசாயனம் மற்றும் இரசாயனப் பொருட்கள் துணைத் துறையின் வெளியீட்டில் சுருக்கத்தை ஏற்படுத்தியது. இதன் பகுதியளவு காரணமாக சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களிலிருந்தான அதிகரித்த போட்டி விளங்கியது.

**உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகளின் வெளியீடு 2013இல் குறைந்த செயலாற்றத்தைக் காட்டியது.** தொழிற்சாலைக் கைத்தெரில் உற்பத்திச் சுட்டெண்ணில் பிரதிபலிக்கப்பட்டவாறு, களிமண்ணால் செய்யப்படும் ஓடுகள் போன்ற கட்டடவாக்கப் பொருட்களின் தயாரிப்பு இவ்வாண்டில்

சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், உயர் வலுச் செலவுகள் மற்றும் ஏற்றுமதிக் கட்டளைகளிலான மந்த நிலையால் மோசமாக பாதிக்கப்பட்டு பீங்கான் மற்றும் மட்பாண்டப் பொருட்களின் வெளியீடு மெதுவடைந்தது. மேலும், வைரங்களின் வெட்டல், பட்டைதீட்டல் மற்றும் துலக்குதலின் வெளியீடு இவ்வாண்டில் வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

**மின்கருவித் துணைத் துறையிலான உற்பத்தி குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து 2013இல் 9.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** உயர் தரம் வாய்ந்த பொருட்களுக்கான உள்ளூர் மற்றும் பன்னாட்டுக் கேள்வியிலான அதிகரிப்புடன் சேர்ந்து கட்டடத் துறையிலான அபிவிருத்திகள் இவ்வாண்டில் மின் கம்பிகள் மற்றும் ஏனைய மின்பொருட்களின் உயர் உற்பத்தியை வசதிப்படுத்தியது. அபிவிருத்தியின் ஆரம்ப நிலையிலுள்ள இத்துறை, வரி ஊக்குவிப்புக்களால் மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் வியாபார அடையாளத்தை நிறுவுவதன் மூலம் உதவப்பட்டு விரிவாக்கத்துக்கான போதிய இடைவெளியைக் கொண்டிருந்தது.

## கைத்தொழில் கொள்கைகள் மற்றும் நிறுவன ரீதியிலான உதவி

**அரசாங்கத்தின் தற்போதைய கைத்தொழில் கொள்கை, ஏற்றுமதிகளில் ஆகக்கூடிய பெறுமதிகூட்டல்களுடன் உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மை வாய்ந்த மற்றும் அறிவை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்பு கைத்தொழில் துறையில் கவனம் செலுத்தியது.** இது சம்பந்தமாக, ஆற்றல்மிக்க உள்நாட்டு மற்றும் உலகச் சூழலில் இலங்கையின் கைத்தொழில் போட்டித்தன்மையை நீடித்து நிலைத்து வைத்திருப்பதற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு அதன் உபாயத்தை மீளமைத்தது. கைத்தொழில் துறையின் தொழில்நுட்பத் தளத்தை அபிவிருத்தி செய்தல் மூலமும் பன்னாட்டு ரீதியில் போட்டித்தன்மை வாய்ந்த உயர் பெறுமதி கூட்டப்பட்ட வியாபார அடையாளமிடப்பட்ட பொருட்களின் உற்பத்தியை ஊக்கப்படுத்துவதன் மூலமும் தற்போதைய 'மூலவளத்தை அடிப்படையாகக் கொண்ட கூடிய தொழிலாளர்களை ஈடுபடுத்தும்' தயாரிப்புக் கைத்தொழிலிலிருந்து 'அறிவை அடிப்படையாகக் கொண்ட கூடிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் கைத்தொழிலாக' உருமாற்றுவதற்கு கூடிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மேலும், தொழில்நுட்பத்தைப் புகுத்துதல், பெண் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி மற்றும் கூடிய நிதி வசதிகளை உள்ளடக்குவதனூடாக சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளை அபிவிருத்தி செய்வதில் அதிகரித்த கவனம் செலுத்தப்பட்டது.

**தொடர்பான அமைச்சுகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் ஊடாக அரசாங்கம் அதன் பிரதேச கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கைகளை 2013இலும் தொடர்ந்தது.** கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவதன் மூலம் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு தனது பிராந்திய கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக இப்பிராந்தியங்களில் போதுமானதற்ற உட்கட்டமைப்புப் பிரச்சனையை முகங்கொடுக்கின்றது. கைத்தொழிலாளர்களுக்கு நிறுவுவதற்கான ஆரம்பச் செலவைக் குறைப்பதற்கு காணி, மின்வலு மற்றும் நீர், காணிக் குத்தகை வாடகை மீதான சலுகை ரீதியிலான வீதங்கள் மற்றும் ஏனைய வரி ஊக்குவிப்புகள் போன்ற பொது வசதிகளை கைத்தொழில் பேட்டைகள் வழங்கும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமைச்சு 18 மாவட்டங்களில் 27 கைத்தொழில் பேட்டைகளை நிறுவியது. 2013இல் மத்துகம கைத்தொழில் பேட்டையின் கட்டம் II தொடர்பான நிர்மாணப் பணி ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள கைத்தொழிலாளர்களுக்கு உதவுவதற்கு "வடக்கின் வசந்தம்" மற்றும் "கிழக்கின் உதயம்" இற்கு இணையாக கைத்தொழில் பேட்டைகளும் இம்மாகாணங்களில் நிறுவப்பட்டன. இதன்படி, திருகோணமலை கைத்தொழில் பேட்டையின் கட்டம் II இன் காணி அபிவிருத்தியின் 70 சதவீதம் 2013இல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கையில் மன்னார் கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்திப் பணி தொடர்ந்து இடம்பெற்றது. 2,500 தொழில் வாய்ப்புக்களை வழங்கும் மன்னார் கைத்தொழில் பேட்டையில் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு இலங்கை முதலீட்டுச் சபை ஒப்புதலளித்ததுடன் இதன் பரிசோதனை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. இதேவேளை, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு அம்பாறை கைத்தொழில் பேட்டையில் மூன்று ஆடைத் தொழிற்சாலைகளின் நிர்மாணத்தை வசதிப்படுத்தியது. மேலும், வவுனியா, மட்டக்களப்பு, பல்லேகல்ல மற்றும் முல்லைத்தீவு உள்ளடங்கலாக பல ஏனைய அமைவிடங்கள் கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளன.

**மரபுவழிக் கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு சிறிய மற்றும் நடுத்தரளவு கைத்தொழில்களின் அபிவிருத்தியூடாக பிராந்திய கைத்தொழில்மயமாக்கத்தை ஊக்குவிப்பதற்கு 2013இல் நடவடிக்கை எடுத்தது.** சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட முதல் ஐந்து கைத்தொழில் பேட்டைகளில் ஒன்றான அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீளச் செயற்படுத்துவது தொடர்பான செயற்பாடுகளை இவ்வமைச்சு தொடர்ந்து மேற்கொண்டது.

எக்கல, பல்லேகல்ல, ஹொரணை, பன்னல மற்றும் பனலுவ உள்ளிட்ட 20 பிரதான மற்றும் சிறியளவான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக் கைத்தொழில் பேட்டைகளை தரமுயர்த்துவதற்கும் நவீனமயமாக்குவதற்கும் அமைச்சு 2013இல் ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தது. இதேவேளை, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மேற்பார்வையின் கீழ் மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நிறுவப்பட்ட மாவட்ட அலுவலகங்கள் 2013இல் செயற்பாடுகளை ஆரம்பித்தது. இம்மாவட்ட அலுவலகங்கள், தொழில்நுட்ப, சந்தைப்படுத்தல், துணிகரத் தொழில்முயற்சி மற்றும் ஏனைய கைத்தொழில் தொடர்பான உதவியை வழங்குவதன் மூலம் சுயவேலை வாய்ப்புப் பிரிவுகள் மற்றும் புதிய தொழில்முயற்சிகளை நிறுவுவது தொடர்பான பணியில் ஈடுபடுகின்றன.

**தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையூடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையின் அபிவிருத்திக்காக அரசாங்கம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.** நாட்டில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் மத்திய அதிகாரசபையான தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பண்ணை மற்றும் மலர் வளர்ப்புத் துறைகளில் துறை ரீதியிலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதுடன் தேவையான பயிற்சி மற்றும் இயலளவு அபிவிருத்தியை வழங்குகிறது. மேலும், வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கான நிதி உதவியை வழங்குவதன் மூலம் தொழில் தேடும் பட்டதாரிகளை தொழில்முயற்சியாளர்களாக மாற்றுவதை நோக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டம் இவ்வதிகாரசபையால் ஆரம்பிக்கப்பட்டது. பெண் தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பெண் தொழில் முயற்சியாளரின் அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் நிதிக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்ய முடியாமைக்கு தொழில்முயற்சியாளர்களிடம் இயலளவு இல்லாமை முக்கிய காரணமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி மற்றும் கிராமிய அபிவிருத்தி வங்கி போன்ற நிதியியல் நிறுவனங்களூடாக தொழில்முயற்சி அபிவிருத்தியில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தத் தொடங்கியுள்ளது. இவ்வதிகாரசபை ஏற்றுமதிச் சந்தைகளைக் கண்டுபிடிப்பதற்கு வியாபார பிரதிநிதிகள் குழுவை வசதிப்படுத்துவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் ஏற்றுமதி அபிவிருத்தியிலும் ஈடுபடுகிறது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாங்கொக் வர்த்தகக் கண்காட்சியில் 15 வியாபாரிகளைக் கொண்ட பிரதிநிதிகள் குழு 2013இல் பங்கேற்றது. இதேவேளை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியின் கைத்தொழிலாளர்களுக்கு உதவுவதை நோக்காகக் கொண்ட பூகோள ரீதியிலான கொத்தணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 2013 இலும் தொடர்ந்து நடைபெற்றன. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மரத்தளபாடம், கயிறு, கைப்பணிப் பொருட்கள், இலேசான பொறியியல் மற்றும் கைத்தறி போன்ற உந்துசக்தியுடைய துறைகள் மூலப்பொருட்கள், தொழிலாளர் தேர்ச்சிகள் மற்றும் ஏனைய அமைவிட அநுகூலங்கள் என்பனவற்றின் கிடைப்பனவின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இனங்காணப்பட்டுள்ளதுடன் தேவையான உதவியும் வழங்கப்பட்டது. பிரதேச செயலக மட்டத்திலான மாநாடுகளூடாகத் தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி பிரச்சனைகளை வழியமைப்பதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக்கு உதவும் இவ்வதிகாரசபையின் மாவட்ட தொழில்முயற்சி மாநாடுகள் நிகழ்ச்சித்திட்டம் 2013இலும் தொடர்ந்து நடைபெற்றது. மேலும், சேர்மன் சமஷ்டிக் குடியரசின் ஜேர்மன் அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக் கொள்கை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் நகல் கொள்கைப் பத்திரமொன்று பூர்த்தி செய்யப்பட்டது.

**நாட்டில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் அடிப்படையில் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்கு 2013இல் அதிகரித்த கவனம் செலுத்தப்பட்டது.** சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் அடிப்படையில் தொழில்நுட்பத்தை வசதிப்படுத்துவதை நோக்காகக் கொண்ட தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தை நிறுவுவது தொடர்பாக ஆரம்பச் செயற்பாடுகள் 2013இல் மேற்கொள்ளப்பட்டன. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் உதவியுடன் பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து இவ்வதிகாரசபையால் தொழில்நுட்ப வியாபார சாதனங்கள் மற்றும் தொழில்நுட்ப மாற்றல் நிலையங்களை நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தொடங்குவதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்குதல், அவற்றின் வியாபாரத்தை விரிவாக்கல் மற்றும் நவீனமயமாக்கல் என்பவற்றூடாக நுண்ணிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிலுள்ள கைத்தொழிலாளர்களுக்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபை தொடர்ந்து உதவி வழங்கியது. இதன்படி, 2013இல் இலங்கையில் நுண்ணிய வியாபாரம் மற்றும், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை

அபிவிருத்தி செய்வதற்கு 192 தொழில்நுட்ப மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதன் மூலம் கைத்தொழில் அபிவிருத்திச் சபை தொழில்நுட்பப் பயிற்சியை வழங்கியது.

**நாடு பூராவும் பரந்து காணப்படும் உள்ளூர் கைத்தொழிலாளர்களுக்கு உதவுவதற்கு கைத்தொழில் சம்மேளனம் பல நிகழ்ச்சித்திட்டங்களை 2013 நடத்தியது.** இவை, சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கு உதவுவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் விருது வழங்கும் வைபவங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. வர்த்தக வங்கியின் பிராந்திய கிளைகளூடாக அடையாளம் காணப்பட்ட நுண்ணிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு சம்மேளனத்தின் பணிகளை வழங்குவதன் மூலம் இலங்கை சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் சம்மேளனம் 'வியாபாரிக சேவிய' நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டது. மேலும், இச்சம்மேளனம் வடக்கு மாகாணம் உள்ளிட்ட சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சித் துறையிலுள்ள "கைத்தொழிலாளர்களுக்கான கைத்தொழிலில் சிறந்து விளங்குவதற்கான விருது 2013"இனை நடத்தியது.

**2013இல் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், விரயத்தைக் குறைப்பதற்கும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களால் பல நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு வலுக் கணக்காய்வுகள் மற்றும் தொழில்நுட்பத் தீர்வுகளை நடைமுறைப்படுத்தல் என்பவற்றினூடாக தெரிந்தெடுக்கப்பட்ட தொழிற்சாலைகளில் அதன் உற்பத்தித்திறன் மேம்பாடு மற்றும் விரய முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்து நடத்தியது. இதேவேளை, கைத்தொழில் விரய முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தங்கொட்டுவ கைத்தொழில் பேட்டையில் தலத்திலான அளவீடு நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் செலவு மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டன. இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் 2013இல் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் பாதணித் துறைகளில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான உற்பத்தித்திறன் மேம்பாடு மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

**அரசாங்கம் உள்ளூர் பெறுமதி கூட்டலை ஊக்குவிப்பதற்கும் உள்நாட்டுக் கைத்தொழில்களை விரிவாக்குவதற்கும் 2014 வரவு செலவுத்திட்டத்தில் பல வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.** உள்ளூர் பெறுமதி கூட்டலை அதிகரிப்பதற்கு உணவு, பானங்கள், இரசாயனம், இறப்பர், அடிப்படை உலோகம் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோகத் துறைகள் என்பவற்றிலான தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் வீதங்கள் அதிகரிக்கப்பட்டன. இதுபோல், வேளாண்மைத் துறையில் பின்னோக்கிய ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கும் அதேவேளை கனமான கைத்தொழில் துறையில் உள்நாட்டு பெறுமதி கூட்டலை ஊக்குவிப்பதற்கு தேயிலை இயந்திரம், உழுபொறிகள் மற்றும் ஒற்றைச் சக்கர தள்ளுவண்டிகள் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட இயந்திரத்தின் இறக்குமதி மீதான சுங்கத்தீர்வை அதிகரிக்கப்பட்டது. இது போல், உள்ளூர் படகு கட்டும் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கு இறக்குமதி செய்யப்பட்ட படகுகள் மீதான சுங்கத்தீர்வை அதிகரிக்கப்பட்டது. மேலும் இனிப்புப் பொருட்களின் தயாரிப்பு மற்றும் வியாபார அடையாளம் கொண்ட பொருட்கள் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்களின் உள்ளீடுகள் மீதான சுங்கத்தீர்வையும் கீழ்நோக்கித் திருத்தப்பட்டது. வலுவைச் சேமித்தல் மற்றும் பசுமையான தயாரிப்பு முறைமைகளை ஊக்கப்படுத்துவதற்கு சூரிய ஒளி கட்டுப்பாட்டுத் தகடுகளுக்கு சுங்கத்தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது. உள்ளூர் பிரதியீடுகளுக்கான கேள்வியை அதிகரிப்பதற்கும் இத்துறைகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளை தரமுயர்த்துவதற்கும் பட்டர், யோகட், கருவாடு, நெத்தலி, தகரத்திலடைத்த மீன் மற்றும் மாசிக்கருவாடு மீதான சிறப்புப் பண்ட தீர்வை அதிகரிக்கப்பட்டது. கட்டடவாக்கம் தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் துணைப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள உள்ளூர்க் கைத்தொழிலை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன் முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்களுக்கான எதிர்க்கணிய பட்டியலொன்று ஏற்படுத்தப்பட்டது.

**நாட்டின் உயர் தொழில்நுட்ப கைத்தொழில் ஏற்றுமதிகளை அதிகரிக்கும் நோக்குடன் தொழில்நுட்ப முயற்சியாளர் கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு அதன் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கொள்கையுடன் இணைந்து செல்லும் வகையில் அரசு நடவடிக்கைகளை எடுத்தது.** இதன்படி, இலங்கையின் தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க உபாயத்துடன் இணங்கிச் செல்லும் வகையில் பெறுமதிகூட்டல் மற்றும் வர்த்தகமயமாக்கலை வழங்கும் நோக்குடன் நாட்டில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தலை வசதிப்படுத்துவதற்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்துக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் நிறுவப்பட்டது. பன்னாட்டு அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத் (ப.அ.ஆ.நி - கனடா) திலிருந்தான நிதி உதவியுடன் தேசிய விஞ்ஞான நிறுவனத்தால்

வடிவமைக்கப்பட்ட நனோ தொழில்நுட்ப புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் பிரயோகங்களுக்கான தேசிய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு 2013 மேயில் பூர்த்தி செய்யப்பட்டது. உபாய ரீதியில் கவனம் செலுத்தப்படும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புக்களை வசதிப்படுத்துவதற்கு நனோ விஞ்ஞானப் பூங்காவுடனான சிறந்து விளங்குவதற்கான முழுமையான நனோ தொழில்நுட்ப நிலையம் 2013 ஒத்தோபரில் கோமாகமவில் திறந்து வைக்கப்பட்டது. இதுவரை, நனோ விஞ்ஞானப் பூங்காவால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆடை, வேளாண்மை, ஊட்டச்சத்து, நீர்தூய்மையாக்கல் மற்றும் கனிப்பொருள் மூலவளங்களை உள்ளடக்குகிறது. நனோ விஞ்ஞானப் பூங்கா பல எண்ணிக்கையான பன்னாட்டு மற்றும் உள்ளூர் உரிமைப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்டதுடன் ஒரு உற்பத்தியின் முன்னோட்ட உற்பத்தி 2013 இறுதியில் ஆரம்பமானது.

**ஆடைத் துறையின் அபிவிருத்திக்கான உபாயங்களை உருவாக்குவதற்குக் இணைந்த ஆடை அமைப்பு மாநாடு காரணமாக விளங்கியது.** குறைந்த செலவுடைய தயாரிக்கும் நாடுகளிலிருந்தான மாறாத சவால்களுக்கு முகம் கொடுத்துள்ள ஆடைக் கைத்தொழில், சுதந்திரமான துறைமுகச் செயற்பாடுகள் ஆரம்பித்தமை, சீனாவுக்கும் இலங்கைக்குமிடையேயான முன்மொழியப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, கைத்தொழிலாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட செலவைக் குறைத்தல் மற்றும் வலுவைச் சேமிக்கும் வழிமுறைகள் என்பனவற்றிலிருந்து நன்மையடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பில் சுதந்திர துறைமுகங்களின் வசதி, துறைமுகத்தினுள்ளேயே வர்த்தகம் செய்வதை வசதிப்படுத்துவதுடன் அயல் நாடுகளிலிருந்து இலங்கைக்கு புதிய வியாபாரத்தைக் கவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சீனா மற்றும் யப்பான் போன்ற நாடுகளுடனான முன்னேற்றமடைந்த வர்த்தக உறவுகள் இலங்கையின் தைத்த ஆடைகளில் ஏற்றுமதிகளுக்கான புதிய சந்தைகளைத் ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

**இலங்கையை வர்த்தக மையமாக அபிவிருத்தி செய்வதற்கான சட்ட கட்டமைப்பு 2013இல் இயற்றப்பட்டது.** இதன்படி, 2013ஆம் ஆண்டில் 1ஆம் இலக்க நிதிச் சட்டம் - வர்த்தக மைய ஒழுங்குவிதி 2013ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க நிதிச் சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இவ்வொழுங்கு கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகங்களை சுதந்திரத் துறைமுகங்களாக அறிவித்ததுடன் கட்டுநாயக்கா, கொக்கல, மிரிஜாவில ஆகிய ஏற்றுமதி பதனிடும் வலயங்கள் மற்றும் மத்தள ராஜபக்ஷ பன்னாட்டு வானூர்திநிலையம் ஆகியவற்றை காப்பிடப்பட்ட பிரதேசங்களாக அறிவித்தது. இது தொடர்பாக, மிரிஜாவில ஏற்றுமதி பதனிடும் வலயம் மற்றும் மத்தள ராஜபக்ஷ பன்னாட்டு வானூர்தி நிலையம் என்பன துறைமுகங்களிலேயே இடம்பெறும் வர்த்தகச் செயற்பாடுகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பாக துறைமுகங்களிலேயான வர்த்தகச் செயற்பாடுகள் மற்றும் காப்பிடப்பட்ட பிரதேசங்களிலான செயற்பாடுகளில் ஈடுபடும். துறைமுகங்களுக்கிடையேயான வர்த்தகம், விநியோகப் பணிகள் மற்றும் பல நாடுகளைத் திரட்டல், கடல் கடந்த வியாபாரம், வெளிநாட்டிலுள்ள வாடிக்கையாளர்களுக்கான முன்னணிப் பணிகள் மற்றும் பட்டியலிடும் தொழிற்பாடுகளின் முகாமைத்துவம் மற்றும் நிதி வழங்கும் சங்கிலிப் பிணைப்பு என்பவற்றை வசதிப்படுத்துவதற்கு சுதந்திரமான துறைமுகங்கள் மற்றும் காப்பிடப்பட்ட பிரதேசங்கள் நிறுவப்பட்டன. வெளிநாட்டு மூலங்களிலிருந்தான இதன் மொத்த முதலீடுகளில் ஆகக் குறைந்தது அறுபத்தைந்து சதவீதத்தைக் கொண்ட இச்செயற்பாடுகளுக்காக இலங்கையில் நிறுவப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட எந்தவொரு தொழில்முயற்சியும் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்தப் புரள்வு சுங்கத் தீர்வைகள், பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, சிறப்புப் பண்டத் தீர்வை மற்றும் கலால் வரிகள், செலாவணிக் கட்டுப்பாடு மற்றும் வர்த்தக ஒழுங்குவிதிகளிலிருந்து விலக்களிக்கப்படும்.

**ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கான அதன் செயற்பாடுகளை 2013இல் தொடர்ந்து மேற்கொண்டது.** ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இவ்வாண்டில் வர்த்தகச் சந்தைகளிலும் பொருட்காட்சிகளிலும் பங்கேற்றதுடன் பல்வேறு சந்தை பல்வகைப்படுத்தல் உபாயங்களிலும் ஈடுபட்டது. இதன்படி, ஐரோப்பிய சந்தையிலிருந்தான வீழ்ச்சியடைந்து செல்லும் கேள்வியின் காரணமாக படகு கட்டும் கைத்தொழிலுக்கான கேள்வியின் காரணமாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது படகு மட்டும் தொழில்நுட்ப நிறுவனத்துடன் சேர்ந்து புதிய சந்தைகளைக் கவர்வதில் கவனம் செலுத்தியது. மேலும், உலகளாவிய வர்த்தக அமைப்பான ஐபிசி[2] இன் இலத்திரனியல் துறையின் ஏற்றுமதி இயலளவை அதிகரிக்கும் பொருட்டு இலத்திரனியல் கைத்தொழிலிலான உலகளாவிய சிறந்த நடைமுறைகள் மீதான விழிப்பூட்டலை அதிகரிப்பதற்காக தொழில்நுட்ப சந்திப்பொன்று கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்டது.

2 ஐபிசி என்பது உலகளாவிய வர்த்தக அமைப்பொன்றாக இருப்பதுடன் அது அச்சிடப்பட்ட அட்டைகள் மற்றும் இலத்திரனியலைப் பொருத்துகின்ற கைத்தொழில்களை அவர்களது வாடிக்கையாளர்களுக்கும் நிரம்பலர்களுக்கும் வழங்குகின்றதுடன் கைத்தொழில் நியமங்கள், பயிற்சிகள், சந்தை ஆய்வுகள் மற்றும் பொதுக் கொள்கை ஆலோசனைக்களுக்கான முக்கிய மூலமாகவும் இருக்கிறது

**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை 2013இல் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு பல எண்ணிக்கையான நடவடிக்கைகள் எடுத்தது.** இத்துறையில் கைத்தொழிலாளர்களால் முகம் கொடுக்கப்படும் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இவ்வதிகாரசபை ஐக்கிய அமெரிக்க நாடுகள், சீனா, இந்தியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் நடத்தப்பட்ட வர்த்தகச் சந்தைகள் மற்றும் பொருட்காட்சிகளில் உள்ளூர் பொருட்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்ததுடன் இலங்கை - சீனா இருபுடை வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் இலங்கை இரத்தினக்கற்களின் ஏற்றுமதியை விரிவாக்குவதற்கான வாய்ப்புக்களை தற்போது ஆராய்கின்றது. இதேவேளை, இவ்வதிகாரசபை பன்னாட்டு தரத்திலான நவீன மற்றும் வினைத்திறன்மிக்க ஆய்வுகூடக் கருவியை நிறுவியதன் மூலம் இரத்தினக்கல் பரிசோதனைக்கூடங்களை தரமுயர்த்துவதற்கு ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தது. இயந்திரமயமாக்கப்பட்ட சுரங்கமகழ்தல் சம்பந்தமாக விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒப்புதல்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவப் பணிகளை வழங்கல் என்பவற்றின் ஊடாக சூழல் சிநேகபூர்வமான இரத்தினக்கல் அகழ்வதை ஊக்குவிப்பதற்கான 2012இல் எடுக்கப்பட்ட வழிமுறைகள் 2013இலும் தொடர்ந்தது. மேலும், மரம் நடுதல் பிரசாரங்களை நடத்துவதன் மூலம் சேதமடைந்த மற்றும் அழிவடைந்த பிரதேசங்களை புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகளை அதிகாரசபை எடுத்தது. இதைப்போன்று, இத்துறையில் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவு ஆபரணத் தயாரிப்பாளர்களை உள்ளடக்கிய வயம்ப ஆபரண கைப்பணியாளர் அமைப்பின் உறுப்பினர்களிடையே நன்கொடையாக நவீன இயந்திரம், கருவிகள் மற்றும் சாதனங்களை பகிர்ந்தளிப்பதற்காக தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபை வயம்ப ஆபரண கைப்பணியாளர் அமைப்பை அடையாளம் கண்டுள்ளது.

## குடிசைக் கைத்தொழில்

**நாட்டில் தொழில்முயற்சியை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முன்னெடுப்புக்களிருந்து நன்மையடைந்ததன் மூலம் குடிசைக் கைத்தொழில் துணைத் துறை 2012இல் பதிவு செய்யப்பட்ட 4.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 5.1 சதவீதத்தால் விரிவடைந்தது.** கைத்தொழில் அபிவிருத்திச்சபை, தேசிய கைப்பணிச் சபை போன்ற அதன் நடைமுறைப்படுத்தல் முகவர்களூடாக மரபுவழிக் கைத்தொழில்கள் மற்றும் சிறுமுயற்சியாளர் அபிவிருத்தி அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுடான தொடர்ச்சியான முயற்சி இத்துறையின் வளர்ச்சியை நிலைத்து நீடிக்கச் செய்தலில் பெருமளவுக்குப் பங்களிப்புச் செய்தது. ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய மற்றும் மாவட்ட மட்டத்திலான பொருட்காட்சிகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகள் உள்ளார்ந்த வளமுள்ள சந்தைகளை அடைவதற்கு பங்களிப்புச் செய்ததுடன் தொழில்நுட்பம், நிதியியல் பணிகள் மற்றும் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கின. 2016 அளவில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய 60,000 குடிசைக் கைத்தொழில்களை நிறுவும் அரசாங்கத்தின் குறிக்கோளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தேசிய கைத்தொழில் உற்பத்தி கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மரபுவழி கைப்பணிக் கிராமங்களின் அபிவிருத்தி என்பன இத்துறையினிடையே வளர்ச்சியைப் பேணுவதற்கு பங்களிப்புச் செய்தது. குடிசைக் கைத்தொழில் தொடர்பான தேசிய நிகழ்ச்சித்திட்டமான ‘திவிநெகும’ (வாழ்வின் எழுச்சி) ஊடாக அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட கொள்கைகளும் எதிர்காலத்தில் இத்துறையினுள் அவதானிக்கப்பட்ட நேர்க்கணிய வளர்ச்சி உத்வேகத்தைத் தக்கவைப்பதற்கான உந்துவிசையை வழங்கும்.

## மின்வலு, வாயு மற்றும் நீர்

**மின்வலு, வாயு மற்றும் நீர் துணைத் துறை 2012இல் பதிவு செய்யப்பட்ட 4.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 10.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சி மின்வலு, வாயு மற்றும் நீர் துணைத் துறையினுள் மிகக் கூடிய பங்கைக் கொண்டிருக்கும் மின்வலு துணைத்துறையின் 11.3 சதவீத உயர்ச்சியால் பெரிதும் உதவப்பட்டது. நீர்மின் வலுவில் கூடிய அளவுக்குத் தங்கியிருந்ததன் காரணமாக வெப்ப மின்வலு உருவாக்கத்தின் உயர் செலவில் ஏற்பட்ட 42.8 சதவீத சுருக்கியுடன் சேர்ந்து முன்னைய ஆண்டின் குறைந்த தளத்துடன் சாதகமான வானிலை நிலைமைகளால் உதவப்பட்ட நீர்மின் வலு உருவாக்கத்திலான 110.1 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி மின்வலு துணைத் துறையினுள் உயர்வளர்ச்சி பெறுமதி கூட்டலுக்கு பங்களிப்புச் செய்தது. மேலும், 2012இன் பின்ரைப் பகுதியில் தேசிய மின் தொகுதிக்கு மேல் கொத்மலை நீர்மின்வலுப் பொறி இணைக்கப்பட்டமையும் மின்வலு துணைத் துறையில் உயர் பெறுமதி கூட்டலுக்குப் பங்களிப்புச் செய்தது. இதேவேளை, முக்கியமாக கைத்தொழில் நுகர்விலான விரிவாக்கத்தால் வாயு துணைத் துறை இவ்வாண்டு 1.6 சதவீதத்தால் விரிவடைந்தது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் பகிர்ந்தளிக்கப்பட்ட நீரின் அளவில்

ஏற்பட்ட 2.8 சதவீத அதிகரிப்பு மற்றும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நுகர்வோர் கணக்கிலான 7.6 சதவீத அதிகரிப்பால் உதவப்பட்டு நீர் துணைத் துறை 3.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. நீர் சுத்திகரிப்புப் பொறிகளை நிறுவியமை மற்றும் புதிய நீர்வழங்கல் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் இத்துணைத் துறையின் பெறுமதி கூட்டலை அதிகரிப்பதற்கு மேலும் பங்களிப்புச் செய்யும்.

## கட்டடவாக்கம்

**கட்டடவாக்கத் துணைத் துறை 2012இல் பதிவு செய்யப்பட்ட 21.6 சதவீத கவர்ச்சியான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 14.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து தொடர்ந்தும் விரிவடைந்திருந்தது.** தெற்கு அதிவிரைவுப் பாதையின் கட்டம் இரண்டு, கொழும்பு - கட்டுநாயக்கா அதிவிரைவுப் பாதை, கொழும்பு சுற்றுவட்ட பெருந்தெருக்கள் செயற்றிட்டம் மற்றும் வடக்கு புகையிரத செயற்றிட்டம் அதுபோல் துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் போன்ற புகையிரதப் பாதை மற்றும் போக்குவரத்துத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டங்களிலான அரச துறை முதலீடுகள் இத்துணைத் துறையின் நீடித்து நிலைத்திருக்கும் வளர்ச்சி உத்வேகத்துக்குப் பங்களிப்புச் செய்தன. மேலும், 'கமநெகும' மற்றும் 'மகநெகும' போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களுடன் சேர்ந்து வீதி வலையமைப்பு மேம்பாடு மற்றும் மீள்நிர்மாணச் செயற்றிட்டங்கள் இத்துறையில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சி உத்வேகத்துக்கு மேலும் பங்களிப்புச் செய்தன. கட்டடவாக்கக் கைத்தொழிலினுள் முக்கிய பிரிவான கட்டட நிர்மாணம், பாரிய சுற்றுலாவிடுதிச் செயற்றிட்டங்கள், தொடர் மாடிகள் மற்றும் வீடமைப்பு அலகுகளின் நிர்மாணம் என்பன இத்துணைத் துறையில் அவதானிக்கப்பட்ட சாதகமானதொரு போக்கிற்கு பெரிதும் பங்களிப்புச் செய்தது. வீடமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் தனியார் துறையின் ஈடுபாடு வர்த்தக வங்கிகளால் வீடமைப்புத் துறைக்கு வழங்கப்படும் கடன்கள் முற்பணங்களிலான 9.1 சதவீத வளர்ச்சியால் பிரதிபலிக்கப்பட்டிருக்கையில் அரச துறையும் கிராமிய வீடமைப்பு அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தும் ஜனசெவன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் போன்ற வீடமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் ஈடுபட்டது. இத்துறையிலான வளர்ச்சியும், 2013இல் 11.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த கட்டடப் பொருட்களின் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணின் அசைவினால் பிரதிபலிக்கப்பட்டது. கட்டடவாக்கக் கைத்தொழிலிலான வளர்ச்சியை நோக்கிய தனியார் துறையின் தீவிர ஈடுபாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் 2013இல் கட்டடவாக்க நோக்கங்களுக்காக தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் 16.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இக்கைத்தொழிலில் மூலப்பொருட்கள் மற்றும் கூலியின் விலை அதிகரிப்புக்களுடன் கட்டடவாக்க, பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் தொகுக்கப்பட்ட கட்டடவாக்கச் சுட்டெண்ணின் செலவிலான வளர்ச்சியால் எடுத்துக்காட்டப்பட்டவாறு கட்டடவாக்கச் செலவு 7.2 சதவீதத்தால் உயர்ந்தது. கட்டடவாக்கத் துணைத் துறையிலான கூலிச் செலவுகளிலான அதிகரிப்பு இக்கைத்தொழிலின் விரிவாக்கத்திலிருந்து எழும் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கான தொழிலாளர்களின் பற்றாக்குறையைப் பிரதிபலிக்கிறது. இதனைப் போன்று அதிகரித்த கேள்வியினால் மூலப்பொருட்களின் செலவும் 2013இல் அதிகரித்தது. மூலப்பொருட்கள் மற்றும் தொழிலாளர் உற்பத்தித்திறனிலான முன்னேற்றத்துடன் சேர்ந்து புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதனூடாக எதிர்காலச் சவால்களை இத்துறை முகம்கொடுக்க வேண்டியதனை இது எடுத்துக்காட்டுகின்றது.

## பணிகள்

**பணிகள் துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 58.1 சதவீதப் பங்குடன் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் துறையாக தொடர்ந்து விளங்கி 2012இல் பதிவு செய்யப்பட்ட 4.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 6.4 சதவீதம் கொண்ட பாராட்டத்தக்க வளர்ச்சியை அடைந்தது.** இத்துறையிலான வளர்ச்சி அனைத்து முக்கிய துணைத் துறைகளின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தால் உற்சாகப்படுத்தப்பட்டது. அதிகரித்த உள்ளக அசைவுடன் இணங்கிச் செல்லும் வகையில் போக்கவரத்துத் துணைத் துறையின் விரிவாக்கம் இவ்வளர்ச்சிக்கான முக்கிய பங்களிப்பாளராக விளங்கியது. குறிப்பாக ஆண்டின் இரண்டாமரைப் பகுதியில் உலக சந்தைகளிலான மேம்பட்ட மனோபாவத்தின் காரணமாக வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளின் புத்துயிர்ப்பினால் முன்னெடுக்கப்பட்ட மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்துறையின் வலுவான மீட்சியுடன் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகளின் விரிவாக்கம் 2013இன் வளர்ச்சிக்கு உதவியளித்தது. இதேவேளை, சுற்றுலாவிடுதி மற்றும் உணவகங்கள் துணைத் துறை செழிப்பான வளர்ச்சியைத் தொடர்ந்து பதிவு செய்திருக்கையில் வங்கித்தொழில் காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத் துணைத் துறையும் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு 2012இல் பின்பற்றப்பட்ட கட்டுபாட்டுக் கொள்கை வழிமுறைகளின் காலம் தாழ்த்திய விளைவுக்கு மத்தியிலும் வளர்ச்சியடைந்தது.

சிறப்புக் குறிப்பு 2

## தேசிய கணக்குகளைத் தொகுத்தல்

குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகளை மதிப்பிடுவதற்கான அவசியம் கருதி தேசிய கணக்குகள் தொடர்பான மதிப்பீடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்நாணய மதிப்பீடுகள் நாட்டிலுள்ள அனைத்துப் பொருளாதார கொடுக்கல்வாங்கல்களினதும் முறையியல் சார்ந்த தொகுப்பினை அமைப்பியல் சார்ந்த பகுப்புக்களுடன் தருகின்றன. அவை பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் அடையாளம் காண்பதற்கான அடிப்படையினை உருவாக்குகின்ற மற்றும் பொருத்தமான எதிர்காலக் கொள்கை வழிமுறைகளை உருவாக்குகின்ற அதேவேளையில் பொருளாதாரங்களுக்கு இடையில் ஒப்பீட்டிற்கும் வசதிகளை வழங்குகின்றது. தேசிய கணக்குகளின் புள்ளிவிபரங்களைத் திரட்டுகின்ற இச்செயன்முறைகள் 1947இன் சமூகக் கணக்குகளின் தேசிய வருமானம் மற்றும் சமூகக் கட்டுமானங்களினது அளவிடல்களின் வெளியீட்டுடன் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் உருவாக்கப்பட்டது (1947 அறிக்கை).

### தேசிய கணக்குகள் முறைமையின் பரிணாம வளர்ச்சி

1947ஆம் ஆண்டின் அறிக்கையினைத் தொடர்ந்து, 1953இல் ஐக்கிய நாடுகள், பெருமளவிற்கு அனைத்தையுமுள்ளடக்கிய நியமக் கணக்குகளையும் அட்டவணைகளின் தொகுப்பொன்றினை தேசிய கணக்குகளில் முறைமை என்ற பெயரின் கீழ் வெளியிட்டது. இதில் பரந்தளவிற்கு ஏற்புடைத்தான கோட்பாடுகளும் வரைவிலக்கணங்களும் தரப்பட்டுள்ளன. மேலும், 1953ஆம் ஆண்டின் தேசிய கணக்குகள் முறைமையை நடைமுறைப்படுத்திய வேளையில் நாட்டில் காணப்பட்ட அனுபவங்களை கருத்திற்கொண்டு 1960ஆம் ஆண்டில் மீள் திருத்தப்பட்ட பதிப்புக்கள் வெளியிடப்பட்டன. பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவை கைந்நூலுடன் மேம்பட்ட முறையில் இணங்கிச் செல்லும் விதத்திலும் 1964இலும் திருத்தப்பட்ட பதிப்புக்கள் வெளியிடப்பட்டன. 1968ஆம் ஆண்டிற்கான தேசிய கணக்குகள் முறைமையானது உள்ளீட்டு - வெளியீட்டு அட்டவணைகள் மற்றும் ஐந்தொகை என்பனவற்றை உள்ளடக்கியதன் மூலம் கிடையாக விரிவடைந்ததுடன் நிலையான விலைகளில் மதிப்பிடுவதன் முக்கியத்துவத்தை அதிகரித்திருந்தது. 1993ஆம் ஆண்டிற்கான தேசிய கணக்கின் முறைமை, ஏனைய பன்னாட்டு புள்ளிவிபரவியல் நியமங்களின் மூலம் பரந்தளவிற்கு பூரணப்படுத்தப்பட்டதன் காரணமாக தேசிய கணக்குகள் புள்ளிவிபரத்தில் பாரியதொரு பாய்ச்சலாகக் காணப்பட்டது. 1993ஆம் ஆண்டிற்கான தேசிய கணக்குகள் முறைமையின் நடைமுறைப்படுத்தலுடன் கணக்குகளின் தொடர்ச்சியான தொகுதியொன்று தொகுக்கும் செயன்முறைகளுக்காக விதந்துரைக்கப்பட்டது. இதில் நடைமுறைக் கணக்குகள், ஒன்றுசேர்ந்த கணக்குகள் மற்றும் ஐந்தொகை என்பன பிரதான தொகுதிகளாகக் காணப்பட்டன. மேலும், பொதுவாக நாம் அறிந்திருக்கும் நடைமுறைக் கணக்குகள் மொ.உ.உற்பத்திகளை மதிப்பிடுகின்ற உற்பத்திக் கணக்குகளுடனும், பொருளாதாரத்தினால் உருவாக்கப்படுகின்ற செலவிடத்தக்க மொத்த வருமானத்தினை அளவிடுகின்ற வருமானக் கணக்கின் பயன்பாட்டுடன் பாய்ச்சப்படுவதுடன் பொருளாதாரத்தின் மொத்த செலவீடு மற்றும் சேமிப்பு என்பவற்றை மதிப்பிடுகின்ற வருமான கணக்கின் பயன்பாட்டினை முடிவுறுத்துகின்றது. கோட்பாட்டு ரீதியாக, எத்தகைய கணக்காயினும் இறுதி மதிப்பீடுகள் மொ.உ.உற்பத்தியின் பெறுமதிக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும் ஏனெனில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியானது அவ்வுற்பத்தியிலிருந்து ஈட்டப்படும் வருமானத்திற்குச் சமமானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வுற்பத்திகளின் மீதான செலவினத்திற்குச் சமமானதாக இருத்தல் வேண்டும். தொடர்களின் பிந்திய பதிப்பான 2008ஆம் ஆண்டிற்கான தேசிய கணக்குகள் முறைமை 1993ஆம் ஆண்டின் இற்றைப்படுத்தப்பட்ட பதிப்பாக இருந்ததுடன், இது பொருளாதார சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களிலிருந்து தோன்றுகின்ற பிரச்சனைகள் ஆய்வு முறையியலின் முன்னேற்றம் மற்றும் பயன்படுத்துநரின் தேவைப்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

### இலங்கையில் தேசிய கணக்குகளைத் தொகுத்தல்

அரசாங்கத்தின் புள்ளிவிபர முகவராக விளங்குகின்ற தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களம் தேசிய கணக்குகள் புள்ளிவிபரங்கள் உட்பட இலங்கைக்கான பல்வேறு புள்ளிவிபரங்களைச் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பரப்புதல்களுக்குப் பொறுப்பாக இருக்கின்றது. தேசிய கணக்குகளின் மதிப்பீடுகளைத் தொகுத்தல், "இலங்கையின் தேசிய வருமானம்" தயாரிக்கப்பட்டதுடன் 1947 இலிருந்த கிரமமான அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. மதிப்பீடுகள், புள்ளிவிபரப் பிரிப்பிகள் மற்றும் தேசிய கணக்குகளின் ஐக்கிய நாடுகள் ஆண்டு நூல் என்பனவற்றில் காலாந்தர அடிப்படையில் வெளியிடப்பட்டன. எனினும், 1970 இலிருந்து தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களம், தேசிய கணக்குகளின் மதிப்பீடுகளை வெளியிடுவதில் காணப்பட்ட காலத்தினைக் குறைப்பதற்காக தேசிய கணக்குகள் தொடர்பில் தனியான செய்தித்திரட்டொன்றினை வெளியிடத் தொடங்கியது. இருப்பினும், இவ்வாரம்ப முயற்சிகள் மொ.உ.உற்பத்தி, மொத்த உள்நாட்டுச் செலவினம், இறக்குமதிகள், ஏற்றுமதிகள் போன்ற ஒரு சில புள்ளிவிபரங்களை மட்டுமே உள்ளடக்கியிருந்தன. 1953இன் தேசிய கணக்குகள் முறைமை வெளியிடப்பட்டதன் பின்னர், தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், தேசிய கணக்குகள் முறைமையின் வழிகாட்டலின்படி உற்பத்திக் கணக்குகள், நுகர்வு, ஒன்றுசேர்ந்த தொகை மற்றும் வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்கள் போன்றன மீதான தொகுக்கப்பட்ட அட்டவணைகள் மற்றும் அட்டவணைகள் உள்ளடக்கப்பட்டதன் மூலம் மேலும் சீராக்கப்பட்டமையுடன் கூடிய திருத்தப்பட்ட பதிப்பினைப் பின்பற்றியது. அதன் பின்னர், பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன், இலங்கை தேசிய கணக்குகளின் புள்ளிவிபரங்கள் எண்ணக்கரு நியதிகள், வரைவிலக்கணங்கள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் வகைப்படுத்தல்கள் ஆகிய நியதிகளில் தேசிய கணக்குகளின் முறைமைகளின் அபிவிருத்தி சமாந்தரமாக முன்னேற்றமடைந்த வேளையில், இதே காலப்பகுதியில் பொருத்தமான அடிப்படை ஆண்டுத் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், ப.நா. நிதியத்தின் பொதுத் தரவு பரப்பல் முறைமையின் பங்கேற்பாளர் என்ற ரீதியில் உறுப்புரை IV இன் கீழான தேவைப்பாடுகளுக்கிணங்கியொழுகும் விதத்தில் இலங்கை தற்பொழுது தேசிய கணக்குகள் தகவல்களை ப.நா. நிதியத்திற்கு சமர்ப்பிப்பதுடன், தற்காலிகத் தரவுகளை காலாந்தர மற்றும் சரியான நேரத்திலும் வழங்கும் விதத்தில் மேலும் மேம்படுத்துவதன் மூலம் சிறப்புத் தரவு பரப்புதல் நியமத்தினை நோக்கி இச்செயற்பாடுகள் நகர்ந்தன. ப.நா. நிதியம் உறுப்பினர் நாடுகளின் தரவுகளுடன் தொடர்பான விடயங்களை கலந்துரையாடுவதற்காக ப.நா. நிதியம் உறுப்புரை IV இன் ஆலோசனை வழங்கும் பணியினை ஆண்டுதோறும் மேற்கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து தரவுகளின் தரத்தினை மேலும் மேம்படுத்துவது தொடர்பில் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் வழமையான விதத்தில் விதந்துரைப்புக்கள் வழங்கப்படுகின்றன.

**தொகுப்புச் செயன்முறை**

தேசிய கணக்குகள் பற்றிய புள்ளிவிபரங்களைத் தொகுத்தல் உத்வேகமும் சிக்கலும் நிறைந்ததொரு செயன்முறையாகும். இதற்குத் தேவையான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் தொகுத்தல் மற்றும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் மொ.உ.உற்பத்தியை மதிப்பிடல் மற்றும் பரப்புதல் என்பன தொடர்பான தொழில்நுட்பத் தேர்ச்சியில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களை தேவைப்படுத்துகின்றது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அதன் தலைமை அலுவலகப் பிரிவுகள், கிளை அலுவலகங்கள் அதேபோன்று அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச் சபைகள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் மாகாணச் சபைகள் என்பனவற்றிலுள்ள அதன் அலுவலர்களினூடாகவும் அதன் தரவுகளைச் சேகரிக்கும் வலையமைப்பினை பன்முகப்படுத்தியிருப்பதுடன் வெளிமூலங்களிலிருந்து தகவல்களைச் சேகரிக்கின்றது. தேசிய கணக்குகள் புள்ளிவிபரங்களைத் தொகுப்பதனை வசதிப்படுத்துவதற்காக குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளையும் நடத்துகின்றது. குடியிருப்பாளர் வருமானம் மற்றும் செலவின அளவீடு, கட்டடவாக்கக் கைத்தொழில்களின் அளவீடு, கைத்தொழில்களின் வருடாந்த அளவீடு மற்றும் வேளாண்மை தொகைமதிப்பீடு என்பன தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சில கள ஆய்வுகளாகக் காணப்படுவதுடன் இவை தேசிய வருமான மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வளவீடுகளுக்குப் புறம்பாக, நாட்டிலுள்ள பல்வேறு நிறுவனங்களிடமிருந்து துறை வாரியாக குறித்துரைக்கப்பட்ட தகவல்களும் பெருமளவில் திரட்டப்பட்டன.

தரவு சேகரிப்புச் செயன்முறைகளைத் தொடர்ந்து தேசிய கணக்குகளின் முறைமையொன்றாக மையப்படுத்தப்பட்ட தொகுப்பு மதிப்பீடுகளில் உயர்மட்ட தொழில்நுட்ப நிபுணத்துவமொன்று ஈடுபட்டது. அதேநேரம், 2013இல் ப.நா.நிதிய தொழில்நுட்ப உதவித் தூதுக்குழு இலங்கை மிகக் குறைந்த தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருப்பதனை அங்கீகரித்துள்ளதுடன் பல்வேறு விலக்கல்களுடன் 1993/2008 தேசிய கணக்குகள் முறைமையின் நடைமுறைப்படுத்தலுக்கான ஆகக் குறைந்த தேவைப்பாட்டு தரவுத் தொகுப்பின் நியதிகளில் தரவுத் தொகுப்பினை விதந்துரைத்தது. அதேவேளை அநேகமான விடயங்களுக்கு தீர்வு நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் உற்பத்தி மற்றும் செலவின அணுகுமுறைகளின் மூலம் தற்பொழுது ஆண்டு மதிப்பீடுகளைத் தொகுத்த வேளையில் காலாண்டு மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் உற்பத்தி அணுகுமுறைகள் மூலம் மாத்திரமே கிடைக்கத்தக்கதாகவுள்ளது. மதிப்பீடுகள் ஆரம்பத்தில் நடைமுறை மற்றும் நிலையான விலைகளில் தற்காலிக அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் பின்னர் மிகச் சரியான தரவுகள் கிடைக்கும் பொழுது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தகவல் அட்டவணைகள் கைத்தொழில் மூலங்களின் படியான உற்பத்திகள் மீதான மதிப்பீடுகளையும் நுகர்வின் மீதான செலவினங்களையும், முதலீடு மற்றும் சேமிப்பு போன்றவற்றையும் உள்ளடக்கியிருந்தன. கைத்தொழில் மூலங்களின்படியான மொ.உ.உற்பத்தி வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் ஆகிய மூன்று பரந்த துறைகளாக முக்கியமாக வகைப்படுத்தப்பட்டன. இவை வெளியிடப்படும் போது ஏறத்தாழ 40 துணைத் துறைகளாக மேலும் பிரிக்கப்பட்டன. இப்பிரிப்புக்கள், ஐக்கிய நாடுகள் பன்னாட்டு நியம கைத்தொழில் பகுப்பாய்விலிருந்து பெறப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் தற்போதைய இலங்கை கைத்தொழில் பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

**தொகுப்பு செயன்முறையில் தொடர்ச்சியான முன்னேற்றங்கள்**

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் பன்னாட்டு நாணய நிதியத்துடனான தொழில்நுட்ப உதவியுடன் தற்போது அதனது தேசிய கணக்கீட்டு சட்டகத்தை உயர்த்திக்கொண்டிருக்கின்றது. அதற்கிணங்க, தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களமானது தேசிய கணக்குகளின் தொகுத்தல் நுட்பங்களின் முன்னேற்றுதல் தொடர்பில் பன்னாட்டு நாணய நிதிய செயற்கூட்டங்களின் பங்குதாரராக செயற்பட்டதுடன் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளுக்கான விலைச்சுட்டெண்களை 2010-2013 காலப்பகுதியில் தயாரிப்பதிலும் ஈடுபட்டிருந்தது. மேலும், தொகுத்தல் செயன்முறையின் முன்னேற்றத்திற்கு உதவுவதற்காக பன்னாட்டு நாணய நிதிய ஆலோசகர்களும்கூட பல்வேறு தடவைகள் நாட்டிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தனர். அதன் விளைவாக, தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்கள அலுவலர்கள் தேசிய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் விலைச் சுட்டெண்களை தொகுத்தல் பொருளாதார நடவடிக்கைகளை மதிப்பிடுகின்றபோது விரிவான தரவு மூலங்களை குறைவாக கொண்டுள்ள தொழிற்படை புள்ளிவிபரங்கள் மற்றும் வரித் தரவுகள் என்பவற்றின் பயன்பாடு தொடர்பில் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளல் அடியாண்டை திருத்தியமைத்தல் மற்றும் கணக்கீட்டு முறையியலை சீர் செய்தல் மற்றும் உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் ஒன்றை தயாரித்தல் என்பவற்றை உள்ளடக்கிய பரப்புக்களில் அதிகாரம் கொண்டிருந்தனர்.

தயாரிப்புக்களின்படி, இலங்கையில் தேசிய கணக்கீடுகளை தொகுத்தல் தொடர்பில் சீர்த்திருத்தங்களின் வரிசையானது அடியாண்டை தற்போதைய 2002 இலிருந்து 2010 இற்கு திருத்தியமைத்தல் என்பவற்றுடன் 2014 தொடக்கம் அட்டவணையிடப்பட்டுள்ளது. அதன்படி, தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களமானது காலாண்டு அடிப்படையில் 2014 இன் முதல் காலாண்டிலிருந்து மொத்த உள்நாட்டு செலவீட்டு மதிப்பீடுகளை வெளியிடுவதற்கான ஒழுங்குகளை ஏற்கனவே மேற்கொண்டுள்ளது. உற்பத்தி அனுகுமுறை மதிப்பீடுகள் அடிப்படை விலைகளில் தயாரிக்கப்படுவதுடன் நாட்டின் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்ற வகையிலும் உற்பத்தி எல்லையை விரிவாக்குகின்ற வகையிலும் சமீபத்திய கைத்தொழில் வகைப்படுத்தல்கள் (ஐஎஸ்ஐசி ஆர். 4) அமுல்படுத்தப்படும். மேலும், பொருளாதாரத்தின் தாபனத்துறை வகைப்படுத்தல்களின்படி அனைத்து தேசிய கணக்கீட்டு புள்ளிவிபரங்களும் வெவ்வேறாக மதிப்பிடப்படும். அத்துடன் ஒவ்வொரு பொருளாதார நடவடிக்கையின் வெளியீடுகளும் உற்பத்திக்கான அதனது நோக்கம், சந்தை, சந்தையல்லா மற்றும் சொந்த நுகர்வு என்பவற்றின் அடிப்படையில் வெவ்வேறாக மதிப்பிடப்படும். அதற்கு மேலாக, உள்ளீட்டு விகிதங்களை திருத்தம் செய்வதற்காகவும் தொழிற்படை மற்றும் தொழில்நிலை வகை என்பவற்றை பயன்படுத்தி வீட்டுத்துறையினரின் உற்பத்தி வெளியீடுகளை மதிப்பிடுவதற்காகவும் பொருத்தமான குறிப்பிட்ட நோக்கத்திற்குறிய அளவீடுகள் தொடங்கப்படவுள்ளன. நிரம்பல் மற்றும் பயன்பாட்டு அட்டவணைகள் குறைந்தது ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் மீள் மதிப்பீடு செய்யப்படவுள்ளது. மேலும், இவ்வபிவிருத்திகளுடன் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களமானது மாகாணரீதியிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருடாந்த மதிப்பீடுகளையும் வெளியிடுவதற்கு திட்டமிட்டுள்ளது.

மேலும் தேசிய கணக்குகள் முறைமையில் குறிப்பிடப்பட்டவாறு தொகுப்புச் செய்முறைகள் மதிப்பீட்டு செயன்முறைகளுக்கு இணங்கியுள்ளன என்பதுடன் பரிந்துரைக்கப்பட்ட வரிசைப்படுத்தப்பட்ட கணக்குகள் பின்தொடரப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் ஒழுங்குகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகையால், வங்கித்துறையினது பெறுமதி சேர்ப்பானது தேசிய கணக்குகள் முறைமையில் பரிந்துரைக்கப்பட்ட நிதியியல் இடைஈட்டு சேவைகளின் மறைமுக அளவீடுகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்படும். மேலும் வரிகள், மானியங்கள் அதேபோன்று வர்த்தகம் மற்றும் போக்குவரத்து கட்டணங்கள் என்பவற்றுக்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களும் புதிய பரிந்துரைகளுக்கு அமைய மீள்திருத்தப்படும்.

இவ்வபிவிருத்திகளுக்கு வசதிப்படுத்துவதற்காக தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் பொருளாதாரத்தின் அணைத்து துறைகளிலுமுள்ள பொருளாதார நடவடிக்கைகள் உள்ளடக்கப்படுவதனை வலுப்படுத்துகின்ற விதத்தில் தற்பொழுது பொருளாதார தொகைமதிப்பு 2013/14 இனை நடத்துகின்றது. தகவல் சேகரிப்பு செயன்முறைகள் ஐஎஸ்ஐசி ஆர் 4 இனை தொடருவதுடன் அது மதிப்பீட்டு நடவடிக்கை முறைகள் மேலும் முன்னேற்றங்களுக்கு இட்டுச்செல்கின்ற தகவல்களை வழங்கும். மேலும் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களமானது அதனது ஆரம்ப கட்டமாக ஒரு புள்ளிவிபரவியல் வியாபார பதிவேட்டை ஏற்கனவே ஆரம்பிப்பதற்கான முயற்சியை எடுத்துள்ளதுடன் இது நுட்பமானதாகவும் சௌகரியமானதொரு தரவு மூலமாகவும் செயற்படக்கூடும்.

பொருளாதார நடவடிக்கைகளின் உச்சளவான எண்ணிக்கை, நடைமுறை மதிப்பீட்டு நுட்பங்களின் முன்னேற்றம், விகிதங்களின் பயன்பாட்டை குறைவடையச் செய்தல் மற்றும் அளவீடுகளின் உதவியுடன் தற்போதைய விகிதங்களை புதுப்பித்தல் என்பன இவ்வபிவிருத்திகளின் ஒருங்கிணைந்த விளைவுடன் உள்ளடக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் விளைவாக இலங்கையின் தேசிய கணக்கீட்டு புள்ளிவிபரங்கள் 2008இன் தேசிய கணக்கீட்டு முறைமையுடன் எதிர்காலத்தில் இணங்கிச்செல்லுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இச் செயன்முறைக்கு அனைத்து பங்குதாரர்களும் உதவவேண்டியது அவர்களின் பொறுப்பாக உள்ளதோடு அவை சிறந்த தேசிய கணக்கீட்டு புள்ளிவிபரங்களின் கிடைப்பனவிற்கும் இட்டுச்செல்லும்.

மேலும், அஞ்சல் மற்றும் தொடர்பூட்டல், அரச மற்றும் தனியார் பணிகள் துணைத் துறைகளும் இவ்வாண்டில் பணிகள் துறையின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்துக்கு சாதகமாகப் பங்களிப்புச் செய்தன. இச்செயலாற்றம் நாட்டை ஆற்றல்மிக்க உலக மையமாக மாற்றியமைப்பதை நோக்கி எடுக்கப்பட்ட அரசாங்க முன்னெடுப்புக்களால் பாரியளவில் உதவப்பட்டது. இங்கு கூடிய கவனம், பணிகள் துறையின் அபிவிருத்தியுடன் நேரடியான தொடர்பைக் கொண்ட கடல்சார், வர்த்தக, சுற்றுலா மற்றும் அறிவுசார் துறைகளில் செலுத்தப்பட்டது.

## மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்

**மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத் துறை 2012இன் 3.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 5.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** மொ.உ.உற்பத்தியினுள் மிகப் பெரிய துணைத் துறையான மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துறையிலான மீட்சி ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பெருமளவில் உதவியது. முக்கிய வர்த்தகப் பங்காளிப் பொருளாதாரங்களிலான மீட்சி காரணமாக இவ்வாண்டின் பின்னரைப்பகுதியில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகிய இரு வர்த்தகத் துணைத் துறைகளிலான செயலாற்றம் இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் பெறுமதி கூட்டல் நியதிகளிலான வீழ்ச்சியை எதிரீடு செய்தது. இதேவேளை, உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்குப் பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகளிலிருந்து பெரிதும் நன்மையடைந்த உள்நாட்டு வர்த்தகத் துணைத் துறை உறுதியான வளர்ச்சியைப் பேணியது. மேலும், கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டையை சுதந்திர துறைமுகங்களாக அறிவித்தமை மற்றும் கட்டுநாயக்கா, கொக்கல மற்றும் மிரிஜாவில ஏற்றுமதி பதனிடல் வலயங்கள் மற்றும் மத்தள ராஜபக்ஷ பன்னாட்டு விமான நிலையத்தை காப்பிடப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டமை மற்றும் இவ்வாண்டின் பிற்பகுதியில் கப்பற்கட்டணங்களை மாற்றியமைத்தமை இத்துணைத் துறையின் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**இறக்குமதி வர்த்தகத் துணைத் துறை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 1.0 சதவீதம் கொண்ட குறைந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 2.9 சதவீத வளர்ச்சியை அடைந்தது.** இத்துணைத் துறை இவ்வாண்டின் பின்னரைப் பகுதியில் பலமாக மீட்சியடைந்து இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட பின்னடைவை எதிரீடு செய்தது. உள்நாட்டு தயாரிப்புத் துறையை ஊக்குவிப்பதற்கான உள்நாட்டுக் கொள்கைகள் மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒப்பீட்டு ரீதியில் உயர் மட்டங்களில் விளங்கிய உயர் வர்த்தகப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் இம்மிதமான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளாகும். இதன்படி, மொத்த இறக்குமதி அளவுச் சுட்டெண் சிறிதளவால் வீழ்ச்சியடைந்திருக்கையில் எண்ணெய் அல்லது இறக்குமதிகள் 2012ஐ விட உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்திருந்தன. இது முதலீட்டுப் பொருட்களிலான சிறு முன்னேற்றத்துடன் சேர்ந்து நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளிலான வளர்ச்சியால் பிரதிபலிக்கப்பட்டது. எனினும், வெப்ப மின்வலு உருவாக்கத்தில் குறைந்தளவில் தங்கியிருந்தமை காரணமாக வலு உருவாக்கத்துக்காக பயன்படுத்தப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதியிலான வீழ்ச்சி இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 2013இல் குறுக்கமடைந்தமைக்கு காரணமாய் அமைந்தது.

**ஏற்றுமதி வர்த்தகத் துணைத் துறை 2012இல் பதிவு செய்யப்பட்ட 0.8 சதவீதம் கொண்ட குறைந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 6.7 சதவீதம் கொண்ட கவர்ச்சிகரமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இத்துணைத் துறையிலான வளர்ச்சி பெரும்பாலும் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் ஏற்றுமதி வர்த்தகத்திலான குறிப்பிடத்தக்க விரிவாக்கம் காரணமாக அடையப்பட்டது. இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களில் அரைவாசிக்கும் கூடுதலாக இணைந்து வகைகூறும் யூரோ வலயம் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் உள்ளிட்ட உலகப் பொருளாதாரத்திலான படிப்படியான முன்னேற்றங்கள் இவ்வளர்ச்சிக்கு உதவியது. ஏற்றுமதி அளவுச் சுட்டெண்ணின் வளர்ச்சியின்படி, ஏற்றுமதி அளவுகள் குறிப்பாக இவ்வாண்டின் பின்னரைப்பகுதியில் சாதகமான அபிவிருத்திகளைப் பிரதிபலித்தன. இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் சில மாதங்களில் அனுபவித்த எதிர்க்கணிய வளர்ச்சி இவ்வாண்டின் பின்னரைப் பகுதியில் அனுபவித்த வளர்ச்சியால் விஞ்சப்பட்டமை இச்செயலாற்றம் பாராட்டத்தக்கதாகும். இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் ஓரளவு வீழ்ச்சியை அனுபவித்த ஆகக்கூடிய வருமானத்தை உழைக்கும் ஏற்றுமதித் துறையிலான கைத்தொழில் ஏற்றுமதிகள் ஆடை ஏற்றுமதிகளால் உந்தப்பட்டு இவ்வாண்டின் பின்னரைப் பகுதியில் மீட்சியடைந்தது.

**உள்நாட்டு வர்த்தகத் துணைத் துறை 2012இல் பதிவு செய்யப்பட்ட 6.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 6.9 சதவீதத்தால் சிறிதளவில் விரிவடைந்தது.** குறிப்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் உள்ளிட்ட வேளாண்மை மற்றும் கைத்தொழில் துறைகளுக்கான தொடர்ச்சியான அரசாங்க உதவி, திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் போன்ற வாழ்வாதார அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் உள்நாட்டு வர்த்தக துணைத் துறையிலான வளர்ச்சிக்கு உதவியது. உள்நாட்டுச் சந்தைக்கு தைத்த ஆடைகள் மற்றும் மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தியின் ஒரு பங்கை வழங்கும் போது இவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட வரிச் சலுகைகளிலிருந்து இத்துறை மேலும் நன்மையடைந்தது. எனினும், குறிப்பாக வேளாண்மை உற்பத்தியிலான மெதுவடைவு காரணமாக இத்துறை இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் வழங்கல் பக்கத்துத் தடைகளால் பாதிப்படைந்தது.

## போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல்

**போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துணைத் துறை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 6.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 9.4 சதவீதத்தால் கணிசமானளவில் விரிவடைந்தது.** இவ்வளர்ச்சியானது துணைத் துறையின் இரண்டு முதன்மைப் பங்களிப்பாளர்களான அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் துணைத் துறைகளுடன் சேர்ந்து போக்குவரத்து நடவடிக்கைகளின் விரிவாக்கத்தினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. போக்குவரத்து வலையமைப்பின் அபிவிருத்திகளினால் மேம்பட்ட உள்நாட்டு அசைவின் விளைவாக கேள்வி அதிகரித்தமையினால் போக்குவரத்துத் துணைத் துறையில் உயர் வளர்ச்சி காணப்பட்டது. தொடர்பூட்டல் துணைத் துறையில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சி மக்களின் வருமான மட்டங்களிலான உயர்வுடன் பெறுமதிசேர் பணிகளிலிருந்தான கேள்வியினால் உதவப்பட்டது. எனினும், சரக்குக் கையாளல் - துறைமுகங்கள் மற்றும் வான் போக்குவரத்து துணைத் துறைகள் ஆண்டின் முன்னரைப் பகுதியில் தொடர்ந்து மெதுவடைந்தமைக்கு உலகளாவிய பொருளாதாரத்தின் மெதுவான மீட்சியே முக்கிய காரணமாகும்.

**போக்குவரத்து துணைத் துறை 2012ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 6.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013 காலப்பகுதியில் 9.4 சதவீத ஆண்டு வளர்ச்சியினைப் பதிவு செய்து ஒரு உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்தினைப் பதிவு செய்துள்ளது.** பொதுத் துறை போக்குவரத்துப் பணிகளின் பயணிகள் பெட்டிகளில் ஏற்பட்ட மேம்பாட்டுடன் மேற்கொள்ளப்பட்ட வீதி மற்றும் புகையிரத வலையமைப்பு நிர்மாணத்தினூடாக போக்குவரத்து உட்கட்டுமான அபிவிருத்தி, பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து துணைத் துறையின் கணிசமானளவு விரிவாக்கத்திற்கு பெரிதும் பங்களித்தது. சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு போன்ற செயற்பாடுகளுக்காக அதிகரித்த உள்நாட்டு நகர்வு இத்துணைத் துறையின் வளர்ச்சிக்கு சாதகமாக பங்களிப்புச் செய்தது. இதன்படி, இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பேருந்து தொழிற்பாட்டாளர்கள் மற்றும் இலங்கைப் புகையிரப் பகுதியால் சேர்ந்து தொழிற்படுத்தப்படட பயணிகள் கிலோமீற்றர்கள் இவ்வாண்டில் விரிவடைந்தன. இதேவேளை, இரண்டு தேசிய வான் நிறுவனங்களான சிறிலங்கன் எயார்லையின்ஸ் மற்றும் மிகின் எயார் என்பவற்றால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்கள் 2013இல் 4.7 சதவீதத்தால் அதிகரித்தன. இத்துடன், புதிதாகத்

திறக்கப்பட்ட மத்தள ராஜபக்ஷ பன்னாட்டு விமான நிலையத்துடன் சேர்ந்து பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையம் விமானங்களின் எண்ணிக்கை மற்றும் இரு விமான நிலையங்களாலும் கையாளப்பட்ட பயணிகள் அசைவுகளை மேம்படுத்தியதன் மூலம் பணியை கணிசமானளவில் விரிவாக்கின. உள்நாட்டு வான் நிறுவனங்களால் பறக்கப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்கள் 7.8 மில்லியனை அடைந்து போக்குவரத்து துணைத் துறையின் பெறுமதி கூட்டலுக்குப் பங்களிப்புச் செய்தது.

**சரக்குக் கையாளல், துறைமுகங்கள் மற்றும் வான் போக்குவரத்து துணைத் துறை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 5.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 3.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சி இவ்வாண்டின் பின்னரைப்பகுதியில் வெளிநாட்டு வர்த்தகச் செயற்பாடுகளிலான மீட்சியால் சான்று பகிரப்பட்டது. எனினும், பின்னரைப் பகுதியிலான விரிவாக்கம் இத்துணைத் துறையின் மிதமான முதலரைப் பகுதியிலான செயலாற்றத்தை விஞ்சுவதற்குப் போதுமானதற்றதாக விளங்கி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் மெதுவான வளர்ச்சியை விளைவித்தது. கொழும்பு பன்னாட்டு கொள்கலன் ரேமினலின் உள்ளடக்கத்துடன் கொழும்புத் துறைமுகம் இவ்வாண்டில் மேலும் பலப்படுத்தப்பட்டதுடன் முன்னெப்போதுமில்லாத 4.31 மில்லியன் இருபது அடிக்குச் சமனான அலகுகள் கொண்ட வருடாந்தக் கொள்கலன் வெளியீட்டைப் பதிவு செய்து 2013இல் 2.8 சதவீத வளர்ச்சியை அடைந்தது. உள்நாட்டுக் கொள்கலன் வெளியீடு மற்றும் மாற்றிக் கப்பலேற்றல் அளவு (மீள அடுக்கிவைத்தல் நீங்கலாக) 2012இல் பதிவு செய்யப்பட்ட முறையே 2.5 சதவீதம் மற்றும் 1.9 சதவீத சுருக்கங்களுடன் ஒப்பிடுகையில் 1.1 சதவீதம் மற்றும் 4.7 சதவீத வருடாந்த வளர்ச்சிகளை அடைந்தன. இதேவேளை, வெளிநாட்டு வர்த்தகச் செயற்பாடுகளில் காணப்பட்ட வளர்ச்சிக்கு இணையாக இறக்கப்பட்ட மற்றும் ஏற்றப்பட்ட அளவுகள் இரண்டாலும் உதவப்பட்டு துறைமுகங்களால் கையாளப்பட்ட சரக்குத்தொன்களின் அளவும் இவ்வாண்டின் பின்னரைப் பகுதியை நோக்கி மீட்சியடைந்தது. மேலும், இவ்வாண்டில் வான் சரக்கு அளவிலான 4 சதவீத அதிகரிப்பு 194,039 மெற்றிக் தொன்களை அடைந்து இத்துணைத் துறையின் பெறுமதி கூட்டலுக்கும் துணைபுரிந்தது.

**அஞ்சல் மற்றும் தொடர்பூட்டல் துணைத் துறை 2012இன் 7.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 11.4 சதவீதத்தால் கணிசமானளவில் வளர்ச்சியடைந்தது.** இணைய இணைப்புக்களில் விரைவாக பெருமளவில் அதிகரித்துச் செல்லலிலான தொடர்ச்சி 47.3 சதவீத வளர்ச்சியால் அவதானிக்கப்பட்டது. இது குரல் பயன்பாட்டு நிமிடங்களிலான 1.6 சதவீதம் கொண்ட சிறு விரிவாக்கத்தை விஞ்சி குரல் பணிகளுக்குப் பதிலாக ஏனைய பெறுமதி கூட்டல் பணிகளின் பயன்பாட்டில் அண்மைக்கால அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கிறது. மேலும், கம்பியுள்ள வாடிக்கையாளர்களில் சிறிய அதிகரிப்பு இருந்த போதிலும் கம்பியல்லா வாடிக்கையாளர்களின் வீழ்ச்சியினால் நிலையான இணைப்புக்களில் பாரிய வீழ்ச்சி தொடர்ந்து காணப்பட்டது. இதேவேளை, அஞ்சல் திணைக்களம் தந்திப் பணிகளுக்குப் பதிலாக ரெலி - அஞ்சலைத் தொடக்கி வைத்து இவ்வாண்டில் முன்னோடிச் செயற்றிட்டமாக இலங்கை விரைந்த அஞ்சல் கூரியர் பணியை ஆரம்பித்த அதேவேளை, மரபுவழி அஞ்சல் மற்றும் பொதி கையாளல் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. குறிப்பாக, அறிவு மற்றும் வர்த்தக மையங்களை எய்துவதற்கான அபிலாசைகளை அடைவதற்கு நாட்டைப் பிராந்தியத்தில் உபாய ரீதியில் முக்கிய பொருளாதார நிலையமாக உருமாற்றம் செய்வதற்கு இத்துறையில் கணிசமான வளர்ச்சி அவசியமாகும்.

## சுற்றுலாவிடுதி மற்றும் உணவகங்கள்

**சுற்றுலாவிடுதி மற்றும் உணவகங்கள் துணைத் துறை 2012இல் பதிவு செய்யப்பட்ட 20.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 22.3 சதவீத வளர்ச்சியை அடைந்ததன் மூலம் அதன் உயர் வளர்ச்சிப் பாதையைத் தொடர்ந்தது.** இத்துறை இவ்வாண்டில் 1.27 மில்லியனுக்கும் கூடுதலான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து பாராட்டத்தக்க விதத்தில் செயலாற்றி ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியாக 26.7 சதவீதத்தைப் பதிவு செய்து சுற்றுலாவிலிருந்தான வருவாய்களை ஐ.அ.டொலர் 1.7 பில்லியனுக்கு அதிகரித்தது. பாதகமான உலகச் சூழலுக்கு மத்தியிலும் இவ்வளர்ச்சி 2012இல் பதிவு செய்த சாதனைகளை விஞ்சி தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக இக்கட்டத்தை அடைந்தது. வருகைகள் ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா நிறுவனத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான 6 சதவீதம் கொண்ட சுற்றுலா வளர்ச்சி மதிப்பீட்டையும் முழு உலகத்துக்குமான 5 சதவீத வளர்ச்சியையும் விஞ்சியது. மரபு ரீதியற்ற சந்தைகளிலிருந்து வெளிச்செல்லும் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் முன்னணியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட தொடர்பான அதிகாரசபைகளின் ஒருங்கிணைந்த முயற்சிகள் சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலா வருகைகளிலான அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டது. நாட்டினுள், இக்கைத்தொழில் பலமான உள்ளார்ந்த வளத்தைக் கொண்டுள்ளபோதிலும், வளர்ச்சி உத்வேகத்தின் தொடர்ச்சி,

சுற்றுலாக் கைத்தொழிலில் தோற்றம் பெற்றுவரும் போக்குகளைப் பூர்த்தி செய்யக்கூடிய கைத்தொழிலின் ஆற்றலில் பெரிதும் தங்கியுள்ளது. நாடு இயற்கையான மற்றும் கலாச்சார வளங்கள் இரண்டிலும் பல எண்ணிக்கையான கவரக்கூடிய இடங்களைக் கொண்டிருப்பதால், இலங்கை சூழல் சுற்றுலாவுக்கான புதிய சேருமிடங்களாக மேலும் முன்னேற்றமடையலாம். இது கூடிய உள்நாட்டுப் பங்கேற்பை ஊக்கப்படுத்துவதுடன் மரபுவழியிலான பெருமளவிலான சுற்றுலாவை விட நீண்ட காலத்துக்கு கூடியளவில் நீடித்து நிலைத்திருக்கக் கூடியதாகவும் இருக்கும். பிராந்தியத்தில் இந்தியா மற்றும் சீனாவுக்கு மிக அண்மையில் இலங்கை இருப்பதால், இந்நாடுகளின் மத்திய வகுப்பினரின் அதிகரிக்கும் வருமானம் மூலதனமாக்கப்படல் வேண்டும். மேலும், அண்மையில் முடிவடைந்த பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டமும் இலங்கையை முக்கிய சுற்றுலா மையமாக மீள்நிலைப்படுத்துவதற்கான அரிய சந்தர்ப்பத்தை வழங்கியது.

### வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து

**வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத் துணைத் துறையிலான பெறுமதிகூட்டல் 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 6.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் 5.9 சதவீதத்தால் அதிகரித்தது.** இத்துணைத் துறையிலான செயலாற்றம், தனியார் துறைக் கடன் வளர்ச்சியை மெதுவாக்கிய பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு 2012இல் பின்பற்றப்பட்ட கட்டுப்பாட்டு நாணயக் கொள்கை நிலைமைகளின் காலம் தாழ்த்திய விளைவில் பிரதிபலிக்கப்பட்டது. எனினும், கொடுகடன் உச்சவரம்பு உள்ளிட்ட இவ்வழிமுறைகள் தணிக்கப்பட்டதற்கு மத்தியிலும், வர்த்தக வங்கிகளிலிருந்து தனியார் துறையால் பெறப்பட்ட கொடுகடன் 2013 திசெம்பரில் மீண்டும் மாறும் வரை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து இத்துறையின் இலாபகரத்தன்மையைக் குறைத்தது. பன்னாட்டுத் தங்க விலைகளிலான வீழ்ச்சியின் விளைவாக அடகுவைப்புக்கான முற்பணங்களிலான கூரிய வீழ்ச்சியும் கொடுகடனிலான மெதுவடைவுக்கு முக்கிய பங்களிப்பாளராக விளங்கியது. மேலும், வட்டி வீத அளவுகளை ஒடுக்கியமை, வட்டியல்லாச் செலவினங்களிலான அதிகரிப்பு மற்றும் இக்காலப்பகுதியிலான ஏற்பாடுகள் மற்றும் பதிவழித்தல் போன்றவை நிதியியல் துறையின் இலாபகரத்தன்மையிலான வீழ்ச்சிக்கு வழியமைத்தன. ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிப் பிரிவுகள் இரண்டினதும் மொத்தக் கட்டுப்பணங்களிலான மந்தமான அதிகரிப்புக்கு மத்தியிலும் உயர் தொழிற்பாட்டுச் செலவுகள் மற்றும் முதலீட்டு வருமானத்திலான வீழ்ச்சியுடன் காப்புறுதி துணைத் துறையின் இலாபங்களும் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், இவ்வாண்டு காலப்பகுதியில் நிதியியல் நிறுவனங்களுக்கான நிதியங்களின் செலவிலான வீழ்ச்சிக்கு வழியமைத்த நாணயக் கொள்கை நிலையைத் தளர்த்தியமை கூடிய விரைவில் நிதியியல் முறைமையூடாக பொருளாதாரத்துக்கு உருமாற்றம் செய்யப்படுமெனஎதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நிதியியல் துறையின் உயர் அளவிலான ஊடுருவல் கிளை வலையமைப்பின் மேலதிக விரிவாக்கத்தால் பிரதிபலிக்கப்பட்டது. மேலும், பொருளாதாரச் செயற்பாடுகளுக்கான வசதிப்படுத்துநராக இத்துறையின் அதிகரித்த செயலாற்றத்தின் ஊக்குவித்தமை காரணமாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதற்கு நிதியியல் துறையை மீள்எழுச்சியுள்ளதாகவும், பலமானதாகவும் மற்றும் சிறந்த முறையில் நிலைப்படுத்தி ஒருங்கிணைப்பதற்காக வரவு செலவுத்திட்டத்தின் பின் முக்கிய சீர்திருத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

### அரச பணிகள்

**அரச பணிகள் துணைத் துறை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 1.4 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 2.8 சதவீதத்தால் விரிவடைந்தது.** 2013இல் பட்டதாரிப் பயிலுனர்களை நிரந்தரமான பதவிக்கு உள்வாங்கியமை இத்துறையின் வளர்ச்சியை நோக்கிய பங்களிப்புக் காரணியாகும். இதன்படி, மொத்த அரச துறை தொழில்நிலைத் தளம் இவ்வாண்டினுள் 2.7 சதவீதத்தால் அதிகரித்தது.

### தனியார் பணிகள்

**தனியார் பணிகள் துணைத் துறையிலான பெறுமதிகூட்டல் 2012இல் பதிவு செய்யப்பட்ட 5.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 7.3 சதவீதத்தால் அதிகரித்தது.** தனியார் கல்வி மற்றும் மருத்துவப் பணிகள் போன்ற பொருளாதாரச் செயற்பாடுகள் இத்துணைத் துறையின் பெறுமதிகூட்டலை அதிகரிப்பதற்கு கணிசமானளவில் பங்களிப்புச் செய்தன. நாட்டில் செலவழிக்கத்தக்க வருமான மட்டங்களிலான அதிகரிப்பு மற்றும் மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றம் போன்றவற்றால் தனியார் பணிகளுக்கான கேள்வியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.3 செலவினம்

**2013இல் அவதானிக்கப்பட்ட உயர் வளர்ச்சி உத்வேகம், செலவின அணுகுமுறை மதிப்பீடுகளின்படி உண்மை நியதிகளில் முதலீடு மற்றும் நுகர்வு இரண்டிலுமான விரிவாக்கத்தால் ஏற்பட்டது.** முதலீட்டுச் சபை செயற்பாடுகளிலான செலவினம் 2012 உடன் ஒப்பிடுகையில்

உண்மை நியதிகளில் உயர்வீதத்தில் அதிகரித்ததுடன், பொருளாதாரத்தின் உயர் வளர்ச்சி உத்வேகத்தைத் தக்கவைத்தது. முதலீட்டுச் செயற்பாடுகளிலான செலவிடல் அதிகரிப்பு குறிப்பாக வதிவிடக் கட்டடங்கள் மற்றும் ஏனைய நிர்மானச் செயற்பாடுகளுடன் தொடர்பான தனியார் மற்றும் அரச துறைகள் இரண்டிலும் காணத்தக்கதாக இருந்தது. 2012 உடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி மெதுவடைந்த போதிலும், 2013இல் உள்நாட்டு உற்பத்தி மற்றும் நுகர்வுப் பொருட்களிலான அதிகரிப்பால் பிரதிபலிக்கப்பட்டவாறு நுகர்வுச் செலவினம் உண்மை வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதேவேளை, 2013இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி உள்ளடக்கச் சுருக்கியின் வளர்ச்சி 2012இன் 8.9 சதவீதத்திலிருந்து 6.7 சதவீதத்துக்கு மெதுவடைவால் பிரதிபலிக்கப்பட்டவாறான மெதுவடைந்த விலை மட்டங்களின் தாக்கம் பெயரளவு நியதிகளிலான செலவின மதிப்பீடுகளில் மெதுவடைவுக்குப் பங்களிப்புச் செய்தது. மேலும், நாட்டின் மொத்த நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினமான மொத்த உள்நாட்டுக் கேள்வி 2013இல் பெயரளவு நியதிகளில் 10.3 சதவீதத்தால் ரூ.9,500 பில்லியனுக்கு வளர்ச்சியடைந்தது.

## நுகர்வு

**பொருளாதாரத்தின் முக்கிய செலவின வகையான நுகர்வுச் செலவினம் 2012இல் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சியை விட குறைந்த வீதத்திலாயினும் 2013இல் பெயரளவு நியதிகளில் ரூ.6,935 பில்லியனுக்கு 10.1 சதவீதத்தால் மேலும் விரிவடைந்தது.** மொத்த நுகர்வினுள், 2013இல் அரச துறையிலான விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் தனியார்துறைச் செலவினம் குறைந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தது. அரச நுகர்விலான இவ்விரிவாக்கம், முக்கியமாக அரச துறையின் சம்பளங்கள் மற்றும் படிகள் மீதான செலவினத்திலான வளர்ச்சியால் உந்தப்பட்டது. இவ்வாண்டின் ஆரம்பத்தில் சுருக்கமடைந்த நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் குறிப்பாக ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியிலான வளர்ச்சியுடன் இவ்வாண்டுப் பகுதியில் மீட்சியடைந்தது. இதேவேளை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட மொத்த தனியாள் கடன்கள் மற்றும் முற்பணங்கள் இவ்வாண்டுக் காலத்தில் நீடித்த நுகர்வோர் செலுத்த வேண்டிய முற்பணங்களில் ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றத்துக்கு மத்தியிலும் அடவு முற்பணங்களிலான வீழ்ச்சி காரணமாக வீழ்ச்சியடைந்தன. எனினும், இவ்வாண்டில் நிலவிய குறைந்த பணவீக்கச் சூழலுடன் சேர்ந்து செலவழிக்கத்தக்க வருமானங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு நுகர்வோரின் கொள்வனவு ஆற்றல் அதிகரிப்புக்கு உதவியது.

**உணவு, பானங்கள் மற்றும் புகையிலை வகை போன்றவை தனியார் நுகர்வுச் செலவினத்துக்கான முக்கிய பங்களிப்பாளராக தொடர்ந்து விளங்கி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 7.7சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 7.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** எனினும். மக்களின் செலவழிக்கதக்க வருமான மட்டங்கள் அதிகரித்தமையால் உணவு மற்றும் தொடர்பான பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மீதான செலவினத்தின் பங்கு 37.7 சதவீதத்திலிருந்து 36.9 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. 2012 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் கொழும்பு நுகர்வோர்

அட்டவணை 2.8

கூட்டுக் கேள்வி

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ரூ.மில்) | | | நிலையான (2002) விலைகள் (ரூ.மில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 (அ) | 2013 (ஆ) | 2011 | 2012 (அ) | 2013 (ஆ) |
| **அ. உள்நாட்டுக் கேள்வி** | | | | | | |
| நுகர்வு | 5,536,095 | 6,295,894 | 6,934,816 | 2,422,786 | 2,555,330 | 2,638,171 |
| (% மாற்றம்) | 22.4 | 13.7 | 10.1 | 12.9 | 5.5 | 3.2 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 1,959,483 | 2,318,253 | 2,565,498 | 827,456 | 881,173 | 968,072 |
| (% மாற்றம்) | 26.8 | 18.3 | 10.7 | 7.7 | 6.5 | 9.9 |
| **மொத்த உள்நாட்டு கேள்வி** | **7,495,578** | **8,614,147** | **9,500,314** | **3,250,242** | **3,436,503** | **3,606,243** |
| **(% மாற்றம்)** | **23.5** | **14.9** | **10.3** | **11.6** | **5.7** | **4.9** |
| **ஆ. வெளிநாட்டுக் கேள்வி** | | | | | | |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 1,508,565 | 1,730,467 | 1,949,267 | 803,507 | 804,793 | 852,276 |
| (% மாற்றம்) | 20.3 | 14.7 | 12.6 | 11.0 | 0.2 | 5.9 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 2,460,830 | 2,766,060 | 2,775,711 | 1,190,057 | 1,196,008 | 1,192,420 |
| (% மாற்றம்) | 43.1 | 12.4 | 0.3 | 20.0 | 0.5 | -0.3 |
| **தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-952,265** | **-1,035,593** | **-826,444** | **-386,551** | **-391,215** | **-340,144** |
| **இ. மொத்த கேள்வி** | **6,543,313** | **7,578,554** | **8,673,870** | **2,863,691** | **3,045,288** | **3,266,099** |
| **(% மாற்றம்)** | **16.8** | **15.8** | **14.5** | **8.2** | **6.3** | **7.3** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

விலைச்சுட்டெண் ஆண்டுச் சராசரி அடிப்படையில் உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகை துணை விலைச்சுட்டெண் விலை மட்டங்களிலான அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இவ்வாண்டினுள், உணவு மற்றும் பானங்களின் இறக்குமதிகளும் மீட்சியடைந்து கடந்த ஆண்டின் 4.2 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு நாணயப் பெறுமதி நியதிகளில் 6.3 சதவீத விரிவாக்கத்தைப் பதிவு செய்தது. இதேவேளை, ஆடை மற்றும் பாதணி மீதான செலவினம் 10 சதவீதத்துக்கு மெதுவடைந்தது. இது இவ்வாண்டில் இவ்வகையின் ஆண்டுச் சராசரி பணவீக்கத்தால் 9.8 சதவீதத்திலிருந்து 5.4 சதவீதத்துக்கு ஏற்பட்ட வீழ்ச்சியால் விபரிக்கப்பட்டதுடன் பெறுமதி மற்றும் அளவு நியதிகள் இரண்டிலும் நுகர்வு நோக்கங்களுக்காக ஆடை மற்றும் துணைப்பொருட்களின் இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவு மெதுவடைந்து காணப்பட்டது. எனினும், ஆடை உற்பத்திகள் மீதான தனியார் செலவினம் வரிச் சலுகைகளால் சாதகமாக தாக்கத்தை ஏற்படுத்தியது. இவ்வரிச் சலுகைகள் ஏற்றுமதியை மையமாகக் கொண்ட ஆடை தயாரிப்பாளர்கள் அவர்களின் உற்பத்திகளை உள்ளூர் சந்தையில் விற்பதற்கு அனுமதியளித்தன.

**வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் மீதான தனியார் நுகர்வுச் செலவு 2013 இல் 17.4 சதவீதத்தால் விரிவடைந்தது.** இதன்படி, இவ்வகையின் பங்கு இவ்வாண்டில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் 13.2 சதவீத்திற்கு வகை கூறியது. மின்வலு மற்றும் நீர்வழங்கல் வலையமைப்பிலான விரிவாக்கம் நுகர்வோர் கணக்குகளிலான வளர்ச்சியால் பிரதிபலிக்கப்பட்டது. மேலும், டீசல், பெற்றோல், திரவப் பெற்றோலிய வாயு மற்றும் மின்வலு உள்ளிட்ட சில பொருட்களின் நிருவாக ரீதியில் தீர்மானிக்கப்பட்ட விலைகளின் மேல்நோக்கிய திருத்தங்கள் தனியார் நுகர்வுச் செலவினத்திலான அதிகரிப்புக்குச் பங்களிப்புச் செய்ததுடன் இத்துணைத் தொகுதியின் ஆண்டுச் சராசரி பணவீக்க வீதத்தை கடந்த ஆண்டின் 9.6 சதவீதத்திலிருந்து இவ்வாண்டில் 10.7 சதவீதத்துக்கு அதிகரிக்கச் செய்தது. இதன் விளைவாக, உள்நாட்டுத் துறைக்கு பகிர்த்தளிக்கப்பட்ட மின்வலு அலகுகளின் எண்ணிக்கை சிறிதளவால் வீழ்ச்சியடைந்த போதிலும் இவ்வாண்டின் மின்வலு மீதான தனியார் நுகர்வுச் செலவினம் அதிகரித்தது.

**தனியார் நுகர்வுச் செலவினத்தில் இரண்டாவது பெரிய செலவின வகையான போக்குவரத்துச் செலவினம் 2013இல் 9.0 சதவீதம் கொண்ட மெதுவான வீதத்தில் வளர்ச்சியடைந்தது.** பேருந்துக் கட்டணங்கள் 2012 பெப்புருவரி நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 20 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2013 நவெம்பர் முற்பகுதியில் சார்பீதியில் 7 சதவீதம் கொண்ட குறைந்த வீதத்தில் அதிகரிக்கப்பட்டன. மேலும், பொதுவாக இவ்வாண்டில் போக்குவரத்து தொடர்பான செலவினங்களிலான வளர்ச்சி மெதுவடைந்ததுடன், இது கடந்த ஆண்டின் 21.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 4.6 சதவீதத்துக்கு பெருமளவுக்கு வீழ்ச்சியடைந்து இவ்வகையின் ஆண்டுச்சராசரிப் பணவீக்க வீதத்தால் பிரதிபலிக்கப்பட்டது.

**நலத்துறை மற்றும் கல்வி மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2013இல் முறையே 11 சதவீதத்தாலும், 26.7 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தது.** பொது மக்களின்

**அட்டவணை 2.9** நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு

| விடயம் | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு (%) 2011 | 2012 (அ) | 2013 (ஆ) | சதவீத மாற்றம் (%) 12/11 | 13/12 |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 40.4 | 37.7 | 36.9 | 7.7 | 7.6 |
| 2. புடவையும், காலணியும் | 5.5 | 5.4 | 5.4 | 13.3 | 10.0 |
| 3. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 12.5 | 12.4 | 13.2 | 14.7 | 17.4 |
| 4. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வீட்டின் தொடர்ச்சியான பராமரிப்பு | 4.3 | 3.9 | 3.8 | 5.4 | 6.4 |
| 5. நலம் | 1.8 | 1.6 | 1.6 | 3.7 | 11.0 |
| 6. போக்குவரத்து | 21.1 | 23.5 | 23.3 | 28.8 | 9.0 |
| 7. ஓய்வு, பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் | 2.1 | 1.9 | 1.9 | 6.6 | 9.1 |
| 8. கல்வி | 0.3 | 0.4 | 0.4 | 26.1 | 26.7 |
| 9. விடுதிகள், தேநீர்சாலைகள் மற்றும் உணவகங்கள் | 1.3 | 1.7 | 2.0 | 50.5 | 29.5 |
| 10. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 4.1 | 3.9 | 3.8 | 10.2 | 7.8 |
| 11. வெளிநாட்டு வதியுள்ளோர் செலவு | 9.3 | 11.1 | 11.8 | 37.2 | 17.0 |
| 12. கழிக்குக: வதிவற்றோர் செலவு | 2.7 | 3.5 | 4.2 | 48.9 | 32.1 |
| மொத்த தனியார் நுகர்வுச் செலவு | 100.0 | 100.0 | 100.0 | 15.5 | 9.9 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

அதிகரித்த கொள்வனவு ஆற்றல் தனியார் நலம் மற்றும் கல்விப் பணிகளிலான கேள்வியின் அதிகரிப்புக்கு வழிவகுத்தது. எனினும், முக்கியமாக அரசதுறை நலம் மற்றும் கல்விப் பணிகளின் பங்கு காரணமாக இவ்விரு துறைகளின் பங்கு ஒப்பீட்டு ரீதியில் குறைவாக விளங்கியது.

**பொழுதுபோக்கு மற்றும் களியாட்டம் மற்றும் கலாச்சாரச் செயற்பாடுகள் அதேபோன்று விடுதிகள், உணவுக்கடைகள் மற்றும் உணவகங்கள் வகை மீதான செலவினம் மக்களின் செலவழிக்கத்தக்க வருமான மட்டங்களிலான அதிகரிப்புடன் இணங்கிச் செல்லும் வகையில் வளர்ச்சியடைந்தது.** நாட்டில் சமாதானச் சூழல் தொடர்ந்து காணப்படுவதால், பொழுதுபோக்கு, கலாச்சாரம் மற்றும் விளையாட்டுச் செயற்பாடுகள் மீதான செலவினம் 2013இல் அதிகரித்தது. மறுபுறத்தில், வாழ்க்கை முறையிலான நுகர்விற்கு உதவி வழங்கும் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட பணிகள் மீதான செலவிடல் மற்றும் நாட்டினுள் அதிகரித்த அசைவுடன் தங்குமிட வசதிகளுக்கான கேள்வி என்பன இவ்விரிவாக்கத்துக்கு உதவின. அதன்படி, இவ்விரு வகைகளின் தனியார் நுகர்வுச் வெலவினத்தின் பங்கு 2013இல் முறையே 1.9 சதவீதம் மற்றும் 2 சதவீதமாக விளங்கியது.

**அரச செலவினமும் கடந்த ஆண்டின் 5.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 11.3 சதவீதத்தால் விரிவடைந்தது.** குறிப்பாக கூலிச் செலவிலான அதிகரிப்பு இவ்வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது. ரூ.750 மற்றும் ரூ.2,500 வீச்சினுள் அடிப்படைச் சம்பளத்திலான 5 சதவீதம் கொண்ட சிறப்புப்படி மற்றும் மாதமொன்றுக்கு அரச துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படியிலான அதிகரிப்புடன் பட்டதாரிப் பயிலுனர்கள் நிரந்தரப் பதவிகளுக்கு உள்ளீர்க்கப்பட்டமையால் இவ்வாண்டில் அரசின் நுகர்வுச் செலவினம் அதிகரித்தது. அதேவேளை, ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான அரச மீண்டெழும் செலவினமும் ஆண்டுக் காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. மேலும், வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளுக்கமைய மீண்டெழும் செலவினத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் எரிபொருள், மின்வலு, நீர் மற்றும் போக்குவரத்துச் செலவினம் மற்றும் மேலதிக நேரக்கொடுப்பனவு தொடர்பான அரச செலவிடல் முன்மதியான முகாமைத்துவத்தை நோக்கி சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

## முதலீடு


**எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய உதவுகாரணியான முதலீடு 2012இல் பதிவு செய்யப்பட்ட 18.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 10.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** அவதானிக்கப்பட்ட வளர்ச்சி பெரும்பாலும் முதலீட்டின் பங்கிற்கு வகைகூறும் கட்டடவாக்கச் செயற்பாடுகளிலான முக்கிய விரிவாக்கத்தால் உந்தப்பட்டது. இது, உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை உள்ளடக்கிய வதிவிட மற்றும் ஏனைய கட்டடவாக்கச் செயற்பாடுகள் இரண்டிலுமான முதலீடுகளிலான வளர்ச்சியால் உதவப்பட்டது. இதன் காரணமாக, முதலீடு மீதான மொத்தச் செலவினம் 2013இல் ரூ.2,565 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 2012இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 30.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 29.6 சதவீதமாகும். இதேவேளை, 2013இல் முதலீட்டுச் செலவினமும் உண்மை நியதிகளில் 9.9 சதவீதத்தால் உயர்வடைந்தது. ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வட்டி வீதங்களூடாக நாணயக் கொள்கை நிலை தளர்த்தப்படுவதன் கடுமையான தாக்கம், கொடுகடன் வளர்ச்சியிலான விரிவாக்கத்துடன் எதிர்காலத்தில் முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான வளங்களின் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.

**மொத்த முதலீட்டில் 76.8 சதவீதத்துக்கு வகைகூறும் தனியார் துறை முதலீடு 2013இல் 9.7 சதவீதத்தில் வளர்ச்சியடைந்தது.** வெளிநாட்டு முதலீடுகளை உள்ளடக்கிய தனியார் துறை முதலீடுகளிலான தொடர்ச்சியான வளர்ச்சி முன்னேற்றமடைந்த முதலீட்டாளர் நம்பிக்கையை பிரதிபலித்தது. இது, முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு 2013இல் பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கை நிலையை தளர்த்துவதன் மூலம் மேலும் உதவப்பட்டது. தனியார் துறையால் மேற்கொள்ளப்பட்ட உயர் மட்ட முதலீடு, வீடமைப்பு, தொடர்மாடி வீட்டுச் செயற்றிட்டங்கள் மற்றும் பாரிய சுற்றுலா விடுதி அபிவிருத்திகள் போன்ற துறைகளில் புலனாகிறது. இவ்வாண்டில் அளவு நியதிகளில் பொறி மற்றும் கருவி, மற்றும் கட்டடப் பொருட்களின் அதிகரித்த இறக்குமதிகளுடன் பொருளாதாரத்துக்கு மூலப்பொருள் தொடர்பான முதலீட்டுப் பாய்ச்சலில் பிரதிபலிக்கப்பட்டது.

**2013ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், கொடுகடன்கள் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு, தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகளின் உட்பாய்ச்சல்களுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் 1,391 மில்லியனுக்கு அதிகரித்தது.** உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சலானது, வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி,

கடைத்தொகுதி அலுவலக துணைத் துறைகளுக்கான உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியுடன் ஐ.அ.டொலர் 787 மில்லியனாக உயர்ந்து காணப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் இத்தகைய உட்பாய்ச்சல்களின் ஏனைய பெருமளவிலான பெறுநர்களாக, தொலைபேசி மற்றும் தொலைத் தொடர்பூட்டல் வலையமைப்பு மற்றும் துறைமுக கொள்கலன் முனைக்கோடிகளின் துணைத் துறைகள் காணப்பட்டன. தயாரிப்புத் துறையானது புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள்; இரசாயனம், நிலக்கரி, பெற்றோலியம்; உலோகமல்லாத கனிமப்பொருட்கள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் போன்ற துணைத் துறைகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் நேர்க்கணிய வளர்ச்சியின் காரணமாக 25 சதவீதத்திற்கும் அதிகமான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களை பெற்றுள்ளது. அதன்படி, 2013 காலப்பகுதியில் தயாரிப்பு துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் 359.8 மில்லியனுக்கு 16.9 சதவீதத்தினால் அதிகரித்தது. 2013 காலப்பகுதியில் பணிகள் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சலானது ஐ.அ.டொலர் 236 மில்லியனுக்கு வகைகூறின. நாடுகளின் நியதிகளில், சீனா (ஐ.அ.டொலர் 240 மில்லியன்), மலேசியா (ஐ.அ.டொலர் 176 மில்லியன்), ஹொங்கொங் (ஐ.அ.டொலர் 139 மில்லியன்), நெதர்லாந்து (ஐ.அ.டொலர் 118 மில்லியன்), சிங்கப்பூர் (ஐ.அ.டொலர் 112 மில்லியன்) மற்றும் ஐக்கிய அரபு எமிரெட்ஸ் (ஐ.அ.டொலர் 111 மில்லியன்) போன்றவை 2013 காலப்பகுதியின் பாரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு பங்களிப்பாளர்களாக இருந்தனர்.

**வரைபடம் 2.6** முதலீட்டுச்சபை தொழில் முயற்சிகளின் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (ஐ.அ.டொ. மில்லியன்)




முதலீட்டுச் சபை சட்டத்தின் பிரிவு 17 மற்றும் 16இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கான மொத்த மதிப்பிடப்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ.502 பில்லியனாக மதிப்பிடப்பட்டது. பணிகள் துறையானது ரூ.385 மில்லியன் மதிப்புடன் மொத்த முதலீட்டில் 75 சதவீதத்திற்கும் அதிகமாகப் பங்களித்திருந்தன. தயாரிப்புத் துறைக்கு பாரிய பங்களிப்பு செய்த உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்தித் துறையானது ரூ.27 மில்லியன் கொண்ட மதிப்பிடப்பட்ட முதலீட்டைப் பதிவு செய்தது. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீடானது 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ.530 மில்லியனாக பதிவு செய்யப்பட்டது. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17 மற்றும் 16இன் கீழ் வர்த்தகச் செயற்பாடுகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் ஒட்டுமொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு 2013ஆம் ஆண்டின் முடிவில் ரூ.4,379 பில்லியனாகக் காணப்பட்டது. 2013இல் பெறப்பட்ட செயற்றிட்ட முதலீடுகள்

**அட்டவணை 2.10** இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட முதலீடுகள் (ரூ. மில்லியன்) | | | | | | தொழிலாளர் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 (அ) | 2013 (ஆ) | 2012 (அ) | | | 2013 (ஆ) | | | 2012 (அ) | 2013 (ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்) | | | | | | | | | | |
| அனுமதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 269 | 205 | 471,149 | 235,799 | 706,948 | 288,436 | 213,076 | 501,512 | 58,458 | 32,405 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 237 | 169 | 467,505 | 235,450 | 702,955 | 284,286 | 212,846 | 497,132 | 56,288 | 30,424 |
| பிரிவு 16இன் கீழ் | 32 | 36 | 3,644 | 348 | 3,992 | 4,150 | 230 | 4,380 | 2,170 | 1,981 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 162 | 138 | 273,008 | 132,386 | 405,394 | 318,527 | 211,440 | 529,967 | 37,927 | 35,724 |
| பிரிவு 17இன் கீழ் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ) (உ) | 2,045 | 1,997 | 828,313 | 452,524 | 1,280,837 | 958,958 | 553,063 | 1,512,021 | வி.கி. | வி.கி. |
| வர்த்தகத் தொழிற்பாடுகள் (ஈ) | 2,704 | 2,656 | 323,958 | 4,024,830 | 4,348,788 | 338,059 | 4,040,816 | 4,378,876 | 414,436 | 397,295 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 1,998 | 1,944 | 302,517 | 4,014,708 | 4,317,224 | 316,381 | 4,030,601 | 4,346,981 | 381,081 | 363,789 |
| பிரிவு 16இன் கீழ் (ஈ) | 706 | 712 | 21,441 | 10,122 | 31,564 | 21,678 | 10,216 | 31,894 | 33,355 | 33,506 |
| **கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு** | | | | | | | | | | |
| பதிவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் (ஈ) | 2,048 | 2,100 | - | - | 153,303 | - | - | 202,219 | 303,762 | 305,161 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை
(உ) ஒன்றுசேர்ந்த உண்மையான முதலீடுகளின் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது.
குறிப்பு : முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் முதலீட்டு மட்டம் அல்லது ஏனைய குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பூர்த்திக்குட்பட்டு சுங்க மற்றும் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இருந்து விலக்களிக்கப்பட்டன.

மூலங்கள் : இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

சிறப்புக் குறிப்பு 3

## உலகளாவிய சுட்டெண்கள் மீதான பார்வை

உலகளாவிய சுட்டெண்கள் பன்னாட்டு போட்டித்தன்மை, வியாபாரம் செய்தலை இலகுபடுத்தல், ஊழல், பொருளாதாரச் சுதந்திரம், சட்ட விதி, அரசாங்கத்தின் காத்திரமான தன்மை, அரசியல் உறுதிப்பாடு, பேச்சு மற்றும் பொறுப்புக் கூறும் தன்மை ஒழுங்குபடுத்தல் தரம் போன்ற பரந்துபட்ட விடயங்களில் நாடுகளைத் தரப்படுத்துகின்றன. பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்கையில் பல ஆர்வலர்கள் இச்சுட்டெண்களினால் வழங்கப்படும் தகவலைப் பயன்படுத்துவதனால், ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் துணைபுரிவதில் இந்த நாடுகளின் தரப்படுத்தல்கள் பயன்மிக்க வகிபாகத்தைக் கொண்டிருக்கிறது. மிக முக்கியமாக, முதலீட்டாளர்கள் இன்னொரு நாட்டில் தமது வியாபாரத் தொடர்புகளை மேற்கொள்ளும் முன்னர் இத்தரமிடல்களை கவனத்திற் கொள்கின்றனர். மேலும் நாட்டிற்கான தரமிடல் முகவர்கள், பன்னாட்டு உதவி வழங்கும் முகவர்கள் மற்றும் தனிப்பட்ட அரசாங்கங்கள் போன்றனவும் ஒரு நாட்டின் வெளிப்பாட்டை பிராந்தியத்திற்குள்ளாகவும் கடந்தும் மதிப்பிடுவதற்கும் ஒப்பிடுவதற்கும் இச்சுட்டெண்களைப் பயன்படுத்துகின்றன.

### தொகுப்புக்கான பார்வை

இச்சுட்டெண்களை தொகுப்பதில் வழக்கமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச துறை நிறுவனங்கள் ஈடுபடுகின்றன. தொகுக்கும் அதிகாரசபைகள் தேவையான தகவலை சுயமாகத் தயாரிக்கப்பட்ட அளவீடுகள் அல்லது ஏனைய நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்ட அளவீடுகள், வர்த்தக இடர்நேர்வுத் தரமிடல் முகவர்களின் நாடு தொடர்பான மதிப்பீடுகள் வர்த்தக வியாபார தகவல் வழங்குநர்கள் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள், சிந்தனைக் குழுக்கள் மற்றும் பல்புடை உதவி முகவர்கள், தனிப்பட்டவர்களின் நிபுணத்துவ அபிப்பிராயங்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற தரவுத் தளங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தொடர்புடைய நாட்டின் இரண்டாந்தரப் பேரண்ட பொருளாதாரத் தரவுடன் இணைந்து ஏனைய பல்வேறு சுட்டெண்களிலிருந்து பெறப்பட்ட புள்ளிகள் உள்ளிட்ட பல்வேறு இணைந்த தரவு மூலங்களிலிருந்து பெற்றுக் கொண்டன. சுட்டெண்களைத் தொகுக்கும் போது, சில சுட்டெண்கள் இன்னொரு சுட்டெண்ணிலிருந்து பெறப்பட்ட பெறுபேறுகளைப் பயன்படுத்துவதனால் இச்சுட்டெண்கள் ஒன்றுடனொன்று தொடர்புபட்டவை என்பது தெளிவாகின்றது. இப்பிரித்தெடுக்கப்பட்ட தகவலானது சில சந்தர்ப்பங்களில், தொடர்பான சுட்டெண்ணுக்கான சிறப்பில்வு வாய்ந்த நிறையிடும் கட்டமைப்புக்கள் மற்றும் முறையியல்களைப் பயன்படுத்தி துணைச் சுட்டிகளுடன் தனியொரு சுட்டெண்ணாகத் தொகுக்கப்படுகின்றது.

### பிரச்சனைகள்

குறிப்பிடப்பட்ட சில சுட்டெண்களின் தொகுப்பானது பூந்துணர்வை அடிப்படையாகக் கொண்டவையாகும். எனினும் பூந்துணர்வைப் பயன்படுத்துவதன் ஏற்புடைமையானது பெரும்பாலும் விவாதத்திற்குரியது. பூந்துணர்வானது பொதுவாக விடயம் சார்ந்ததாக இருப்பதுடன் தனிப்பட்ட ரீதியானதும் கலாச்சார ரீதியானதுமான பக்கச்சார்பைப் பிரதிபலிக்கிறது. உதாரணமாக "உலகளாவிய போட்டித்தன்மை சுட்டெண்" இன் கணிப்பானது, பிரதானமாக வியாபார நிறைவேற்றுநர்களின் பூந்துணர்வு மாதிரியான "நிறைவேற்றுநர் அபிப்பிராய அளவீட்டை" அடிப்படையாகக் கொண்டது. இலங்கையில் சேகரிக்கப்பட்ட 2012 அளவீட்டுத் தரவுகள் 2011இன் பெறுபேறுகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு வேறுபடுவதாக உலகளாவிய போட்டித்தன்மை அறிக்கை 2012 - 2013 குறிப்பிடுகிறது. அதன் பின்னரான பகுப்பாய்வானது, இவ்வேறுபாடு, பேரண்டப் பொருளாதாரத் தரவு உள்ளிட்ட ஏனைய தகவலிலிருந்து பெறப்பட்ட குறிகாட்டிகளிலான அதேபோன்ற போக்குடன் இணங்கிச் செல்லாததை வெளிப்படுத்தின. மேலும், நாட்டின் அண்மைய அபிவிருத்திகள், அவதானிக்கப்பட்ட பாரிய தளம்பல்களுக்கான போதிய நியாயப்படுத்தல்களை வழங்கவில்லை. ஆகையால், அளவீட்டுப் பெறுபேறுகள் உலகளாவிய போட்டித்தன்மை சுட்டெண் 2012 - 2013 கணிப்பில் பயன்படுத்தப்படவில்லை. இதனால் பூந்துணர்வின் நம்பகத்தன்மை மற்றும் ஏற்புடைய தன்மையை கேள்விக்குறியாக்குகின்றது.

ரான்ஸ்பரன்சி இன்ரநஷனலினால் கணிக்கப்படும் ஊழல் பூந்துணர்வு சுட்டெண் கூட முழுமையாக பூந்துணர்வை அடிப்படையாகக் கொண்டதாகும். பூந்துணர்வைப் பயன்படுத்துவதற்குச் சாதகமான வாதங்கள், ஊழல் போன்ற கருதுகோள்கள், சட்ட ரீதியாக தடை செய்யப்பட்டதாகவும் பெரும்பாலும் மறைக்கப்பட்ட நடவடிக்கையாகவும் இருக்கும் உண்மையை எடுத்துக்காட்டின. இதனால் இது பூந்துணர்வைத் தவிர வேறு வழிமுறைகளில் அளவிடுவது கடினம் என்று வாதிடப்படுகிறது. எனினும், ஊழல் பூந்துணர்வு சுட்டெண்ணிற்குப் பயன்படுத்தப்பட்ட பெர்ட்டில்ஸ்மன் பவுண்டேசன் ரான்ஸ் போர்மேசன் சுட்டெண் போன்ற சில மூலங்கள், இன்னொரு நிபுணரால் சுதந்திரமாக மீளாய்வுக்குட்படுத்தப்படும் நிபுணர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் மட்டும் தங்கியுள்ளது என்பது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். இதனால், முழு நாட்டிற்குமான தனிப்பட்ட ஒருவரின் கருத்தின் பிரதிநிதித்துவமானது கேள்விக்குரியதாகும். மறுபுறத்தில், பொருளாதார சுதந்திரச் சுட்டெண் போன்ற சுட்டிகள், வேறுபட்ட நிறுவனங்கள், செய்திகள் மற்றும் சஞ்சிகைக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்தான ஏற்கனவேயிருக்கும் இரண்டாந்தர தரவு மூலங்களுடன், கிடைக்கத்தக்கதாக இருக்கும் பேரண்டப் பொருளாதார தரவுகள் மீதான கணிய ரீதியான மதிப்பீட்டையும் தர ரீதியான மதிப்பீட்டின் இணைப்பையும் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட சில மாறிகளுக்கு புள்ளியைத் தீர்மானிக்கின்றன. இச்சுட்டெண்கள் தேவையான இரண்டாந்தர தகவலைப் பெற்றுக்கொள்வதற்கு அத்தகைய தகவலுக்குப் பொறுப்பான உள்நாட்டு அதிகாரசபைகளைத் தொடர்பு கொள்ளாமல், வெளிமூலங்களில் பெரும்பாலும் தங்கியிருப்பதனால், பயன்படுத்தப்பட்ட தகவலுக்கும், சுட்டெண் தொகுப்பிற்காக கவனத்திற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் கிடைக்கத்தக்கதாக இருக்கும் மிகப் பிந்திய நடைமுறைத் தரவுக்குமிடையில் வேறுபாடுகளை அவதானிக்க முடியும்.

### முன்னோக்கிய பாதை

மேற்கூறப்பட்ட பிரச்சனைகள் காணப்பட்ட போதும், உலகளாவிய பின்னணியில் இச்சுட்டெண்களில் பெரும்பாலானவை நன்கு விருத்தி செய்யப்பட்டிருப்பதனால், அத்தகைய சுட்டெண்களின் ஒப்பு நோக்கில் நாட்டின் நிலையை முன்னேற்றுவதற்கு கூடியளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். எனவே, இச்சுட்டெண்களின் உள்ளீடுகளான தரவு மூலங்கள் அல்லது தரவு வழங்குவோரை இனங்காண்பது முதற்படியாகக் கருதப்படலாம் என்பதுடன் முன்னேற்றம் தேவைப்படும் துறைகளைக் கண்டறிதல், கரிசனையுள்ள விடயங்கள் தொடர்பில் பதிலிறுப்புக்களை வழங்குதல் மற்றும் உலகளாவிய விதிகளிலிருந்தான குறிப்பிட்ட சில விலகல்களுக்கான விளக்கங்களை வழங்குவதற்குரிய வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளுதல் போன்ற குறிக்கோள்களுடன் இத்தொகுப்பாளர்களுடன் தொடர்ச்சியான உரையாடல்களை விருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இத்தகைய நடவடிக்கையானது, தொடர்பான

சுட்டெண்களில் இலங்கையின் புள்ளிகளை உயர்த்துவதற்குச் சந்தேகமின்றி துணைபுரியும். அதேநேரம், தொகுப்பின் போது உண்மைத்தன்மையில் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டால், அவையும் தொடர்பான அதிகாரிகளுடன் கலந்துரையாடப்படலாம் என்பதுடன், தேவைப்படும் பொழுது இற்றைப்படியான தகவலையும் வழங்கலாம். பயன்படுத்தப்பட்ட பூரணமற்ற தரவு மூலங்களைப் பூர்த்தி செய்வதற்கு மேலதிக நம்பகமான தரவு மூலங்களையும் பரிந்துரைக்க முடியும் என்பதுடன் தொகுப்பாளர்கள் அவர்களின் தொகுப்புச் செயன்முறையில் அவற்றையும் சேர்த்துக் கொள்ளமுடியும்.

இப்பிரச்சினைகளை முகங்கொடுப்பதற்கு இலங்கை மத்திய வங்கி சில படிமுறைகளை ஏற்கனவே எடுத்திருந்தது. உதாரணமாக, இலங்கையிலுள்ள வியாபார நிறைவேற்றுநர்களின் மன உணர்வுகளின் பொதுவான புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்வதற்காக வியாபார சமூகத்தினிடையே சுயாதீனமான அளவீடொன்றை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை இலங்கை மத்திய வங்கி இனங்கண்டது. இவ்வளவீடானது, உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண்ணின் தொகுப்பிற்கான முதலாந்தரத் தரவு மூலத்தை வழங்கும் அளவீட்டை ஒத்ததாகக் காணப்பட்டதுடன், ஏனைய பல சுட்டெண்களும் இவ்வளவீட்டின் வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளிலிருந்து தமக்குப் பொருத்தமான தகவலைப் பெற்றுக்கொண்டன. இலங்கை மத்திய வங்கி முயற்சியின் முக்கிய குறிக்கோள் யாதெனில், முன்னேற்றம் தேவைப்படும் துறைகளை அடையாளம் காண்பது அல்லது நாட்டின் உலகளாவிய போட்டித்தன்மை சுட்டெண் புள்ளிகளை உயர்த்துவதற்கு உதவக்கூடிய நாட்டின் பொதுவான போட்டித்தன்மையை அபிவிருத்தி செய்வதற்குரிய கொள்கை மாற்றங்களை அடையாளம் காண்பதாகும். இலங்கை மத்திய வங்கி மேலும் ஏனைய பல சுட்டெண்களின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் தரவு மூலமான உலக வங்கியின் வியாபாரம் செய்வதற்கான தரமிடலில் இலங்கையின் நிலையைக் கண்காணிப்பதிலும் ஈடுபட்டிருந்தது. இதன் பொருட்டு, இலங்கை மத்திய வங்கி உலக வங்கிக்கும் புள்ளியைத் தொகுப்பதில் பயன்படுத்தப்படும் மாறிகளுக்கான தகவலை வழங்கும் வேறுபட்ட ஆர்வலர்களுக்குமிடையே வசதிப்படுத்தும் தரப்பினராகச் செயற்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் வசதிப்படுத்துநர் வகிபாகமானது, சரியானதும் உரிய நேரத்திலும் தகவலை வழங்குதல், சிறந்த புள்ளியைப் பெறும் பொருட்டு முன்னேற்றப்பட வேண்டிய துறைகளைக் கண்டறிதல் மற்றும் மிக முக்கியமாக இத்தகைய செயற்பாட்டை விரைவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கையை எடுப்பதற்குப் பொருத்தமான அதிகாரிகளைத் தூண்டுதல் ஆகிய முக்கிய குறிக்கோள்களுடன் தொகுக்கும் அதிகாரசபை மற்றும் ஆர்வலர்கள் ஒரே தளத்தில் சந்தித்து கலந்துரையாடுவதற்கு அனுமதிக்கிறது.

ரூ.1,512 பில்லியனாகும். இதேவேளை ரூ.49 பில்லியன் கொண்ட மதிப்பிடப்பட்ட முதலீட்டுடன் மொத்தம் 52 கம்பனிகள் 2013ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டன.

**2013இல் அரச முதலீடு 13.9 சதவீத வீதத்தில் வளர்ச்சியடைந்து 2013இல் மொத்த முதலீட்டில் 23.2 சதவீதத்துக்கு வகைகூறி முதலீட்டை உயர் வீதத்தில் பேணுவதற்கான அரசாங்கத்தின் கடப்பாட்டை பிரதிபலித்தது.** நாட்டில் பொருளாதார வளர்ச்சியின் எதிர்கால போக்கை எடுத்தியம்பும் ஐந்து மையங்கள் கோட்பாட்டுடன் இணைந்து செல்லும் விதத்தில் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்து முன்னேறியது. அரச முதலீட்டுச் செயற்பாடுகள் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி அபிலாசைகளில் குவிந்து காணப்பட்டது. பொருளாதாரப் பணிகளிலான அரச முதலீடு பெரும்பாலும் தேசிய உட்கட்டமைப்பின் அபிவிருத்திக்காக நெறிப்படுத்தப்பட்டது. குறிப்பிடத்தக்க முதலீடானது வீதிகள், புகையிரதப் பாதைகள், துறைமுகங்கள், வலு மற்றும் சக்தி, மற்றும் நீர்வழங்கல் மற்றும் நீர்ப்பாசனம் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட்டது. பல உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களும் "கம நெகும" மற்றும் "மக நெகும" முன்னெடுப்புக்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன. சமூக உடகட்டமைப்பு மீதான செலவினம் 2013இல் கல்வி மற்றும் நலப் பணிகளிலான மூலதன உட்கட்டமைப்பின் மேம்பாட்டுக்காக நெறிப்படுத்தப்பட்டது.

## மூலவளங்களின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு

**பெயரளவு நியதிகளில் பொருளாதாரத்தில் கிடைக்கத்தக்க உள்ள மூலவளங்களின் அளவு ரூ.11,450 பில்லியனுக்கு தொடர்ந்து விரிவடைந்து, 2012இன் 14.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் 10.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து பொருளாதாரத்தில் இருந்தான கேள்வியில் அதிகரிப்பைப் பிரதிபலித்தது.** இவ்விரிவாக்கம் மொத்த உள்நாட்டு உற்பத்தியால் பிரதிபலிக்கப்பட்டவாறு உள்நாட்டு மூலவளங்களிலான அதிகரிப்பால் ஆதிக்கம் செலுத்தி உதவப்பட்டிருக்கையில் வெளிநாட்டு மூலவளங்கள் சிறிய வளர்ச்சியை பதிவு செய்தன. எனினும், குறிப்பிடத்தக்க

அட்டவணை 2.11 நடைமுறை சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்

| விடயம் | சதவீதப் பங்கு % | | சதவீத வளர்ச்சி % | |
|---|---|---|---|---|
| | 2012 (அ) | 2013 (ஆ) | 2012 (அ) | 2013 (ஆ) |
| **அ. மூலவளங்கள்** | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 73.3 | 75.8 | 15.8 | 14.5 |
| பொருட்கள் மற்றும் பணிகளினது இறக்குமதிகள் | 26.7 | 24.2 | 12.4 | 0.3 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **14.9** | **10.7** |
| **ஆ. பயன்பாடு** | | | | |
| நுகர்வு | 60.9 | 60.6 | 13.7 | 10.1 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 21.2 | 22.2 | 23.5 | 15.8 |
| தனியார் | 16.4 | 17.0 | 20.9 | 14.9 |
| அரசு | 4.8 | 5.2 | 33.6 | 19.2 |
| இருப்புக்களின் மாற்றம் | 1.2 | 0.3 | -31.3 | -77.5 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 16.7 | 17.0 | 14.7 | 12.6 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **14.9** | **10.7** |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

மெதுவடைவைப் பதிவு செய்த இறக்குமதிகளுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வளங்கள் இரண்டும் 2013இல் பெயரளவு நியதிகளில் ஒப்பீட்டளவில் குறைந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தன. இது, பொருளாதாரத்தினுள், கேள்வியைத் தக்கவைக்கும் உள்நாட்டு மூலவளங்களின் பங்களிப்பில் அதிகரிப்பை பிரதிபலித்தது. இதனால், உள்நாட்டு மூல வளங்கள் மூல வளக்கிடைப்பனவின் 75.8 சதவீதத்துக்கு வகைகூறுகையில் எஞ்சியவை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளூடாக வழங்கப்பட்டது. மேலும், உண்மை நியதிகளில் மொத்த மூலவளக் கிடைப்பனவு 2012இன் 4.6 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 5.1 சதவீதம் கொண்ட வீதத்தில் அதிகரித்து பொருளாதாரத்தில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் குறைந்த விலை மட்டங்களைப் பிரதிபலித்தது.

**உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலவளங்கள் இரண்டிலும் இருந்தான மூலவளங்களின் பாய்ச்சல் பொருளாதாரத்தினுள் நுகர்வு, முதலீடு மற்றும் ஏற்றுமதிகளுக்காக பயன்படுத்தப்பட்டது.** 2013இல் பயன்பாட்டிலான ஆகக்கூடிய வளர்ச்சி பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளில் பதிவு செய்யப்பட்டது. இது, மொத்த மூலவள பயன்பாட்டினுள் ஏற்றுமதிகளின் பங்கில் 17.0 சதவீத விரிவாக்கத்தை விளைவித்ததுடன் குறிப்பாக இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் வெளிநாட்டுத் துறையினரின் அதிகரிப்பைத் எடுத்துக்காட்டியது. இதேவேளை, மூலவளப் பயன்பாட்டினுள் முதலீட்டின் பங்கு மாற்றமின்றி தொடர்ந்திருக்கையில் நுகர்வின் பங்கு இவ்வாண்டில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்து மூலதன உருவாக்கச் செயற்பாடுகளில் வெளிநாட்டுக் கேள்வி மற்றும் மூலவளப் பயன்பாட்டிலான உயர் வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

வரைபடம் 2.7 2013இன் பொருளாதாரம் (நடைமுறைச் சந்தை விலைகளின்)




**மொத்த மூலவளங்களின் வழங்கலினுள் உள்நாட்டு மூலவளங்களின் பங்கு அதிகரித்தது.** உள்ளூர் மூலவளங்களிலான இவ்வதிகரிப்பு பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய உற்பத்தித் துறைகளாலும் உதவப்பட்டது. கைத்தொழில் மற்றும் பணிகள் துறை இரண்டினதும் பங்கு பெரும்பாலும் கட்டடவாக்கம் மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகளிலான விரிவாக்கம் காரணமாக 2013இல் ஒரு சதவீதப் புள்ளியால் வளர்ச்சியடைந்தன. உள்நாட்டு மூலவளங்களின் பங்கிலான அதிகரிப்புக் காரணமாக வெளிநாட்டு

அட்டவணை 2.12 நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்புக்கள்

| விடயம் | ரூ.மில்லியன் | | (%) மாற்றம் | | மொ.உ.உ.யின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 (அ) | 2013 (ஆ) | 2012 (அ) | 2013 (ஆ) | 2012 (அ) | 2013 (ஆ) |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 7,578,554 | 8,673,870 | 15.8 | 14.5 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 6,295,894 | 6,934,816 | 13.7 | 10.1 | 83.1 | 80.0 |
| தனியார் | 5,274,451 | 5,797,525 | 15.5 | 9.9 | 69.6 | 66.8 |
| அரசு | 1,021,443 | 1,137,291 | 5.6 | 11.3 | 13.5 | 13.1 |
| 3. முதலீடு | 2,318,253 | 2,565,498 | 18.3 | 10.7 | 30.6 | 29.6 |
| தனியார் | 1,794,619 | 1,969,068 | 15.8 | 9.7 | 23.7 | 22.7 |
| அரசு | 523,634 | 596,430 | 27.9 | 13.9 | 6.9 | 6.9 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 1,282,660 | 1,739,054 | 27.3 | 35.6 | 16.9 | 20.0 |
| தனியார் | 1,362,223 | 1,806,787 | 28.0 | 32.6 | 18.0 | 20.8 |
| அரசு | -79,563 | -67,733 | -39.5 | 14.9 | -1.0 | -0.8 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -1,035,593 | -826,444 | -8.8 | 20.2 | -13.7 | -9.5 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -154,925 | -234,910 | -115.1 | -51.6 | -2.0 | -2.7 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள் | 688,613 | 728,679 | 34.2 | 5.8 | 9.1 | 8.4 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 1,816,348 | 2,232,823 | 25.4 | 22.9 | 24.0 | 25.7 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

மூலவளங்களின் வழங்கல் பொருட்கள் மற்றும் பணிகளூடாக பிரதிபலிக்கப்பட்டு இவ்வாண்டில் இரண்டு சதவீதப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தது. மேலும், வெளிநாட்டு மூலவளங்களின் பங்கிலான வீழ்ச்சி குறிப்பாக பொருட்களில் அவதானிக்கப்பட்டு இம்மூலவளங்களை வழங்குவதில் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் அதிகரித்த செல்வாக்கைப் பிரதிபலித்தது.

## சேமிப்புக்கள்

**உள்நாட்டுச் சேமிப்புக்கள் 35.6 சதவீத வளர்ச்சியுடன் 2013இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 20.0 சதவீத வளர்ச்சிக்குத் தொடர்ந்து முன்னேறியது.** இது 2012இல் காணப்பட்ட சாதகமான அபிவிருத்திகளின் தொடர்ச்சியாகும். உள்நாட்டுச் சேமிப்புக்களிலான அதிகரிப்பு தனியார் மற்றும் அரச துறைகள் இரண்டாலும் உதவப்பட்டது. 2013இல் அரசின் குறைச்சேமிப்பிலான வீழ்ச்சியுடன் சேர்ந்து தனியார் சேமிப்புக்களிலான செழிப்பான அதிகரிப்பு பொருளாதாரத்தில் உள்நாட்டுச் சேமிப்புக்களின் மட்டத்தில் அதிகரிப்பைத் தக்கவைத்தது. உள்நாட்டுச் சேமிப்புக்களிலான இம்மேம்பாடு, 2013இன் ஏற்றுமதிகளின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளிலான குறிப்பிடத்தக்க குறைந்த வளர்ச்சியுடன் வர்த்தக நிலுவைப் பற்றாக்குறையை ஒடுக்குவதில் பிரதிபலிக்கப்பட்டது.

**உள்நாட்டுச் சேமிப்புக்களிலான மேம்பாடு தேசிய சேமிப்புக்களின் வளர்ச்சிக்கு உதவியது.** தேசிய சேமிப்புகள் 22.9 சதவீத வளர்ச்சியுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 25.7 சதவீதத்துக்கு முன்னேறியது. 2012ஐப் போல தேசிய சேமிப்புக்களிலான விரிவாக்கம் 2013இல் 5.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த தனியார் மாற்றல்களிலான தொடர்ச்சியான வளர்ச்சியால் தக்க வைக்கப்பட்டது. தொழிலாளர் பணவனுப்பல்களிலான அதிகரிப்பு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் புலம்பெயர்வில் ஏற்பட்ட அதிகரிப்பால் உதவப்பட்டது. இதேவேளை, தேசிய சேமிப்புகளிலான வளர்ச்சியைக் குறைத்த உயர் வட்டிக் கொடுப்பனவுகள் காரணமாக வெளிநாட்டிலிருந்தான காரணி வருவாய் தொடர்ந்து தேய்வடைந்தது. மேலும், மூலவள இடைவெளி 2012இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.8 சதவீதத்திற்கு தொடர்ந்து ஒடுங்கியது. மூலவள இடைவெளியின் இவ்வொடுக்கம் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை எடுத்துக்காட்டியது.